பிப்ரவரி - மார்ச்சு, 1998.
விலை ரூ. 10.

www.padippakam.com

# இருத்தல்

அமெரிக்கக் கறுப்பர்களோடும் அவர்களது விடுதலை முயற்சிகளோடும் இந்திய தலித் மக்களும் தலித் விடுதலையும் ஒப்பிடப் படுவது மாற்றுச் சிந்தனையுள்ளவர்களிடையே ஒரு முறைமையாய் வளர்ந்திருக்கிறது. ஒரு காலத்தில் வெள்ளையர்கள் கறுப்பர்களை மனிதர்களாகவே ஏற்க மறுத்ததும், படிக்கவோ எழுதவோ கற்றுக் கொள்ள முடியாத மனிதக் குரங்குகள் என அவர்களைப் புறக் கணித்ததுமாக— விலங்குகளைப் போல நடத்தப்பட்ட கொடுமையோடு விலங்குகளாகவே வகைப்படுத்தப்பட்ட கொடுமையையும் சேர்த்து அனுபவித்தவர்கள் கறுப்பர்கள்.

அமெரிக்கக் கறுப்பர்களும் இந்தியத் தாழ்த்தப்பட்ட மக்களும் எதிர்கொண்ட இழிவுகளும் வன்கொடுமைகளும் அவமானங்களும் ஒன்று போலவே இருந்தாலும், இருவரின் அடிப்படை இருத்தல்களும் ஒன்றல்ல. கறுப்பின மக்கள் இனத்தால், நிறத்தால், மொழியால், வடிவால், வெள்ளையர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதோடு அந்நியமானவர்களும்கூட. கறுப்பரை வெள்ளையர்கள் மத்தியில் எதனாலும் ஒளித்து வைத்துவிட முடியாத அளவு வேறுபட்டவர்கள். அவர்களுடைய நிறத்தை நீராலோ நெருப்பாலோ கழுவிவிட முடியாது. ஆகவே, கறுப்பர்களுடைய எழுச்சியும் கிளர்ச்சியும் அவர்களுடைய இனத்துக்காகவும் நிறத்துக்காகவும் பெருமிதம் கொள்வதாகவே இருக்க முடியும். கறுப்பாய் இருப்பதற்குக் கர்வம் கொள்வதொன்றே அவர்களின் தன்னுரிமைக்கான முதல் படியாய் இருக்க முடியும்.

இந்திய நாட்டைப் பொறுத்த வரை ஆதிக்க சாதியினருக்கும், அவர்களால் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அவமானப்பட்டுக்கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குமிடையே இனத்தால், நிறத்தால், மொழியால், வடிவால், அறிவுக்குப் பொருந்தும்படியான வேற்றுமை சிக்கல் இப்போதும் இல்லை; எப்போதும் இல்லை; காரணம் அவர்கள் இருவரும் அடிப்படையில் ஒருபடித்தானவர்கள். ஓரினத் தாய்மக்கள் என்பதுதான். இங்குள்ள ஒரேயொரு ஆதிக்க சாதியாளருடேயும் ஒரு தலித்தை வெகு எளிதாக ஒளித்து வைத்துவிட முடியும் என்பதுதான். —தொடர்ச்சி 9ஆம் பக்கம்.

இக்கட்டுரையின் 24ஆம் பக்கத் தொடர்ச்சி 84ஆம் பக்கம் பார்க்க:

படிப்பகம்

## கடிதங்கள்......

★ தமிழ்நாட்டில் தப்பிலித்தனம் பெருகி, தலைவர்கள் அருகிப் போய்விட்ட ஆற்றாமையால் டாக்டர் கிருஷ்ணசாமியைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறீர்கள் போல இருக்கிறது. அவரும் நீங்கள் எதிர்பார்த்தது போலப் 'புதிய தமிழகம்' படைக்க முன்கை எடுத்துவிட்டார். உடனடி அரசியல் ஆதாயத்தைப்பற்றிக் கவலைப் படாமல் மக்களை அவர் தன் பக்கம் திருப்பட்டும். வரலாறு ஒரு புதிய அத்தியாயத்தை எழுதிக்கொள்ளும்.

இளந்திரு, திருச்சி–2.

~ தோழர் அ. மார்க்ஸ் அவர்களின் விளக்கங்கள் நிறைய கேள்விகளைத் தெளிவுறுத்தி, மேலும் கேள்விகளை முன்னிறுத்துகிறது. என்போல் தொடக்கத்திலிருந்து வளரும் வாசகர்களுக்கு இது முக்கியமான கட்டுரை.

சாதிக் கலவரத்தின் வேர்களையும், அதன் பரவல்களையும் சரியாக இனங்கண்டு நிகழ் அரசியலில் அதைப் பிரதியிட்டு காட்டிய கட்டுரை இவ்விதழின் சிறப்பான தொகுப்பு.

தோழர் பொ. வேல்சாமியின் கட்டுரை தெளிவாய் பகுத்து விரிவாய் சிந்தனைகளைப் பதிவு செய்கிறது.

தீபன், ஆற்காடு.

★ 'கவிதாசரண்' மலர் சிறப்பாக இருந்தது. தனி மனித விமர்சனம் கொஞ்சம் அதிகமாகவே இருப்பதாகவே படுகிறது. இந்த இதழில் அக்னி புத்திரன் குறித்து.

''இஸ்லாம்'' அதன் கோட்பாடுகள்... யாரும், எந்த இயக்கங்களும் கண்டு கொள்வதே இல்லை. ஏன் என்றும் புரியவில்லை. பயமா? இல்லை தப்பான புரிதல்களா...? நமக்கேன் 'வம்பு' என்று அணுகாமல் இருக்கிறீர்கள் என்றுதான் படுகிறது. அணுகி ஆராய்ந்து இது பற்றியும் சிந்தனையைத் தூண்டும்படி எழுத வேண்டுகிறேன்.

''மண்காற்று'' அற்புதமாக வந்திருக்கிறது. ஜோதிவிநாயகம் பரிசு கிடைத்திருக்கிறது கதைக்கு. கண்மணிகுணசேகரனுக்கும் கவிதாசரணுக்கும் வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

∴பிர்தௌஸ் ராஜகுமாரன், கோவை-8.

படிப்பகம்

www.padippakam.com



★ அக்டோபர் – நவம்பர், 1997 இதழ் மிகவும் சிறப்பாக அமைந் திருந்தது.

வ. அ. இராசரத்தினம்- ஈழத்து வசன இலக்கியத்தின் மூலவர் கட்டுரை பல விஷயங்களை அறிந்து கொள்ள உதவியது. ஐரோப் பியர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டு, அவர்கள் நம் தாய் மொழி–தமிழ்மொழிமீது கொண்ட பற்றுதல் தெளிவாகத் தெரிகிறது.

கற்பனை வர்ணனைகளை ஒதுக்கி இயல்பான நடையில் படைக்கப்பட்ட மண்காற்று — கண்மணி குணசேகரன் பிறவி படைப்பாளி என்று எடுத்துக் காட்டுகிறது.

கவிதைகள் படிக்க திருப்தியாக அமைந்திருந்தன. குறிப்பாக 'பள்ளியின் கணக்கு வாத்தியார் பெருமை' நகைச்சுவை இழை யோட நடைமுறை செயல்பாட்டை விளக்கும் அர்த்தமுள்ள கவிதை.

'சாம்பிக் கனலும் சாம்பல்'– மொழி ஆற்றலும், அனுபவமும் இல்லாதவர் நடத்தும் பத்திரிகைகளுக்குத்தான் ஆசிரியர் குழு ஒன்று தேவை. 'கவிதாசரணுக்கு' அது தேவையில்லை என்பதே என் கணிப்பு.

'பின் நவீனத்துவமும் நானும்'– விற்பனையில் நூல்கள் சிறப் பிடம் பெற்றது என்பதைப் பெருமையாக நினைக்காமல், தான் படைத்த படைப்பினால் நுகர்வோர் எவ்வளவு பயன் பெற்றார்கள் என்பதையே கருத்தில் கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம்.

'கவிதாசரணில்' இடம் பெற்றுவரும் தலித்திய பிரச்சினைகள் பற்றிய கருத்தோட்டங்கள் சமீப காலமாக தலித் மக்களின் முன் னேற்றத்திற்கும் அவர்களின் விடுதலைக்கும் நல்ல பலன்களை அளித்து வருகிறது. 'தென்திசை முளைத்த செஞ்சுடர்' கட்டுரை நமக்கு 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் இதை எடுத்துக் காட்டு கிறது.

'அவைதிகப் பாரம்பரியத்தில் திராவிட இயக்கங்கள்' மிகவும் சிறப்பான கட்டுரையாக அமைந்துவிட்டது. பல விஷயங்கள் தெளி வாகப் புரிந்துகொள்ளும்படியாக இருந்தது. 'கவிதாசரண்' பக் கம் 78இல், 'அவைதிக மரபில் மட்டுமே மணிமேகலை போன்ற கணிகையரும்.........' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. காவியத் துறவியைக் கணிகையர் மணிமேகலை என்று கூறுவது வைதிகத் தில் ஊறிய ஆதிக்க ஆணின் வெளிப்பாடு. இதைக் கட்டுரையாளர் கவனிக்க வேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய தவறு தவிர்க்கப் பட வேண்டும்.

நாகலெட்சுமி, சென்னை–91.

படிப்பகம்

www.padippakam.com



★ உங்களது தர்க்க வலிமைமிக்க கூர்மையான உரைநடை ஏதோ ஒரு வகையில் விரயமாகிறதோ என்று சின்ன உறுத்தல். இனி வரும் இதழ்களில் படைப்பிலக்கியம் கூடுதலாக இடம்பெறும் என்ற அறிவிப்பு ஆறுதலளிக்கிறது. தனித்து நின்று வைராக்கியத்துடன் சிற்றிதழ்கள் நடத்தியவர்களெல்லாம் படைப்பிலக்கியத்திற்குக் கனிசமாக பங்களித்திருக்கிறார்கள்.

இந்த இதழில் பள்ளர் பறையர் வரலாறு பற்றி பருவெட்டாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். இரா.தேவ ஆசீர்வாதம் எழுதிய 'மூவேந்தர் யார்?' குருசாமிச்சித்தனின் 'தமிழ் இலக்கியத்தில் பள்ளர் (மள்ளர்) தேவேந்திரகுல வேளாளர்', கோவை தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மன்றம் வெளியிட்டுள்ள 'தமிழர் பண்பாட்டு வரலாறு' ஆகிய நூல்களை நீங்கள் படித்திருக்கக் கூடும். உங்கள் கருத்துக்களை ஆழமாகவும் ஆணித்தரமாகவும் சொல்ல அவையும் பயன்படலாம்.

பூமணி, சென்னை-10

★ முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூறிக்கொண்டு எழுதுபவர்கள் எல்லாம் ஒரு பொதுவான தவறான கருத்தையே கொண்டிருக்கிறார்கள், செட்டியூல்டு சாதிகளைப் பொருத்தவரை. மற்ற பொதுவான எழுத்தாளர்களும் அப்படியே.

''செட்டியூல்டு சாதிகள்'' என்ற பட்டம் போதாதென்று மேலும் பெருமை தரத்தக்க பட்டங்களாக நினைத்து ''தாழ்த்தப்பட்டவர், தீண்டத்தகாதவர், அரிசன், ஆதிதிராவிடர், தற்போது தலித்'' என்ற பட்டங்களை மேலும் மேலும் சேர்த்துக் கொண்டு போகிறார்கள். இவர்களுடைய நோக்கம் எதுவாக இருக்கும்? இம்மக்களைப் பெரும்பான்மை மக்களிடமிருந்து பிரித்து இழிவுபட்டவர்களாகக் காட்ட வேண்டும், கீழானவர்களாகக் காட்ட வேண்டும். பெரும்பான்மை மக்களை அவர்களின் சாதிகளைக் கொண்டு அடையாளம் காட்டுகிறபோது இம்மக்களை மட்டும் ஏன் அவர்கள் சாதிகளை விடுத்துப் பொதுப் பட்டங்களால் அழைக்க வேண்டும்? தேவேந்திர குல வேளாளர்களை வேறு சாதிகளுடன் இணைத்துப் பொதுப் பெயர்களால் அழைக்கும் போது எங்களது போராட்டங்களும், வரலாறுகளும், பண்பாடுகளும் மறைக்கப்படுகிறது. மற்ற சாதிகளின் இழிவுகள் எங்களையும் தொற்றிக் கொள்கிறது. இது தேவையா? தலித் என்றால் யார் என்று தெரியவில்லை. எங்களுக்குத் தெரியாமலேயே, நாங்கள் விரும்பாமலேயே, நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தும்கூட நாங்கள் தலித்தாக்கப்படுகிறோம். நீங்கள் தலித் என்று சொல்லிவிட்டீர்கள். மற்றவர்கள் தலித் கலை, தலித் இலக்கியம், தலித் பண்பாடு என்று எங்களுக்கில்லாதவை

படிப்பகம்

www.padippakam.com

களை எங்கள் மீது திணிப்பார்கள். (ஒழுங்கு மீறுவது, பறையடிப்பது, மது அருந்துவது, மலம் அள்ளுவது, மாட்டுக்கறி சாப்பிடுவது, இன்னும் இருக்கிற உலக அசிங்கம் என்று கூறுகிற அனைத்தையும்) இது எங்களுக்குத் தேவையா?

தேவேந்திர குல வேளாளர், அருந்ததியர், பறையர் என்ற சாதிகளை மட்டுமே ஒப்பிட்டுக் கூறுவதேன்? பொதுமைப்படுத்திக் கூறுவதேன்? தேவேந்திரர் ஆரிய வர்ணமாகத் தோன்றுவதேன்? மற்ற சாதிகளிலுள்ள ஆரிய வர்ணம் இந்த முற்போக்குவாதிகளுக்கு விளங்காதது ஏன்? தம்தம் சாதிகளில் இந்தக் கொள்கைகளை பிரசாரம் செய்யாதது ஏன்?

எங்கள் 'தேவேந்திரர்' என்பதற்கும் ஆரியத்திற்கும் தொடர்பில்லை. எங்கள் தேவேந்திரர், இந்திரர், வேந்தன், மருத நிலத் தலைவன், மள்ளர்.

செட்டியூல்டு சாதிகள் என்பது 50-60 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சொற்றொடர். அதற்கு முன்னும் பின்னும் ஒவ்வொரு சாதியும் தங்களது தனிச் சாதிப் பெயராலேயே அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றனர். எங்களுக்கும் பறையருக்கும், எங்களுக்கும் அருந்ததியருக்கும், எங்களுக்கும் பார்ப்பனருக்கும், எங்களுக்கும் வன்னியருக்கும், எங்களுக்கும் முக்குலத்தாருக்கும், எங்களுக்கும் நாடாருக்கும், எங்களுக்கும் முதலியார்களுக்கும் எங்களுக்கும் மற்ற சாதிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் ஒன்றே. அதேபோல்தான் மற்ற சாதிகளுக்குள்ளும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள். இதில் மள்ளர், அருந்ததியர், ஆதிதிராவிடர் சாதிகளை மட்டும் பிரித்து ஒற்றுமை வேற்றுமைகளைப் பேசுவதேன்? வேற்றுமைகளை மறந்து ஒன்றாக வேண்டும் என்ற உபதேசம் ஏன்? தலித் என்ற அனாதைகளாக, அடையாளமற்றவர்களாக இழிவானவர்களாக மாற வேண்டும் எனற உபதேசம் ஏன்? உலகத்தோடு ஒட்ட ஒழுகல், உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்பதெல்லாம் ஆரியமா? தமிழர்களுக்கு இல்லையா? இச்சாதிகள் உயர்ந்தோர் இல்லையா? எதற்கும், எதையும் ஏன் ஆரியத்தோடு இணைத்துப் பேசுகிறார்கள்? எங்கள் மள்ளர் என்னும் தேவேந்திர குல வேளாளர் சாதியைவிட உயர்ந்த சாதி எதுவும் இல்லை; தாழ்ந்த சாதியும் எதுவுமில்லை. ஆரியத்தை வீணாக இந்தப் பிரச்சினையில் இழுக்க வேண்டியதில்லை. இங்குள்ள ஆதிக்க சாதிகளுக்கும் சுரண்டல் சாதிகளுக்கும் எங்களுக்கும்தான் போர். அவர்களும் தமிழர்களே, திராவிடர்களே.

தேவேந்திரர் போராட்டத்தை தலித் போராட்டமாகக் காட்டும் போது போராட்டம் மழுங்கடிக்கப்படுகிறது. வீரியத்தை இழக்கி

படிப்பகம்

www.padippakam.com



றது; தோல்வியடைகிறது. இரண்டாண்டு காலமாக தேவேந்திரருக்கும் கள்ளர் - மறவருக்கும் நடந்த போராட்டம் தலித் போராட்டமாகச் சித்தரிக்கப்பட்டு பலனற்றுப் போயிற்று. கள்ளர் – மறவர் தாங்கள் கேட்டதை அரசிடமிருந்து பெற்றனர். தேவேந்திரருக்குப் பேருக்குக்கூட எதுவும் கிட்டவில்லை. "தேவேந்திரகுல வேளாளர்" என்ற பொதுப் பெயர் வைக்க வேண்டும் என்ற செலவில்லாத கோரிக்கைகூட மறுக்கப்பட்டுள்ளது.

தமிழக வரலாற்றில் சாதிகள் தனித்து தங்கள் சாதி அடையாளத்துடன் போராடித்தான் வெற்றி பெற்று சமூக அந்தஸ்தும் அங்கீகாரமும் பெற்றுள்ளார்கள். உதாரணமாக:

1. சாணார், நாடார் சென்ற நூற்றாண்டிலிருந்து நடத்திய போராட்டம்.

2. கள்ளர் – மறவர் 'குற்றப்பரம்பரை' பட்டியலை நீக்கப் போராடிய போராட்டம்.

3. வன்னியர் போராட்டம்.

அதுபோலவே தேவேந்திரகுல வேளாளர் தனித்துத் தன் அடையாளத்துடன் போராடியே விடுதலை பெறமுடியும்; விரைவில் பெறமுடியும். தலித்துகள் இதையுணர்ந்து எங்களை தலித்திலிருந்து விட்டுவிட வேண்டுகிறோம். எங்களது போராட்டங்களை எங்களது போராட்டமாகவே அடையாளப் படுத்த வேண்டுகிறோம். தலித் பூச்சு சேற்றைப் பூசுவதாக உள்ளது. எங்களது தலைவர்கள் தேவேந்திரர் தலைவர்களாக, ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட மக்களின் தலைவர்களாக, தமிழர்களின் தலைவர்களாக, இந்தியர்களின் தலைவர்களாக உருவாவதையே நாங்கள் வேண்டுகிறோம். சேற்றில் தள்ளி விட்டுவிட்டுப் பிறகு கழுவுகிறேன் என்ற கூத்து வேண்டாம்.

எங்களது இரண்டு புத்தகங்களும் 'மள்ளர் மலர்' இருக்கின்ற இதழ்களும் தனியாக அனுப்பியுள்ளேன். மள்ளர் என்னும் தேவேந்திரகுல வேளாளர் பற்றிய வரலாறுகள், பண்பாடுகள், பள்ளி, கல்லூரி வரலாற்றுப் புத்தகங்களில் இடம் பெற வேண்டும். உங்கள் கவிதாசரணில் இந்தப் புத்தகங்களைப் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். எங்கள் இழிவுகளைப் பற்றி பலபேர் நிறையவே எழுதிவிட்டார்கள். (With a sense of proportion) எங்கள் பெருமைமிக்க வரலாறுகளும் பண்பாடுகளும் இனிமேல்தான் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். உங்கள் குழுவில் இதுபற்றிய கலந்துரையாடல், விவாதம் வர விரும்புகிறேன்.

குருசாமி சித்தன், கோவை–46

படிப்பகம்

www.padippakam.com

**ஆசிரியர் குறிப்பு:**

நண்பர் குருசாமி சித்தனின் இந்தக் கடிதம் என் கைக்குக் கிடைத்த போது, செர்பியக் குடியரசுத் தலைவரின் துணைவியாரும் பேராசிரியருமான மீரா மார்கோவிச் எழுதிய 'இரவும் பகலும் என்னும் நூலில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியைப் படித்துக் கொண்டிருந்தேன். அதைவிடவும் படித்து வியந்து கொண்டிருந்தேன் என்றே சொல்ல வேண்டும். காரணம் 5 ஆண்டுகளுக்கு முன் 'கவிதாசரண்' வெளியிட்டு வந்த 'நாற்று' பகுதிக்கு நான் எழுதி வைத்திருந்த ஒரு குறிப்பு அதனுடன் முற்றும் ஒத்துப் போனதுதான். அந்தக் குறிப்பு இது: "கடந்த காலம் என்பது எப்போதும் குப்பைதான். விவேகம் உள்ளவன் அதை உரமாக்கிக் கொள்வான். வீணாகிப்போகிறவன் அதை உயிர்ப்பிக்க முயல்வான். கடந்து போன பொற்காலங்கள் யாவும் ஊமைகளின் புதை மேட்டில் எழுப்பப்பட்டவை என்பதைக் கற்க மறுக்கிறவன் நிகழ் காலத்தை நரகமாக்குகிற எதிர்கால விரயம்."

நான் படித்துக் கொண்டிருந்த மீரா மார்கோவிச்சின் குறிப்பு இது:

கடந்த காலம் எப்படியிருந்த போதிலும், நல்லதாக இருந்த போதிலும், சிறந்ததாக இருந்த போதிலும் அது கடந்த காலம் தான். கடந்து முடிந்த காலம் ஒரு தனி நபருக்காயினும் சரி, மொத்த சமூகத்துக்காயினும் சரி, திரும்பி வர முடியாதது. அப்படியே திரும்பி வர சாத்தியமிருந்தாலும் அது நல்ல விஷயமாக இருக்காது. தனி நபர்களுக்கும் தேசங்களுக்குமான முன்னேற்றத்தை, பயன்பாடு இழந்து போன, முடிந்துபோன ஒன்றின் பலத்திலிருந்து ஈட்ட முடியாது. முன்னேற்றம் என்பது புதிய சிந்தனைகளையும் எதிர்காலத்தையும் சார்ந்து இருக்கிறது.

கடந்த கால நல்ல நாட்களை நினைத்த நப்பாசையில் பழங்காலத்தில் மக்கள் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார்கள் என்பது தற்போது வாழும் காலத்தவர்களுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட நப்பாசையில் வாழ்ந்ததனால் வெற்று முயற்சிகளுக்கும் வெற்று நம்பிக்கைகளுக்கும் கடந்த யுகங்களில் அதன் சமகாலத்தவர்கள் எவ்வளவு பலியானார்கள் என்பது நமக்குத் தெரியாது... இந்த 'கடந்த காலத்திற்குத் திரும்புவதற்கான' வேட்கையின் விளைவாக நாம் முன்பு அனுபவித்த துன்பங்களும் துயரங்களும் ஏராளம். நம் சரித்திரத்திலும் இலக்கியத்திலும் பதிவு செய்யப்பட்டிருப்பது இதன் ஒரு சின்னஞ்சிறு பகுதிதான்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் பழமைக்குத் திரும்பும் ஆசையிலுள்ள உள்ளார்ந்த குறைபாடு என்னவென்றால் கடந்த காலம் வெறுமனே திரும்பி வராது என்பது மட்டுமல்ல; மாறாக அது கடந்த காலத்தைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான பார்வையை வழங்கவும் செய்யும். கடந்த காலம் திரும்பி வரவேண்டுமென்று விரும்பும் மக்கள் அதன் நல்ல அம்சங்களைப் பற்றி மட்டுமே நினைக்கிறார்கள். அதன் பாதகமான பகுதிகள் அசிங்கம் என்று சொல்ல முடியாவிட்டாலும்கூட, முற்றிலும் அலட்சியப் படுத்தப்படுகின்றன. இந்த சரித்திரத்திற்குப் புறம்பான திரித்து கூறப்பட்ட 'நேற்றின் சித்திரம்', 'நாளைக்'கான மாற்றாக முன் வைக்கப்படும்போது விளைவு மிக மோசமானதாகவும், எல்லா முன்னேற்றமும் தடைப்பட்டுப் போவதுமாக விளையும்.

மீராவின் வேறொரு குறிப்பு:

## உலக ஒழுங்கு

உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பிறர் தேவைப்படுகிறார்கள். மக்களுக்கிடையே பரஸ்பரத் தொடர்பு அவசியம். நாடுகளுக்கிடையேயும் இது போன்ற பிணைப்பு அவசியம். ஆனால் இந்தத் தொடர்பு பட்டு இழைகளால் ஆனது போன்ற மென்தன்மையுடன் இருக்க வேண்டுமே தவிர இரும்புச் சங்கிலிகளால் ஆனது போன்ற முரட்டுத் தன்மையுடன் இருக்கக் கூடாது. ஒழுங்கு என்ற சொல் மிகக் கடுமையான ஒன்று. பொதுவாக இது போர் விமானங்களின் உறுமும் இயந்திரங்களுடனும், காலாட்படையின் இடி முழக்க இரைச்சலுடனும், இரும்புச் சங்கிலிகள் உராயும் ஓசையுடனும் சம்பந்தப் பட்டிருக்கிறது. ஆனால் உலக நாகரிகம் என்பது வேறொரு விஷயம். அனைத்து நாடுகளின் தொழில் நுணுக்க, அரசியல், கலாச்சார அனுபவங்களினால் அது நிறுவப்படும். அவற்றின் சமமான, பரஸ்பர உறவுகளின் அடிப்படையில் அது வேரூன்றும். மக்களும் நாடுகளும் பரஸ்பரம் பட்டு இழைகளினால் பிணைக்கப்படும்போது உலக நாகரிகம் தழைத்தோங்கத் தொடங்கும்.

படிப்பகம்

www.padippakam.com



முன் அட்டைத் தொடர்ச்சி–

## இருத்தல்

இந்த உண்மையைத் தாழ்த்தப்பட்ட மக்களும் தலித்தியக் கோட்பாட்டாளர்களும் எந்த அளவுக்குத் தங்களின் முகப்பு வாசகமாகக் கவனம் கொண்டிருக்கிறார்கள் என்பது இங்கு முக்கியமான கேள்வியாகிறது. தலித் பிரச்சினையில் அக்கறை கொள்ளும் தலித்துகளாயினும் தலித் அல்லாதவராயினும்—தலித் மக்கள் ஏதோ மனிதர்களாய்ப் பரிணாமப்பட்ட ஆதி நாளிலேயே தலித் முத்திரையோடு படைக்கப்பட்டவர்கள் என்பது போன்ற மெய் மறந்த கற்பனையால் அடித்துச் செல்லப்படுகிறார்களோ என்பதும் நமது கேள்வியாகிறது. இந்த மெய்மறப்பிலுள்ள ஆபத்து அல்லது அபத்தம்— அப்படி தலித் முத்திரையோடே வாழ்வது ஒன்றும் பாவமல்ல, மாறாக பவித்திரமானது என்று மறு கட்டமைப்புச் செய்வதாகிறது. இதை, தலித்துகள் தன்னெழுச்சியாக முன்னெடுக்கும் கலகங்களின் முற்றெல்லையாக்குவது மூளை அரிப்பெடுத்த தலித்திய விடலைச் சித்தாந்திகளுக்கு வேண்டுமானால் ஒரு தீர்வாகத் தென்படலாம். கலகம் செய்வது மீட்சிக்காகத்தானே தவிர கலகத்தையே தலித்துகளின் நிரந்தர வாழ்க்கைப் போக்காகவும் வாழும் வழியாகவும் கட்டமைப்பதற்கல்ல.

ஒரு கருத்தரங்கு. மாற்றுச்சிந்தனையுள்ளவர்களின் கூட்டம். தலித் சிக்கல் பற்றிய பேச்சு. கலந்துகொண்டோர் அதிசயமாக நூற்றுக்கும் மேல். அவர்களை எண்ணிக்கொண்டே வந்தபோது எனக்குத் தோன்றிய ஒரு விநோதமான ஆசை. இதில் எத்தனை பேர் தலித்துகளாய் இருப்பார்கள்? நானாக ஒரு மூன்று பேரை எனக்குச் சரியெனத் தோன்றிய விதத்தில், "இவர் பறையர், இவர் பள்ளர், இவர் சக்கிலியர்," என்று மனதில் குறித்துக் கொண்டேன். கூட்ட முடிவில் என் அனுமானத்தைச் சரிபார்க்க எண்ணி, அவர்களைப் பற்றிய விவரங்களை வலிந்து சேகரித்த போது எனக்கு ஆச்சரியம்; அவர்களில் ஒருவர்கூட தலித் இல்லை. என்னால் பறையராகக் கருதப்பட்ட நண்பர் ஒரு பண்டார சன்னதியின் மகனாகவும், பள்ளராகக் குறிக்கப்பட்டவர் தெற்கத்திப் பிள்ளைமார் வீட்டு வாரிசாகவும், சக்கிலியர் என்று கணிக்கப்பட்டவர் சிதைந்து போன ஒரு அரச வம்சத்துக் கடைசிக் கொழுந்தாகவும் இருந்தனர். இதுபோலவே நான் இன்னும் சிலமுறை முயன்றிருந்தாலும் தலித் இளைஞர்களை அடையாளம் கண்டிருக்க முடியாது என்றே தோன்றியது. அப்படியே கண்டாலும் அது குருட்டாம் போக்காய்த்தான் இருந்திருக்கும். (ஒருவேளை நியதிகளைப் பராமரிக்கும் சிற்றூர்களில் வேண்டுமானால் தலித்துகளைப் பிரித்தறியும் சில மேம்போக்கான அடையாளங்கள்

படிப்பகம்

www.padippakam.com


கிடைத்திருக்கக் கூடும்.) அதைவிட அதிசயம், நான் அனுமானித்த மூவரின் உண்மையான சாதி அடையாளங்கள், தலித்துகளின் வரலாற்று ரீதியான பழைய அடையாளங்களாக நான் எவற்றைக் கேள்விப்பட்டிருந்தேனோ– அவற்றோடு பொருந்திப் போனதுதான். ஆம். இன்றைக்குத் தாழ்த்தப்பட்டவர்களாய் அறியப்படுகிறவர்கள் ஒரு காலத்தில் சமூகத்தின் மதிப்புமிக்க குழுவினராய் இருந்தவர்கள் என்பதை அவர்களும் நம்புகிறார்கள்; ஆய்வுகளும் அதற்கு அனுசரணையாய் உள்ளன.

குறிப்பாகத் தமிழ் மண்ணில், அரசியல், சமூகம், பொருளாதாரம் சார்ந்த நெருக்கடியான வெவ்வேறு கால கட்டங்களில் சமூகக் குழுக்களிடையே இவ்வாறான ஏற்ற இறக்கங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் உள்ள கவனத்திற்குரிய அம்சம், ஒரு குழு இறக்கம் பெறுவது எவ்வளவு சாத்தியமோ, அவ்வளவு சாத்தியப்பாடு இறக்கத்திலுள்ள குழு ஏற்றம் பெறுவதற்கும் இருந்திருக்கிறது என்னும் நெகிழ்வுத் தன்மைதான். நடைமுறையில், இறக்கம் பெற்ற குழு ஏற்றம் பெறுவது அவ்வளவு எளிதானதல்ல என்றாலும், அப்படி ஏற்றம் பெறுவதைக் குற்றம் என்று விதி செய்யும் அளவுக்குக் கெட்டி தட்டிப்போன மூடிய சமுதாயமாக இன்றுவரை தமிழினம் தன்னைப் பிரகடனப் படுத்திக் கொள்ளவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

பார்ப்பனர் வருகைக்கு முன்னரே இங்கு சாதிகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 'ஜாதிகள்' தாங்கும் இன்றைய பொருளில் அல்லாமல், 'வகைகள்' என்னும் பொருளில் கொண்டால் மக்களின் சமூக வளர்ச்சிக் கூறுகளில் ஒன்றாக அத்தகைய வகைப் படுத்தல் இருந்திருக்க வேண்டும். உலகில் வேளாண் தொழில் தோன்றிய இரண்டு மூன்று நிலப் பகுதிகளில் நமது தென்னகம் முதன்மையானது என்று சொல்வார்கள். இதை நாம் பெருமைக்காக என்றில்லாமல் உண்மைக்காகவே ஏற்றுக் கொள்ளலாம். 'தெற்கு' என்னும் திசைப் பெயரே தோன்றுதல் (தென்படல்) என்னும் பொருளடியாகப் பிறந்ததுதான். வேளாண்மை என்பது தாளாண்மை(முயற்சி)யின் விளைவு. முயற்சியே அறிவின் திறவுகோல். அதனை அடையத் தெரிந்தவனே வேளாளன், அறவோனாய் இருப்பவனே அந்தணன் என்பது போல. இவையிரண்டுமே இன்று கனவியல் கருத்தாகச் சுருங்கிப்போய், இரண்டு சுயநலக் குழுக்களின் திருட்டுப் பெயர்களாகி, சமூகச் சமன்நிலையைப் பலி கொண்டுவிட்டன என்பதுதான் பிரச்சினையின் மூலமே.

தமிழ் நிலத்தை குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகைப்படுத்தி, ஒவ்வொன்றுக்கும் முதற்பொருள், கருப்

படிப்பகம்

www.padippakam.com



பொருள், உரிப்பொருள் என்றெல்லாம் துல்லியமாக இலக்கணம் வகுத்திருப்பதிலிருந்து, நிலமும் நிலம் சார்ந்த தொழிலும் மனிதர்களைக் கூறுபடுத்தியிருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இந்தக் கூறுகள் மாற்றப்பட முடியாத மந்திரங்களாகி மனிதர்களைப் பிரித்து வைத்ததாகச் சான்றுகள் ஏதுமில்லை என்பதோடு, மனிதர்களிடையேயான புறவேறுபாடுகளின் முரண்பாடுகள் பாராட்டப் படவில்லை என்பதும் முக்கியமாகிறது.

இம்மக்களில், மருத நிலத்தார் நிலையான வாழ்வும் நிலம் சார்ந்த வளமும் பெற்றவர்களாயினர். பிறருக்கு ஈத்துவக்கும் இன்பம் அவர்களுக்கு வாய்த்தது. ஈதல் ஓர் உவகை தரும் இன்பமாய் இருப்பது, இரந்து நிற்பவனிடம் எதையும் எதிர்பார்க்காத வரைதான். ஈகையே ஒரு கொள்முதல் பலமாக உணரப்படும் போது வசதி படைத்தவன் வழி காட்டுகிறவனாகிவிடுகிறான். அது காரணமாகவே தன் ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் அறிவியல், பொருளியல், அழகியல், அறவியல் சார்ந்த வாழ்வியலை வகுக்கும் கருத்தியல் தலைமையைத் தனதாக்கிக் கொள்கிறான். தமிழ்ச் சமுதாயத்தில் வேளாளன் தலைமகனானதும், மற்றவர்களின் வளர்ச்சி எல்லை வேளாளன் ஆவதுதான் என்று நம்பியதும் இப்படித்தான். இந்த நம்பிக்கையே தமிழினம் தொழில் சார்ந்த வகைப்பாடுகளுடன் கூடிய திறந்த சமுதாயமாய் இருந்ததற்கான சான்று. அதிகாரம் செய்வதும் ஆதிக்கம் செலுத்துவதும் பிச்சைக்காரனுக்குக்கூட பிரியமான விஷயங்கள்தாம் என்னும்போது செல்வம் பெருத்தவன் அதைச் சுவைக்கத் துடிப்பதும், அதனால் வசதியுள்ளவன் – வக்கற்றவன் என்னும் வர்க்க வேறுபாடு கூர்மைப்படுவதும் தவிர்க்க முடியாதவை. எனினும் பாலை நிலத்து ஆறலைக் கள்வரும் ஒருநாள் தாளாண்மை மிக்க வேளாளராகலாம் என்னும் கருத்தியல் நிலைப்பாடு கேள்விக்குள்ளாகவில்லை. இனக் குழுக்களை உயர்ந்தவர்– இழிந்தவர் என்று பிளந்து அந்நியப்படுத்தி அவமதிக்கலாம் என்னும் 'பூசுர ஞானமும்' அதுவரை விதைக்கப் படவில்லை.

அப்படிப்பட்டதொரு சிலுவைப்பாடான காலகட்டத்தில்தான் தமிழகத்தில் பார்ப்பனர் வருகை சம்பவித்தது. அவர்கள் ஒன்றும் வெற்றாள்களாய் வரவில்லை. நடைவழிக்குத் துணையாகப் பசுமாட்டையும், மண்டை வழியவழிய சனாதன மதத்தையும் வர்ணாசிரம தர்மத்தையும், பார்வதி தனது மேனி அழுக்கைச் சுரண்டியெடுத்துப் பிடித்துவைத்த பிள்ளையார் மாதிரி இனி எப்போதும் முன்பந்தி கேட்கப்போகும் 'தீட்டு' என்னும் துட்ட மனச்சேட்டையையும் கனக்கக் கனக்கச் சுமந்துகொண்டு வந்து இறக்கினர்.

படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் வருகையின் ஏற்புச் சின்னமாய் இனக்குழுக்களின் இயல் முறை வகைப்பாடுகள் 'ஜாதி'கள் என்னும் அந்நியப் பெயரோடும் அதற்குரிய மந்திர உச்சாடனங்களோடும் புனைவு பெறலாயின.

இங்கு, தொன்மை வரலாறும் கொஞ்சம் துருவப்பட வேண்டும். ஆரியர் வருகைக்கு முன்னரே இந்தியாவில் வாழ்ந்து வந்த மக்கள் நர்மதை ஆற்றைக் குறுக்கெல்லையாகக் கொண்டு வடபுலத்தார், தென்புலத்தார் என இரு கூறுகளாகப் பிரிந்து விட்டனர். அடிப்படையில் அவர்கள் இருவரும் ஒரே அடையாளமுள்ளவர்களே — அதாவது திராவிடர்களே. இதற்குச் சான்றாக நிறைய சொல்லலாம். வடபுலத்து மொழிகளான பிராகிருதமும் பாலியும் ஆதியில் தமிழின் எழுத்துருவையே பயன்படுத்தியுள்ளன. தமிழின் பல சொற்றொடர்களும், சில சங்கப் பாடல் வரிகளுமே கூட அப்படியே வடபுலத்து மொழிகளில் காணக்கிடைக்கின்றன. வடபுலத்து தொல்குடிகளிடையே நேரிய தமிழ்ச் சொற்களும், பண்பு வழக்குகளும் உருவமைதியும் காணப்படுவதோடு, அவர்கள் திராவிடர்களாகவே அறியப்படுகிறார்கள். ஆரியர்கள் இருவரையுமே வென்றார்கள்— வடபுலத்தாரை இடைவிடாத போரின் மூலமும், தென்புலத்தாரை கலாச்சார ஊடுருவல் மூலமும்.

வெள்ளை ஆரியர்களுக்கும், கறுப்புத் திராவிடர்களுக்கும் இடையே அவர்கள் ஒருவரையொருவர் எதிர்கொண்ட காலத்தில் இன வேற்றுமை வெகு துல்லியமாய் உணரப்பட்டிருக்கும். இம் மண்ணையே தங்கள் இருப்பிடமாக்கிக்கொள்ள முடிவெடுத்த ஆரியர்கள், இங்குள்ள மக்களோடு இனக்கலப்பு செய்து கொள்ளவும், அவர்களின் பண்பட்ட வாழ்வியல் திறன்களைத் தம்வயப்படுத்திக் கொள்ளவும், உழைப்பை முதன்மைப்படுத்தும் அவர்களிடம் அறிவை உறைத்துப் பார்க்கிறவர்களாய்த் தங்களின் உயர் மேலாண்மையை நிலைப்படுத்தவும் முனைந்து, அவற்றுக்காகப் போரிட்டு, வென்று, தோற்று, தோல்வியையே வெற்றியின் இன்னொரு கண்ணியாக்கி— இந்திய மண்ணில் அவர்கள் படைத்து வளர்த்திருப்பது நிகரற்ற மனித வரலாறுதான்; ஆனால் முற்ற முழுக்கவும் தன்மயமான, தன்னெடுப்பான, சூழ்ச்சித் திறம் கொண்ட கொடிய வரலாறு. ஆரியர்கள் ஓடும் நீரைப் போல. திராவிடர்கள் வேரில் நிலைத்த தாவரம் போல. வெல்லும் சாகசங்களே ஆரியப் பண்புகளாயின. வெற்றுப் பெருமிதங்களே திராவிடச் சீர்குலைவுகளாயின. அறிவு என்னும் ஆறாவது புலனுக்கு மனம் ஒரு கிளை தான் எனினும், அந்த மனப்புலனை மகத்துவப்படுத்தி, அதற்கு அறிவால் கரை கட்டத் தெரிந்தவர்கள் ஆரியர்கள். இனக்கலப்பை அவர்கள் தம் குழு நலன் கருதியே செய்தாலும், அதன் விளைவு

படிப்பகம்

www.padippakam.com



களையும் அறிந்தே இருந்தார்கள். அமெரிக்காவில் வெள்ளையரும் கறுப்பரும் கலந்து புதிதாக ஒரு பழுப்பினம் தோன்றி வளர்வதை இதற்கொரு பிற்சான்றாகக் கொள்ளலாம். வெள்ளையும் பழுப்பும் கலந்தால் வெண்பழுப்பும், பழுப்பும் கறுப்பும் கலந்தால் கரும்பழுப்பும் என நிறங்கள் பன்மைப் படும். இந்தப் பன்மையுள் வெண்மையே முதன்மை எனக் காட்டும் வர்ணாசிரம தர்மத்தை வகுத்து, மனிதர்களை பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் எனப் படிநிலைப் படுத்தினர்.

இன்று அந்த நிறமெல்லாம் தொலைந்துவிட்டது. சாலப் போக்கில் வெள்ளைக்கும் கறுப்புக்குமிடையே பல்லாயிரம் நிறத் தீற்றல்கள் பல்கிப் பெருகி, மூல நிறங்களே வீரியமற்றுப் போயின. ராகுல சாங்கிருத்தியாயன் சொல்வது போல், ஒரு சக்கிலியர் வீட்டுப் பிள்ளை நல்ல சிவப்பாகவும் ஒரு சாஸ்திரி அகத்துப் புத்திரன் அட்டைக் கரியாகவும் இடம் மாறிப் பிறக்கும்படியான முற்றக் கலந்த கலப்பு நிலைதான் இன்றைக்கு. இப்படிக் கலந்து போவதையும்கூட முன்கூட்டியே கணித்திருந்தார்கள் என்பதை, வர்ணாசிரம தர்மத்திற்கு அவர்கள் வழங்கியுள்ள இன்னொரு பரிமாணம் தெளிவுபடுத்துகிறது. அதாவது வர்ணாசிரமத்தை சனாதன மதத்தோடு பிணைத்து, பிரம்மனின் தலையில் பிறந்த பிராமணர்களாகத் தங்களை உச்சப்படுத்தி, மற்றவர்களை தோல், துடை, அடி-யில் பிறந்தவர்களாக இறக்கிக் கற்பித்து வைத்தார்கள். மதம் மனிதர்களை மீட்பதற்கல்ல என்பது ஒரு நாத்திகனைவிட அவர்களுக்கு நன்றாகவே தெரியும். பட்டியலில் முற்றுப்பெறாத பல்லாயிரம் கடவுளர்களும், கடவுளைச் சார்ந்த மதங்களும் மனிதனுக்குள் அடங்காத மனவெளியின் மகா அற்புதமான கற்பிதங்கள் தாம். எனினும் உடல்-மனம் மொழியால் இயற்கையோடு இயைந்து போகும் மனிதனின் இயல்பான வாழ்க்கைப் போக்கை மகா அபத்தக் களஞ்சியமாக்கிட சுயமையம் கொண்ட வக்கிரபுத்திக்குக் கிடைத்த நீசக் கருவிகளும் ஆகும். இந்தக் கலையில் பிராமணர்களின் சாதனை எளிய மனங்களை ஊமையாக்கி பிரமிக்க வைக்கும் உச்சம். அதன் ஒரு அம்சமாகத்தான் வர்ணாசிரமப் படிநிலைகள் பிறப்பால் வருவதென்றும், இந்தப் பிறவியில் மாற்ற முடியாததென்றும் வேதப்படுத்தியது. இந்திய சமூக வரலாற்றில் இவ்வர்ணாசிரமத்தைக் கட்டிக் காக்கவும், தூக்கிப் பிடிக்கவும், வர்ணக் கலப்புக்கு ஏதுவாக எவன் கருவையும் சுமந்து அபச்சாரம் செய்துவிடக்கூடிய பெண்ணினத்தின் மீதும் பிற சாதிக் குழுக்கள் மீதும் நிகழ்வித்த கண்காணிப்புக் கொலைகள், இந்தியா முழுதும் நிகழ்ந்த இரண்டாயிரம் ஆண்டுகாலப் போர்க்களக் கொலைகளையெல்லாம் 'ஒன்றுமில்லை' யாக்கிவிடக்கூடியவை.

படிப்பகம்

www.padippakam.com



வர்ணாசிரமம் இன்றும் தொடர்கிறது. காலப்போக்கிற்கேற்ப அதன் மேலங்கிகள் மாற்றப்படுகின்றன. உள்ளடக்கம் என்றைக்குமான வேத வாக்காகத்தான் காக்கப்படுகிறது. 'வேத வாக்கு' என்பதற்கு 'மாறாதது, மேல் முறையீடு இல்லாதது' என்றுதான் இன்றைக்கும் பொருள். இந்த வழக்கு மொழி ஒன்றுதான் பிராமணர்களின் மூச்சுக் குழாய் அடைப்பை நீவிச் சீர்செய்யும் மூலிகைச் சாறு. வேதம் ஒன்றுதான் பிராமண மேன்மை பேசும் சுத்த சுயம்புவான ஆவணம். அதைத் தொலைத்துவிடுவதும் அவர்கள் தெளிந்து மீள்வதும் இன்னமும் ஒரு முட்டாள் காணும் நெட்டைக் கனவாகத்தான் நீள்கிறது.

இது குடியரசு யுகம். மக்களாட்சி தத்துவ அரசும், பொய் முழக்க அரசியலும் வர்ணாசிரமத்திற்கெதிரான அறைகூவல் போலத்தான் தோன்றுகின்றன. ஆனால் இது தோற்றம்தான். இன்றைய சூழலில் பிராமணப் பிரிவைத் தவிர மற்ற சத்திரிய-வைசிய- சூத்திர வகுப்புகள் யாவும் சில சாதிப் பெயர்களோடு அடையாளப்படுத்திக் கொள்வதைத் தவிர வர்ணப் பகுப்பாகத் தொகுக்க முடியாத அளவு தலைமாறிக் குலைந்து கிடப்பதாகவே படுகிறது. இதுவும்கூட வர்ணாசிரமத்தைக் காக்கும் ஒரு வழிமுறையாகவே மிஞ்சுகிறது. இல்லையெனில் கே. ஆர். நாராயணன், மாயாவதி போன்றவர்கள் சத்திரியர்களாகவும், கலைஞர் கருணாநிதி, முரசொலி மாறன் போன்றவர்கள் சத்திரியர்களாய் இருந்து பெருத்த வைசியர்களாகவும் வகைப்படுத்த நேரிடும். நேராமைக்கு வர்ணாசிரம தர்மம் பிறப்பால் வருவது என்பதுதான் காரணம். வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆதி திராவிடர்கள் பட்டாளத்தில் பணியாற்றுகிறார்களாம். வேதம் விளைந்த பூமியைக் காக்கும் வேள்வியில் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்கள் சத்திரிய சிரோன்மணிகளாவது ஒருபுறம் இருக்கட்டும். குறைந்த பட்சம் சூத்திரர்களாகக்கூடத் தகுதியில்லை. பஞ்சமர்களாயிற்றே. பிராமண தர்மம் காக்கும் சேவகர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்டுவதற்கென்றே அவர்கள் இந்துக்களாக ஏற்கப்பட்டிருக்கிறார்கள். பஞ்சமர்கள் என்னும் ஐந்தாவது பிரிவை வர்ணாசிரமம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்பதால் அவர்களை மத வட்டத்துக்குள் கொணர்வதோ, தவிர்ப்பதோ மனுதர்மத்துக்கு ஒரு பொருட்டே அல்ல என்பதாயிருக்கும் இதற்கான விளக்கம். வேதங்கள் அவற்றின் சொந்த பலத்தால்தான் நிற்க வேண்டுமென்பதில்லை. வேதியர்களின் வியாக்கியான பலத்தாலும் நிற்கலாம்.

மகாபாரதம் பிராமணர்களின் ஐந்தாவது வேதம் என்று சொல்லப்படுகிறது. அதில் திரிதிராஷ்டிரனும் பாண்டுவும் விசித்திரவீரி

படிப்பகம்

www.padippakam.com



யனின் புதல்வர்களாகக் கருதப்படுகிறார்கள். உண்மையில் விசித்திரவீரியன் இறந்த பிறகு அவனுடைய இரண்டு விதவை மனைவியர்களுக்கும் வியாசனின் உறவால் பிறந்தவர்களே அவர்கள் பாண்டுவின் புத்திரர்கள் ஐவரும் பாண்டுவுக்குப் பிறந்தவர்களே அல்லர். பாண்டுவின் இரு மனைவியரும் ஐந்து வெவ்வேறு நபர்களுடன் கூடி விந்து தானம் பெற்றதால் பிறந்தவர்கள். திரௌபதி ஐந்து கணவன்மார்களுக்குப் பத்தினியாக இருந்தவள். இப்படிப்பட்ட பாத்திரங்களாலான மகாபாரதம் ஒரு மகா காவியமாகத்தான் திகழ்கிறது. எவனும் அதை 'சோர புத்திரர்களின் காவியம்' என்று துக்கிரித்தனமாகச் சொல்லி ஒதுக்கிவிடுவதில்லை. மானுடப் போக்குகளின் பல்லாயிரம் கண்ணிகளையும் இழைகளாக்கி நெய்த வாழ்க்கைப் பெருஞ்சீலை அது.

இதிகாச காலத்தில் ஆரியப் பெண்களின் வர்ணாசிரம தர்மத்துக்கியைந்த சமூக எல்லைகளைச் சுட்டவே இதைச் சொல்கிறோம். அக்காலத்தில் கணவனை இழந்தவள் தன் மைத்துனனையோ, தன் இனத்தைச் சேரந்தவனையோ மணந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தாள். மனைவியைக் கைவிட்டுச் சென்ற கணவன் குறிப்பிட்ட காலத்துக்குள் திரும்பி வரவில்லை எனில் அப்பெண் வேறு கணவனைத் தேடிக்கொள்ளலாம். விதவைகள் குழந்தைகள் பெற்றுக்கொள்ள விரும்பினால் விசித்திரவீரியனின் மனைவியரைப் போலத் தன் வர்க்கத்சை சேர்ந்தவனைக் கூடிப் பெற்றுக்கொள்ளலாம். இவையெல்லாம் பெண்களுக்கான சுதந்திரங்களாக நினைத்துவிடக் கூடாது. தன் வர்ணத்தைப் பெருக்கவும் காக்கவும் அவளுக்களிக்கப்பட்ட விரிந்த எல்லைகள்தாம். தனக்கு மட்டுமல்லாது தனது நான்கு தம்பியர்களுக்கும் உரியவளான திரௌபதியைச் சூதில் வைத்துத் தொலைக்கும் அதிகாரம் உள்ள அநியாயக்காரனாகத்தான் ஆண் இருந்தான்.

ரிக் வேதத்தில் ஒரு பாடல் சொல்கிறது: ஒரு பெண் தனது உடன் பிறந்தவனை உறவு கொள்ள அழைக்கிறாள். அவன் தயங்கி மறுக்கிறான். "நாம் என்ன நடக்காத ஒன்றையா செய்யப் போகிறோம். நம் ரிஷிமார்கள் நமக்குக் காட்டிய வழியைத் தானே பின்பற்ற அழைக்கிறேன். தயங்காமல் வா," என்கிறாள். ரிஷிகள் என்பார் பெரும் கல்விமான்கள்; மகா ஞானவான்கள். அவர்கள் காட்டிய வழியாம் அது. இதுதான் வேத காலம். ஐயாயிரம்– பத்தாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்தவை நம் வேதங்கள் என்று சொல்லிப் பூரித்துப் போகிறவர்கள், அத்தனை பழமையானவர்களிடம் இதற்கு மேலும் எதிர்பார்ப்பது அறிவீனம் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். அதை விடுத்து ஐயாயிரம் ஆண்டு மானுட வளர்ச்சிக்கு அவர்களா புரவலர்கள்?

படிப்பகம்

www.padippakam.com



அதன் பின்னர் என்னாயிற்று? கணவனை இழந்தவள் அவன் பிணத்தோடே சேர்த்து எரிக்கப்பட்டாள்; அவள் உயிரோடிருந்து பர புருஷனுடன் தொடர்பு கொண்டு, பிள்ளை பெற்று வர்ண தர்மத்தைக் குலைத்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான். உடன் கட்டை ஏறுதல் சட்டப்படி குற்றமாக்கப்பட்டபின், தாலியிழந்தவள் தலை மழிக்கப்பட்டு வெறும் நடைப் பிணமாய் மூலையில் முடக்கப்பட்டாள். வைதவ்ய வாழ்வின் கொடுமைக்கஞ்சி, மறுமணம் மறுக்கப்பட்ட சமூகக் கட்டமைப்பில், தங்களை விட்டுப் பிரிந்து போன கணவன் செத்தானா பிழைத்தானா எனத் தெரியாத நிலையில், வாழ்நாள் முழுதும் சுமங்கலியாகவே வேடந்தரித்து, தனிமையில் புழுங்கி மறைந்த பெண்கள் ஏராளம் உண்டு.

பெண்களுக்கு எதிரான இத்தனை மூர்க்கத்தனங்களுக்கும் சனாதன தர்மமே பின்புலமாகிறது. இறந்து போகும் ஒருத்தன் சொர்க்கம் புக, அவனுக்குப் பிறந்த பிள்ளை பிதுர்க்கடன் செய்தல் அவசியம். இக்கடன்களைச் செய்யும் பிள்ளை ஒருவேளை பிறனுக்குப் பிறந்தவனானால், அவற்றின் நற்பலன்கள் உண்மையான தந்தையையே சென்றடையும். ஆக, பிள்ளை பெற்றுக்கொள்வது ஒருவனுடைய சொத்தை ஆள மட்டுமல்ல; அவனுக்கு சொர்க்கத்தைக் காட்டவும்தான் என்றாகிறது.

இப்படியாக, இயற்கைப் போக்கோடு சற்றும் பொருந்திப் போகாத, தொட்டால் பொசுக்கென்று சிதைந்து போகிற, பல்லாயிரம் கற்பித இழைகளால் நெய்யப்பட்ட, சிலந்தி வலை போன்ற ஆண் வழிச் சனாதன சமூகத்தில், என்னதான் பெண்களைப் புறக்கணித்தாலும், ஓர் ஆணின் மானமும் மரியாதையும் பெண்ணின் முட்டுத் துணியால்தான் காக்கப்படுகின்றன. வேறென்ன? 'கற்பு' என்றால் 'உண்மையாயிருத்தல்' என்பது போய், வெறும் யோனி காக்கும் எந்திரமாகவும், பெண்களை நிரந்தரக் குற்றவாளியாக்கும் விலங்காகவும் கற்பிதப் படுத்தியாயிற்று.

காலத்திற்கேற்ப மாறுவதிலும், காலத்தையே மாற்றுவதிலும் பிராமணர்கள் எப்போதும் முன்னோடிகள் என்பதால், கடந்த ஐம்பது ஆண்டுகளில் மொட்டையடிப்பதும் வெள்ளை உடுப்பதும் மட்டுப்பட்டு, மெல்ல மெல்ல, புருஷனை இழந்த பெண்ணுக்குப் பூவும் பொட்டும் அனுமதிக்கப்பட்டு, இன்று விதவை மணம், மறுமணம், அதுவும் குழந்தையோடு மறுமணம் என்னும் புரட்சிகர மாற்றங்கள் பரவலாக நிகழ்ந்து வருகின்றன. பிராமண சமுதாயத்தின் இம்மாற்றங்கள் பிற மைய சாதிகளுக்கும் பரவிக் கொண்டிருக்கின்றன. பிராமணர்களின் மாற்றம் என்பது வெள்ளப் போக்கில் தலை சாய்த்துத் தன்னைக் காத்துக்கொள்ளும்

படிப்பகம்

www.padippakam.com



நாணலைப் போலத்தான் வெள்ளத்தைக் கிழித்துக்கொண்டு நிமிர்வதுண்டே தவிர முறிவதில்லை. இந்த நாணலின் வேரும் தூரும் எப்போதும் மதமும் ஆச்சாரமும்தான்.

அண்மையில் ஒரு தொலைக்காட்சித் தொடரில் பார்த்தேன். ஒரு பெண். தொலைந்துபோன அவள் கணவன் வெகுநாட்களாகத் திரும்பிவரவில்லை. இறந்து போயிருப்பானோ என்று ஒரு சந்தேகம் இருக்கிறது. அவள் தன் அண்ணனுக்கு அவன் விரும்பும் ஒரு விதவையை மணமுடிக்க நிச்சயத்துப் பெண் கேட்கப் போகிறாள். இது போன்ற மங்கல நிகழ்ச்சியைத் தான் முன்னின்று செய்யலாமா என்று அவளுக்கொரு தயக்கம். அவளுடைய பாட்டிதான் அவளைத் தேற்றி, "நீ இன்னும் சுமங்கலிதான். தயங்காமல் நீயே சீர்தட்டை எடுத்துக்கொண்டு செல்," என்று அனுப்புகிறாள். பிராமண கலாச்சாரம் என்பது இதுதான். சென்ற மாதம் நான் பார்த்த நிகழ்ச்சி இது: தஞ்சாவூர் ஐயர் ஒருவர் தன் மகனைக் கூப்பிட்டு, "ஏண்டா அம்பி, பொழுது ஏறிண்டிருக்கேடா. தேங்கா பறிச்சுப்போட அந்த சூத்திரனை வரச் சொன்னியோ இல்லியோ," என்று கேட்கிறார். வீட்டின் ஒரு திண்ணையில் அவர். எதிர்த் திண்ணையில் அவருடைய பேராசிரியர் மாப்பிள்ளை– சூத்திர மாப்பிள்ளை. பிராமண மாற்றத்தின் எல்லை இதுதான். தாங்கள் பிராமணர்களாய் இருப்பது கேள்விக்குள்ளாகாதவரை அவர்கள் எந்த மாற்றத்துக்கும் முன்னோடிகள்தாம்.

12–1–1998ஆம் நாள் 'தினமணி'யில் ராஜம் கிருஷ்ணன் **'தரிசு'க் கோட்பாடு** என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தார். சென்ற தீபாவளி மலரில் காஞ்சி 'ஜகத்குரு' ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தம் பேட்டியில் விதவைப் பெண்களை 'விளையாத தரிசு நிலம்' என்று சொல்லியிருந்தார். அது பற்றிய தன் மனக்குமுறலைத்தான் ராஜம் கிருஷ்ணன் வெளியிட்டிருந்தார். விதவையரின் தலை மயிரைக் களைவது பற்றி, "விதவைப் பெண்ணின் கூந்தலில்தான இவர்கள் பரிபாலித்த இந்து மதத்தின் உயிர்நாடியே இருந்தது," என்று மிகவும் குத்தலாகக் குறிப்பிட்டிருந்தார். விதவைகளுக்கு மொட்டையடிக்கும் பழக்கம் குக்கிராமங்களில்கூட இப்போது இல்லை என்றே தோன்றுகிறது. மேலும் 'முண்டச்சி'களைப் பார்ப்பதில்தான் ஆச்சாரியாருக்கு ஏதேனும் ஆட்சேபம் இருக்குமே தவிர, (அவர் அழகுணர்ச்சி அதற்கு இடம் தந்திருக்காது) புருஷனை இழந்தவள் பூவோடும் பொட்டோடும், புதுப் புருஷனோடும் சேவிக்கச் சென்றால் சுவாமிகள் ஆசி வழங்கத்தான் செய்வார் என்றே படுகிறது. காரணம் விதவைகளை சலித்தெடுக்கும் ஞானப் பார்வையை இறைவன் நல்லவேளை அவருக்கு வழங்க

படிப்பகம்

www.padippakam.com

வில்லை. எனினும் ஜெகத்குரு என்று பெயர் சூட்டிக்கொண்டு அறுத்துப் போனவர்களைத் தரிசுநிலம் என்று சொல்லித் திரஷ்கரிப்பது அவருக்கேயான பிராமண தர்மம் என்றுதான் கொள்ள வேண்டும். பிராமணர்கள் அவரைத் தெண்டனிடுவது- அவர்கள் பிராமணர்கள்தாம் என்று குரு ஸ்தானத்திலிருந்து சாட்சி சொல்கிறவர் என்பதற்காகத்தானே தவிர, அவர் ஒரு ஞானதேசிகர் அல்லது அவதார புருஷர் என்பதற்காக அல்ல.

இங்கே என் இளமைக் கால அறிதல், அல்லது அறியாமை நினைவுக்கு வருகிறது. நான் சிறுவனாயிருந்த பருவத்தில் என் தாயாரும் இரு மூத்த சகோதரிகளுமாகச் சேர்ந்து என்னைத் தனிமைப்படுத்தி மிகவும் பொத்திப் பொத்தி வளர்த்தார்கள். ஒத்த வயது சிறுவர்களோடோ மற்றவர்களோடோ பழக விடவில்லை; நல்ல பிள்ளையாய் வளர்க்கும் ஆசையால்தான். அதனால் வயதுக்கேற்ற நடைமுறை அறிவு எனக்கு மறுக்கப்பட்டது என்றே சொல்ல வேண்டும். சான்றாக, எனக்குப் பன்னிரண்டு வயது ஆகும்வரை குழந்தை பிறக்கும் விஷயம் பற்றி சரியான புரிதலின்றியே இருந்தேன். அதாவது, உணவு உட்கொண்டால்தான் பசி தீரும் என்பது போல, ஒரு பெண் திருமணம் செய்துகொண்டால்தான் குழந்தை பெற முடியும் என்று நம்பிக் கொண்டிருந்தேன். பிறகுதான் தெரிய வந்தது— திருமணம் ஒரு சமூக ஏற்பாடுதானே தவிர குழந்தை பெற்றுக்கொள்வதற்கும் அதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்று. மிகவும் தாமதமாக, பன்னிரண்டு வயதில் நான் அறிந்த ஞானம்கூட ஒரு பீடாதிபதிக்குத் தேவையாயிருக்கவில்லை என்பதுதான் 'உயர்ந்தோர்' கட்டமைத்துள்ள இந்திய சமுதாயத்தின் பொய்முகக் கோட்பாடு. புறத் தோற்றத்தில் ஒரு மனிதன் தன் வாழ்க்கைத் துணையை இழந்தவன் என்று அறியப்படுவதற்கான எந்தவிதத் தடயமும் பரிந்துரைக்கப்படாத சமூகத்தில், ஒரு பெண் 'தரிசுநிலமா'யிருப்பதற்கெனப் பரிந்துரைக்கப்பட்ட தடயங்களும், ஒரு மனிதன் தாழ்த்தப்பட்டவனாயிருக்கக் கட்டமைக்கப்பட்ட தடயங்களும் அடிப்படையில் ஒன்றுதான். இயல்புக்கு ஒவ்வாத இருவரின் தடயங்களையும் அழித்துவிட்டால் எல்லோரும் போலத்தான் அவர்களும். ஒரு மயிரிழை வேறுபாடும் இருக்கப் போவதில்லை. வலிந்து திணிக்கப்படும் இந்த அற்பமான கற்பிதம்தான் ஒட்டுமொத்த சமூகத்தையும் உயிர்க் கொல்லி நோயாகப் பற்றியிருக்கிறது. இதைக் காக்கவும் பரப்பவும்தான் வேதகாலத்து ரிஷிகளிலிருந்து சங்கர மடத்து ஆச்சாரிகள் வரை. வெட்கங் கெட்டவர்கள்தாம் நாம்!

வேத இதிகாச காலத்திலிருந்து இனக் கலப்பின் உக்கிரம் கட்டற்றுப் போகப்போக, அதற்கெதிராக வர்ணாசிரம தர்மத்தைக்

படிப்பகம்

www.padippakam.com



காக்கும் வைராக்கியத்தில் பெண்களின் இருப்பு பற்றிய நிலைப்பாடுகள் வெறும் கொச்சைத்தனங்களாகச் சுருங்கிப் போயின. ஆனால் இந்தக் கொச்சைத் தனங்களுக்கு வேதங்களை இன்னமும் துணைக்கழைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ரிக் வேதத்தில் பல பாடல்கள் செவ்வியல் மொழியில் இல்லை என்பதோடு பொருளும் புரிகிற மாதிரி இல்லை என்று சொல்லப்படுகிறது. இதுவும் ஒரு வகையில் நல்லதுக்குத்தான். வேத விற்பன்னர்கள் தங்கள் தேவைகளுக்கேற்றபடி புதிது புதிதாய்ப் பொருள் தேடிக் கொள்ளலாம் அல்லவா? 'வேத விற்பன்னர்கள்' என்றால் வேதத்தில் கரை கண்டவர்கள் என்பது மாத்திரம் பொருள் அன்று; வேதத்தைத் தங்கள் சாமர்த்தியத்திற்கேற்ப விற்கத் தெரிந்தவர்கள் என்பதும்தான்.

'வர்ணாசிரம தர்மம் வேத- இதிகாச காலத்தோடு தொடர்புடையது. இன்றைய காலகட்டத்தோடு தொடர்புறுத்தி அதை விமர்சிப்பதில் ஒரு பயனும் இல்லை' என்று சிலர் சொல்லக்கூடும். இது வெள்ளமெனப் பெருகிவரும் யுக மாற்றத்தின் தாக்குதலைத் திசை மாற்றிவிட்டு, வர்ணாசிரமத்தைக் கேள்விக்குள்ளாகாமல் காத்துக் கொள்ளச் சொல்லப்படும் தந்திரோபாயமாகத்தான் படுகிறது.

வேதப் பிரமாணப்படி சத்திரிய, வைசிய, சூத்திரப் பிரிவுகள் குறைந்த பட்சம் கோத்திர அடையாளங்களைக்கூடத் தக்கவைத்துக்கொள்ள முடியாதபடிக் குலைந்து கிடக்கலாம். ஆனால் பிராமண பீடம் மட்டும் அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல்தான் இன்றும் இருக்கிறது. அது ஏன் அழியவில்லை? அல்லது அழிக்க முடியவில்லை? 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்றும், 'ஜாதி இரண்டொழிய வேறில்லை' என்றும் பாடத் தெரிந்தவர்களுக்கு, 'வர்ணங்கள் பொய்களடி பாப்பா' என்று பாடத் தோன்றவில்லை. காரணம் ஜாதிகள் வேதத்தால் நேரடியாக ஆசீர்வதிக்கப்பட்டதல்ல. ஆனால் வர்ணம் அப்படியல்ல. அது வேத சம்பத்து. பாரதி போன்ற மகத்தான தமிழனையும் மனப் பிளவுக்காட்படுத்தும் விஷயம் இது.

தமிழக அரசு, பயிற்சி பெற்ற யார் வேண்டுமானாலும்– தாழ்த்தப்பட்டவர்களையும் உள்ளடக்கியே– அர்ச்சகர் ஆகலாம் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தது. அதை உச்சநீதி மன்றம் தூக்கிக் கடாசிவிட்டது. புராணத்தை மேற்கோள் காட்டி, கருவறைச் சிலையின் தெய்வீகத் தன்மை கண்டவனும் தொட்டால் மாசு பட்டு விடும். அவ்வாறு மாசுபடாமல் இருக்க, அதற்கென்று பிறந்தவன், அதாவது பிராமணன் மட்டுமே தொட்டு அர்ச்சனை செய்ய உரிமையுடையவன் என்று தெளிவுபடுத்திவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



வேதங்கள், உபநிஷத்துகள், ஸ்மிருதிகள் என எதற்குமான பதவுரை, பொழிப்புரை, தெளிவுரை, விளக்கவுரை போன்ற எல்லாக் கருமங்களும் பிராமண மேன்மையைப் பறைசாற்றத்தான். அதுதான் வர்ணாசிரம தர்மத்தின் ஒற்றைப் பரிமாணம். ஒருத்தன் உயரமாயிருப்பது அவனைவிடக் குள்ளமானவர்கள் மத்தியில்தான் அல்லவா. அந்த சார்புநிலைக் கோட்பாடாகத்தான் மற்றவர்கள் பற்றிய பேச்சு. கோபுரம் எவ்வளவு பெரிதாயும் விரிவாயும் இருந்தென்ன— அது கலசத்தை உச்சியில் தரிக்கத்தான். வர்ணாசிரம தர்மத்தின் முதலும் முடிவும் இதுதான். நமக்குள்ள கேள்வியெல்லாம் இடி தாங்கியாய் இல்லாத கலசம் இருந்தென்ன லாபம்? அழிந்தால் என்ன நட்டம்?

ஆரியர்களின் வரலாறு வேத காலத்திலிருந்து தொடங்குகிறது. நாலும் தெரிந்த நாடோடிகளாய் இந்தியாவிற்குள் புகுந்து, வட புலத்தை ஆரிய வர்த்தமாக்கி, இனக் கலப்பு செய்து, சமூகக் குழுக்களிடையே நால் வருணக் கோட்பாட்டை நடைமுறைப் படுத்திய கையோடு, அவர்கள் 'ஆரியர்' என்னும் இனப் பெயருக்கு மாற்றாக 'பிராமணன்' என்னும் வர்ணப் பெயரைத் தரித்துக் கொண்டனர். வர்ணத்தைப் புகுத்திய காலத்திலேயே — சமூகப் படிநிலைப் போராட்டத்தில் தோற்று உதிரிகளாய்ச் சிதறிப்போன வக்கற்றவர்கள் - திக்கற்றவர்கள் அனைவரும் வர்ணப் பிரிவுக்குள் வராத மிச்சமாய் ஒதுக்கப்பட்டார்கள் என்றே நம்பப்படுகிறது. அவர்களே பின்னாளில் அசுத்தமானவர்களாகவும், 'தீட்டு' என்னும் கருத்தின் திரண்ட மனித உருவமாகவும் கற்பிக்கப்பட்டு, பிறப்பால் பிரம்மனோடு சம்பந்தப்படாத பஞ்சமர்களாய் அடையாளப்படுத்தப்பட்டவர்கள்.

உயர்வு – தாழ்வு பேசும் இந்த வர்ணாசிரமக் கருத்தாக்கம் தமிழகத்தில் பார்ப்பனர் வருகைக்கு முன்பே அறியப்பட்டிருக்க வேண்டும். பார்ப்பனர்கள் வந்து, தங்களுக்கென ஒரு பீடத்தை உருவாக்கிக் கொள்ளு முன்பே இக்கருத்தாக்கம் இங்கே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாக ஊடுருவியதோடு, தவிர்க்க முடியாதபடி நிலைபெற்றும் விட்டது. இந்த நிலைபெறலுக்கு இங்கு அப்போது செல்வமும் செல்வாக்கும் மிக்கவர்களாய் வளர்ந்திருந்த மருத நிலக்கிழார்களே வேளாளர்களாக அறியப்பட்டவர்களே காரணமாய் இருக்க வேண்டும். கற்றவர்களாகவும் கருத்தியல் வாதிகளாகவும் வளர்ந்திருந்த வேளாளர்களின் உடன்போக்கில்லாமல் இது போன்றதொரு யுக விளைவை விதைக்கும் கருத்தாக்கம் இங்கே கால் கொண்டிருக்க முடியாது. இந்தக் கருத்தியல் கால்கோளே

படிப்பகம்

www.padippakam.com



நாடோடிகளாய் வந்த நிறங்கூடிய பார்ப்பனர்களை வெகு எளிதாய் உயர் பீடத்தில் அமர்த்த உதவியது என்றால் மிகையில்லை.

தென்னாடு வந்த பார்ப்பனர்கள் ஆரியர்கள் அல்லர். தட்ப வெப்பம் காரணமாகவோ, படை நடத்தி வெற்றிகொள்ளல் எளிதல்ல என்று கருதியோ, ஆரியப் படையெடுப்பு இங்கே ஒரு போதும் நிகழவில்லை. இங்கு வந்தவர்கள் தமிழர்களின் ஒப்புரவின் பேரிலும் விருந்தோம்பல் பண்பிலும் நம்பிக்கை வைத்து வந்த பிராமணர்களே. சொல்லப்போனால், வடபுலத்து பிராமணர்களிலேயே உதிரிகளாய்ச் சிறுத்துப்போய் ஒதுக்கப்பட்டவர்களாய், திரவியம் தேடத் திரைகடலோடும் செட்டிகள் போலத் தன்மதிப்பு தேடிப் புலம் பெயர்ந்து வந்தவர்களாய் இருக்கலாம்— 'பிராமணன்' என்னும் உன்னதம் பேசும் அந்நியப் பெயரோடல்லாமல், 'பார்ப்பார்' என்னும் பரிவும் கனிவும் கொண்டேத்தும் தமிழ்ப் பெயரேற்று இங்கு வந்து நிலைத்தவர்கள்.

'பார்ப்பனர் வருகை' கடைச்சங்கக் காலத்திலேயே முற்றுப் பெற்றுவிட்டதாகத் தெரிகிறது சிலப்பதிகாரக் காலம் வரை பார்ப்பன ஆண்களும் பெண்களும்- பிராமண மொழிதலில் குறிப்பிடுவதானால்— தாசர்களாகவும் தாசிகளாகவும்தான் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இங்கே அண்டிவந்தவர்கள் என்பதால், பிராமணப் போக்கிலான அவமதிப்புக்குள்ளாகாமல் மிகுந்த கண்ணியத்தோடே நடத்தப்பட்டது ஆறுதலான விஷயம். சான்றாக, சிலப்பதிகாரத்தில் வரும் மாடல மறையோன் கணிகையர் தெருவில் புகுந்து வருகிறவன்; கணிகையருக்குத் தூது போகிறவன். மாதவியின் கடிதத்தை வாங்கி வந்து மதுரை செல்லும் கோவலனிடம் கொடுத்தவன். பிராமண கலாச்சாரம் அவனை எப்படி அழைக்கும்? 'மாமா' வேலை பார்க்கிறவனாக. ஆனால் அவனோ மிகுந்த மரியாதையோடு 'மாடல மறையோன்' என்றே அழைக்கப்படுகிறான். அவன் தன் பங்குக்கு என்ன உள்ளீட்டோடு இயங்குகிறான் என்பதும் நமக்கு முக்கியமாகிறது. சிலப்பதிகாரம் முழுமையும் கோவலனை 'கோபால' என்று வடமொழி விளியாக அழைத்தவன் இவன் ஒருத்தனே. கோவலனின் சிறப்புகளாகப் பார்ப்பனர்களுக்கு அவன் செய்த உதவிகளையே அதிகம் தொகுக்கிறான். கோவலன் அளித்த தானத்தை ஏற்க வந்த கூன் விழுந்த பார்ப்பானை 'உயர் பிறப்பாளன்' என்று மறவாமல் குறிக்கிறான். வடமொழி வாசகம் கொண்ட ஓலையை 'நல்லேடு' என்று கவனமாய் மொழிகிறான். கண்ணகியின் தாசியான தேவந்தி என்னும் கணவனைப் பிரிந்த பார்ப்பனப் பெண் 'சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் துறை மூழ்கி, காம

படிப்பகம்

www.padippakam.com



வேள் கோட்டம் சென்று தொழுது' கணவனைப் பெறலாம் எனச் சொல்லிக் கண்ணகியை அழைக்கிறாள். அதாவது, மத ஆச்சாரத்தோடு முற்றும் ஒத்திசைவாய் வெளிப்படுகிறாள். மாடலன், தேவந்தி இருவரும் என்ன வேலை பார்த்தாலும், தங்கள் குலத்தை உயர்த்திப் பிடிப்பதிலும், குல நெறியையும், மொழியையும் விதந்து பரப்புவதிலும் குறியாய் உள்ளனர். பார்ப்பனர்கள் வெற்றி என்பது அவர்தம் நலன்களில் கொண்டுள்ள தொய்வில்லாத அக்கறையும் இடைவிடாத விழிப்புணர்வும்தான். சாதாரணமாக, ஒருத்தனுக்கு ஒரு நாளில் அதிகபட்சமாக 24 மணி நேரம்தான் உண்டு. ஆனால் பார்ப்பனர்களுக்கு ஒரு நாளில் 1440 நிமிஷங்கள் உண்டு.

சிலப்பதிகாரத்தில் மூவகை கற்புடைய மகளிர் பற்றிப் பேசப் படுகிறது. முதலாமவர் கணவன் இறந்தான் என்ற அளவிலேயே உயிர் விடுகிறவர். இரண்டாமவர் கணவனோடு எரிசிதை புகுந்து உயிர் போக்கிக் கொள்கிறவர். மூன்றாமவர் கணவனை இழந்து கைம்மை நோன்பு கொண்டு வாழும் மகளிர். கோவலன் 'சாவக நோன்பி' என்று சொல்லப்படுகிறான்; அதாவது சமணன். எழுதிய இளங்கோவடிகளே சமணராயிருப்பாரோ என்றொரு ஐயம். சைவமோ, சமணமோ, சனாதனமோ- என்னவாயிருந்தாலென்ன? 'கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வ'மெனப் புனையப் படுகிறவளாய் எப்போதும் ஒரு பெண்தான் இருந்து தொலைக்க வேண்டியுள்ளது.

மதுரையை அழிக்க வஞ்சினம் கொண்ட கண்ணகியின் முன் வந்து தீக்கடவுள் நின்று 'யார் யார் காப்பாற்றப்பட வேண்டும்?' என்று கேட்கிறது.

> பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்
> மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
> தீத்திறத்தார் பக்கமே சேர்க.

என்கிறாள் கண்ணகி. அதாவது, காப்பாற்றப் படுகிறவர்களில் 'உயர் பிறப்பாளரான' பார்ப்பார் முதலிடத்தைப் பெறுகின்றனர். கூடவே, கோமாதா என்றும் காமதேனுவின் அம்சம் என்றும் அவர்கள் போற்றி வணங்கும் பசுவும் மறவாமல் இடம் பெறுகிறது. இவையெல்லாம் பார்ப்பன விழுமியங்கள்.

இதே காலகட்டத்தில் வர்ணாசிரம தர்மம் தமிழ் மண்ணில் வெறும் கருத்தாக்கம் என்னும் அளவில் அல்லாமல் நாற்பால் வடிவாகவே வேரூன்றிவிட்டது என்பதையும் அறிய முடிகிறது.

> வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்

படிப்பகம்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவன் அவன்கண்படுமே

என்றொரு பாடல். இதை யாரோ ஒரு வக்கற்ற புலவன் பாட வில்லை. நாட்டையே வழி நடத்துகிற புகழ் பெற்ற மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் பாடுகிறான். வர்ணாசிரம தர்மம் சூத்திரர்களுக்குக் கல்வியை மறுக்கிறது. அந்தப் பண்பாடு தமிழ்ச் சமூகத்துக்கு அந்நியமானது; ஒவ்வாதது. ஆயினும் அந்த ஒவ் வாமையே நடைமுறையாகி, மேல் – கீழ் என்னும் எதிர்வுநிலைப் பார்ப்பனக் கருத்தியல் மக்களிடையே வேரூன்றி, ஒரு மன்ன னையே கையாளாகாதவனாக்கும் அளவு நிலை கொண்டுவிடுமோ என்னும் நிலையில்தான் 'ஒருவன் பிறவியால் நாலாஞ்சாதிக்கார னாயிருப்பினும் அவன் கற்றுச் சிறந்தான் எனில், அவன் பின்னே பார்ப்பனனும் கைகட்டிச் செல்ல வேண்டும்' என்னும் ஆள்திறன் மதிக்கும் தமிழ்க் கருத்தியலை ஒரு கலகக் குரலாக முன் வைக்கி றான். அதாவது, நாற்பால் பிரிவை ஒத்துக்கொண்டு, அதில் ஓர் உடைப்பையும் அனுமதிக்கிற நெகிழ்வுத் தன்மை இது. இது மாதிரி உடைப்புகள்தாம் தமிழனை இன்னமும் தனிக்குணமுள்ள வனாக அடையாளப்படுத்தும் உயிர்ப்புள்ள அம்சங்கள். எனினும் செய்யும் தொழிலால் மனிதரிடையே ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் சிறுமை வேர் கொண்டாயிற்று. அதைச் சகியாமல்தான் 'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவனும் புலம்ப நேர்ந் துள்ளது.

இலக்கியத்தை எடுத்துக் கொண்டால், சமஸ்கிருதக் கலாச்சா ரத்தின் அங்கீகாரமாகத்தான் தொல்காப்பியமே எழுதப்பட்டுள் ளது– சிற்சில உடைப்புகளுடன். 'மேலோர்' பற்றி அவர்களது மீறலின் கடைசி எல்லைவரை விரிவாகப் பேசுதலும், கீழோர் பற்றி முழுமையாக மௌனம் காத்தலுமே அந்த இலக்கணம்.

சிலப்பதிகாரத்தில், கோவலனுக்குப் பிறந்து, கோவலனின் மூதாதையரைக் காத்த மணிமேகலா தெய்வத்தின் பெயரைச் சூடிக் கொண்ட மாதவியின் மகள் வெறும் கணிகையின் மகளாகவே பார்க்கப்படுகிறாள். மகாபாரதத்தில் விசித்திரவீரியனின் விதவை மனைவியருடன் அவர்களது தாசிப் பெண்ணும் சேர்ந்தே வியாச னால் புணரப்படுகிறார்கள்—தனித்தனியாகத்தான். விதவையரின் குருட்டு, நோஞ்சான் பிள்ளைகள் அரச குமாரர்களாகவும், வேலைக்காரிக்குப் பிறந்த பேரறிஞன் விதுரன் வெறும் தாசியின் பிள்ளையாகவுமே அறியப்படுகிறார்கள். இதற்கு மறுதலையான விஷயங்கள் இலக்கியத்தில் ஏறக்கூடாது என்பது விதி. அதற் காக மறுதலைகள் நடைபெறாமலா போகும்? நடந்ததற்கான

www.padippakam.com


ஆதாரங்களை வாய்மொழி இலக்கியங்களிலிருந்து நூற்றுக் கணக்கில் நம்மால் தொகுக்க முடியும்.

சிலப்பதிகாரத்தில், காப்பாற்றப்பட வேண்டியவர்களாய்க் கண்ணகியால் சுட்டப்படுகிறவர்களில் பார்ப்பனருக்கு அடுத்து வருவது 'அறவோர்.' இந்த அறவோர் பார்ப்பனர் அல்லர். திருவள்ளுவர் சொல்கிறார், "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்," என்று. இதிலிருந்து அந்தணர் என்போரும் பார்ப்பனர் அல்லர் என்றாவதோடு, குறளின் கருத்துப்படி எல்லா உயிர்களுக்கும் நலம் விழைபவரே அந்தணர் என்னும் அறவோர் ஆகிறார். அதாவது மன்னுயிர் நலம் பேண இறையருள் வேண்டி பூசனை செய்கிறவர்கள்தாம் அந்த அறவோர். (திருக்குறளின் முதல் அதிகாரத்தில் 'அறவாழி அந்தணன்' என்றொரு சொற்றொடர் வருகிறது அதன் பொருளை 'அறக்கடலாகிய அந்தணன்' என்று கொண்டு, அதை இறையைக் குறிக்கும் சொற்றொடராக ஏற்கலாம்.)

ஆகவே, கண்ணகி குறிக்கும் அறவோர் இறைபணியாற்றும் பூசாரிகளும் புரோகிதர்களும் ஆதல் வேண்டும். இன்றைக்கு சமஸ்கிருத மந்திரங்களோடு அவ்வேலைகளைச் செய்து கொண்டிருப்பவர்கள் பார்ப்பனர்கள். எனில், இவர்களுக்கும் முன்னால், சமஸ்கிருதம் கோயில் மொழியாவதற்கும் முன்னால் இப்பணிகளைச் செய்துவந்த தமிழர்கள் இருக்க வேண்டும். அவர்கள்தாம் இன்றைய பறையர்கள். எந்திரத்தில் புதிய உறுப்பு மாட்டப்படும்போது பழசாகிப்போன உறுப்பு தூக்கியெறியப்பட்டு, அது கேள்வி கேட்பாரில்லாமல் கிடப்பதில்லையா? பறையர்கள் அப்படி ஆனவர்கள்தாம். "பார்ப்பானுக்கு மூத்த பறையன் கேட்பாரில்லாமல் கீழ்ச்சாதியானான்" எனும் வழக்குமொழி இதற்குச் சான்று. 'தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களும் பறையர்களும் ஒரே இனத்தவர்' என்று அம்பேத்கர் கூறுவதுகூட ஒரே தொழில்வகைப்பட்டவர்கள் என்னும் பொருளில்தான் இருக்க வேண்டும். தெய்வப் பணிகள் கேள்விகளற்ற நம்பிக்கை சார்ந்தனவாதலால், வழி வழியாய் வந்த வழமையை மாற்றினால் தெய்வக் குற்றத்துக்கு ஆளாக நேருமோ என்னும் அச்சம் காரணமாகவே, இன்றைக்கும் தெய்வப் பணிகளோடு நிறைய தொடர்புடையவர்களாகவும், விழாக் காலங்களில் காப்பு கட்டிக் கொள்கிறவர்களாகவும், கோயில் சம்பந்தமான சடங்கு சாங்கியங்களில் தவிர்க்க முடியாத வழமையாக முன்னிறுத்தப்படுகிறவர்களாயும் பறையர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். பறையர்களில் ஒரு கூறான வள்ளுவர்களின் தொழில் இன்றும் புரோகிதம் செய்தலே. அவர்கள் தங்கள் முதுகைச் சொரிந்து

படிப்பகம்

www.padippakam.com

# அனைத்திந்திய தேசியமும் திராவிட தேசியமும்

# உறவுகளும் முரண்களும்

—தொ. பரமசிவன்—

—சென்ற இதழ்த் தொடர்ச்சி

## இரண்டாம் பகுதி

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் தேசிய இனத்துக்கு மாற்றான உணர்வுகளுடன் கூடிய, ஒரே தலைவராக அயோத்திதாசப் பண்டிதர் மட்டுமே இருந்தார். ஆனால் ஒரு தேசிய இனத்தை முதலில் அடையாளம் காட்டும் மொழித் துறையில், அறியப்பட்ட அறிவாளிகள் சிலர் இருந்தனர். கனக சபைப்பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, ஜி. யு. போப், உ.வே. சாமிநாதையர் போன்றோர் வேதமல்லா மரபு (Non-Vedic Tradition) சார்ந்த தமிழிலக்கியங்களை அச்சிட்டு வெளிப்படுத்தியிருந்தனர்.

இவர்களில் மறைமலையடிகள், ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை போன்ற சைவ அறிஞர்கள் வேதமல்லா மரபு பற்றிய அறிவும் பார்ப்பன எதிர்ப்புணர்ச்சியும் உடையவர்களாக இருந்தனர்.[25]

1908இல் தேசிய காங்கிரசைப் 'பார்ப்பனர் காங்கிரஸ்' என்று தன் 'தமிழன்' பத்திரிகையில் எழுதிய அயோத்திதாசப் பண்டிதர் 1909இல், "பார்ப்பனர் எதிர்ப்பும் வேதங்களின் எதிர்ப்பும்" என்ற தலைப்பில் சென்னையில் கருத்தரங்கு ஒன்றைத் தலைமையேற்று நடத்தினார்.[26] வடமொழி, வேத எதிர்ப்பு உணர்ச்சியே அவரது பௌத்த மத ஈடுபாட்டிற்குக் காரணம் என்று கருதலாம்.

வேதப் பெருமை, வேதியர் பெருமை, வடமொழி உயர்வு, வருணாசிரமத்தின் சிறப்பு, இந்திய நாகரிகம் போன்ற கருத்தாக்கங்களால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆல்காட்டும் பிளாவட்ஸ்கியும் எதிர்நிலையாகத் தமிழர்களை எழுப்பியதுபோல,

---

25. பார்க்க: A.R. Venkatachalapathy, "At the Margins, Saivite Intellectuals in the Dravidian Movement 1927 - 1944". History & Society, (Ed) K.M. Manikumar, Madras-41, 1996
26. எக்ஸ்ரே ந.அ. கருணாகரன், மு. நூல் நீதிக்கட்சி பவள விழா மலர் 1992, ப. 117

படிப்பகம்

www.padippakam.com



இருபதாம் நூற்றாண்டில் அந்தத் 'திருப்பணிக்கு' அன்னிபெசன்ட் (1847–1933)என்ற ஐரிஷ் பெண்மணி வந்து சேர்ந்தார். அவருடைய (Home Rule) தன்னாட்சி இயக்கமும் புதிய இந்தியா (New India) இதழுமே திராவிட இயக்க முன்னோடிகளான டி.எம்.நாயர், பிட்டி தியாகராசர், பி. நடேசன் ஆகியோர் எதிர்மறையாக ஒன்றிணைந்து பணி செய்ய வைத்தன. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் பேரால் அவர்கள் 'பிராமணரல்லாதார் வெள்ளை அறிக்கை' (Non-Bramin Manifesto) வெளியிட்ட மறுநாளே (20-12-16) அதற்கு மறுப்பும் எதிர்ப்பும் அன்னி பெசன்டின் புதிய இந்தியா இதழில் அவரால் வெளியிடப்பட்டன.[27]

இந்த வெள்ளை அறிக்கையினை வெளியிட்ட 'இந்து' நாளேடு 'இதனைவிட இந்நேரத்தில் ஒரு தற்கொலை முயற்சி இருக்க முடியா'தென்றும் 'வெளியிட்டவர்களின் உள்நோக்கத்தை வலுப்படுத்தும் என்பதால் இது குறித்து விவாதம் நடத்த விரும்பவில்லை' என்றும் எழுதியது. மேலும் இந்த இயக்கம் தொடங்கியதிலிருந்து நேர்மையற்ற போக்கினைக் (Sinister) கைக்கொள்ளுவதாகவும், இது பிராமண சமூகத்தின் நலனுக்கும், தேசிய இயக்கத்துக்கும், காங்கிரசின் நோக்கங்களுக்கும் எதிரானதென்றும் எழுதியது. இந்த அறிக்கையினை மறுத்த குத்தி. பி. கேசவப்பிள்ளையினைப் பாராட்டியும் 'இந்து' எழுதியது.[28]

மூன்றுமாத காலம் உதகமண்டலத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட அன்னிபெசன்ட் விடுதலையாகி சென்னை வந்தபோது 1917 (செப்,14) அவருக்கு ''அரசர்களும் கண்டிராத வகையில் 5 மைல் நீள ஊர்வலத்துடன்'' வரவேற்பு தரப்பட்டதாக 'இந்து' இதழ் குறிப்பிடுகிறது.[29] கோயில்குடை பிடித்து வேத பாராயண முழக்கத்துடன் இந்த ஊர்வலம் நடந்ததாகவும் இந்த ஊர்வலத்தில் பாதியில் சுப்பிரமணி அய்யரும் வந்து கலந்துகொண்டதாகவும், ஊர்வலம் முடியுமிடத்தில் மற்றொரு பார்ப்பனர் கூட்டம் வேதபாராயணத்துடன் எதிர்கொண்டு வரவேற்றதாகவும் 'Madras Mail' இதழ் எழுதுகிறது.[30] திராவிட இயக்க முன்னோடியான டாக்டர் டி. எம். நாயர் மீது அவமதிப்பு வழக்குத் தொடர்ந்தார் அன்னிபெசன்ட். 'ஜஸ்டிஸ்' இதழ் அவரை 'ஐரிஷ் பிராமணி'

27. முரசொலி மாறன், மு. நூல் ப. 131
28. The Hindu dt. 22–12–1916 9–10–1917 see: One hundred years of The Hindu p. 231-32
29. Ibid The Hindu p. 214
30. மெட்ராஸ் மெயில் நாள்: 21-9-1917, முரசொலி மாறன், முந்நூல், மேற்கோள் ப. 129

படிப்பகம்

www.padippakam.com


என்றே எழுதியது.[31]

"ஜஸ்டிஸ்" கட்சி தோன்றுவதற்குக் கிரியா ஊக்கியாக, தூண்டுகோலாக இருந்தது அன்னிபெசன்ட் துவக்கிய ஹோம்ரூல் இயக்கம்தான்" என்கிறார் யூஜின் இர்ஷிக்.[32]

பி. நடேசனார், பிட்டி தியாகராசர், டி. எம். நாயர் முயற்சியால் நீதிக்கட்சி எழுந்த நேரத்தில் காங்கிரசில் மக்கள் தலைவராக பெரியார், திரு. வி. க., வ. உ. சி., வரதராஜுலு நாயுடு ஆகிய பார்ப்பனரல்லாத தலைவர்கள் இருந்தனர். இவர்களைக் காங்கிரஸ் இயக்கத்தின் பார்ப்பனத் தலைவர்களான கஸ்தூரிரங்க ஐயங்காரும் சத்தியமூர்த்தியும் ராஜாஜியும் எப்படிப் பகடைக் காயாகப் பயன்படுத்தி ஏமாற்றி வந்தார்கள் என்பதை, வெட்கத்தை விட்டுப் பெரியார் எழுதிய எழுத்துக்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.[33]

நீதிக்கட்சியின் தோற்றத்தோடு தமிழ்ச் சமூக அசைவுகள் விரைவு பெற்றன எனலாம். இதற்குச் சற்று முன்னும் பின்னுமான காலத்தில் ஒரு தேசிய இனத்தின் முதல் அடையாளமான 'மொழி பற்றிய தன்னுணர்ச்சி' தமிழ்நாட்டில் அரும்பியிருந்தது. பார்ப்பனிய புராண மரகபுளிலிருந்து பெரிதும் தள்ளி நின்ற சங்க இலக்கியங்களின் அறிமுகம், தமிழர்களின் வேதமில்லா மரபினை விளக்கிய கனகசபைப்பிள்ளையின் நூல், 1904இல் (ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்) பாண்டித்துரைத் தேவர் தொடங்கிய மதுரைச் தமிழ்ச் சங்கம், முன்னர் குறிப்பிட்ட தமிழ் அறிவாளிகளின் கூட்டம் – இவையெல்லாம் இதற்குரிய தோற்றக் காரணிகளாகும். 1914 மைசூர் பல்கலைக்கழகம் தொடங்கப்படுகிறது.[34] சென்னைப் பல்கலைக்கழகத்தில் பார்ப்பனர் ஆதிக்கமும், பிற திராவிட மொழியாளர் அதில் நிறையப் பங்கு பெற்றிருந்ததும் சேர்ந்து தமிழ்நாட்டின் தென்பகுதியில் 'தமிழ் பல்கலைக்கழகம் ஒன்று வேண்டும்' என்ற உணர்வும் கோரிக்கையும் எழக் காரணமாகின்றன. 1920களில் இக்கோரிக்கை வலுப்பெறுகிறது.[35] சென்னைப் பல்கலைக்கழகப் பேரவை (செனட்) கூட்டத்தி

---

31. முரசொலி மாறன், முந்நூல், ப. 124
32. Eugene Irshick, "The Significance of the Justice Party." Justice Party Golden Jubilee Souvenir. P. 68
33. தந்தை பெரியாரே எழுதிய சுயசரிதை, தி.க. வெளியீடு, இரண்டாம் பதிப்பு 1996, ப. 18 - 24
34. K. Nambi Aruran Tamil Rennaisance and Dravidian Nationalism 1 Ed. Madras p. 126
35. Ibid ,, p, 125

படிப்பகம்

www.padippakam.com


லும் இது எழுப்பப்பெறுகிறது- விளைவாக 1920இல் சிதம்பரத்தில் 'மீனாட்சி கல்லூரி' அமைக்க ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாருக்கு அனுமதி தரப்படுகிறது. அவர் அதற்கு ரூ.20 லட்சம் நன்கொடை அளிக்கிறார்.

மீண்டும் சேலம் மாகாணக் கல்வி மாநாட்டில் இக்கோரிக்கை எழுப்பப்பெற்று தமிழறிஞர் மு. சு. பூரணலிங்கம் பிள்ளை தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப் பெறுகிறது.[36] 'தமிழ்மொழிக்கென மட்டும் ஓர் பல்கலைக் கழகம் அமைவது குறுகிய பார்வை (Narrow View) என்று 1926 சனவரி (28)யில் ஒரு கட்டுரையும் ஜூன் 17இல் ஒரு தலையங்கமும் எழுதுகிறது 'இந்து' நாளிதழ்; தமிழ் தேசிய இன உணர்வு கூர்மை அடையக் கூடாதெனப் பார்ப்பனியம் கவனமாகவே பணியாற்றியிருக்கிறது. இதனை இன்னொரு செய்தியுடன் இணைத்துப் பார்க்க வேண்டும். 16-09-43 இதழில் (விடுதலை) 'சபாஷ் சர். சி. பி.' என்று ஒரு தலையங்கம். கோட்டையூர் ராம. அழகப்பச் செட்டியார் தம் வீட்டு விழா ஒன்றின் நினைவாக, திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஏற்படுத்த ரூ. 10001 நன்கொடை தருகிறார். பணத்தைப் பெற்றுக் கொண்ட சர். சி. பி. "தமிழ்மொழி வளர்ச்சிக்கும் வடமொழி வளர்ச்சிக்கும் கொடுப்பதாக ஏற்றுக் கொள்கிறேன்" என்று பணத்தைப் பெற்றுக்கொண்டபின் பேசுகிறார். இதை எழுதிவிட்டு, "இதை எதிர்த்துக் கேட்கும் 'சுத்தத் தமிழன்' இருக்கிறானா என்று எரிச்சலுடன் கேட்கிறார் பெரியார்.[37]

1920களின் நடுப்பகுதியில் நடந்த குருகுல நிகழ்ச்சியும், காஞ்சிபுரம் மாநாடும் பெரியாரைக் காங்கிரசிலிருந்து வெளியேறச் செய்கின்றன. குருகுலத்தில் தீண்டாமையை எதிர்த்து பஸ். இராமநாதன் த. கா. கா. கமிட்டியில் கொண்டுவந்த தீர்மானத்தை சீனிவாச ஐயங்கார் தவிர அனைத்துப் பார்ப்பனர்களும் உள்கட்சி வேறுபாடுகளை மறந்து எதிர்த்திருக்கிறார்கள்.[38]

திராவிட இயக்க முன்னோடிகள் திராவிட தேசியம் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்தனர். நடைமுறையில் அது தமிழ் தேசியமாகவே அமைந்ததை 1930களில் காண்கிறோம்- தமிழர்கள் தங்கள் 'சுய அடையாளம்' தேடும் முயற்சிகளில் ஒன்றாகவே.

---

36. Ibid ,, p. 127–28
37. விடுதலை 14–9–1943, தந்தை பெரியார் 117அம் ஆண்டுமலர் ப. 67
38. E. Sa. Visvanathan, The Political Career of E.V. Ramasamy Naicker p. 53

படிப்பகம்

www.padippakam.com



மொழிவழி ஏகாதிபத்தியத்தை இனங்கண்டு கொண்ட பெரியார் 1926இல் 'இந்துஸ்தானி தேசிய பாஷையா' என்ற முதல் இந்தி எதிர்ப்புக் கட்டுரையை எழுதுகிறார்.[39]

கடவுள் நம்பிக்கை உடைய தமிழ் அறிவாளிகள் 1930களின் தொடக்கத்தில் பெரியாரிடமிருந்து விலகியே நின்றனர். குடிஅரசு இதழில் பொது உடைமைக் கருத்துகளும் இந்தி எதிர்ப்புக் கட்டுரைகளும் வெளிவந்தன.[40]

1932–33இல் சிங்காரவேலர், அ. இராகவன், மயிலை சீனி. வேங்கடசாமி போன்றோர்களே இக்கட்டுரைகளை எழுதினர். அ. இராகவன் 'தமிழ்ப் பண்டிதர்களே இன்னும் தூக்கமா?' என்று கேட்டு, தமிழ் மொழியின் மேன்மை பற்றி 50 பக்கத்தில் புத்தகம் போட்டு 2 ரூபாய்க்கு விற்கும் தமிழ்ப் புலவர்களைச் சாடிவிட்டு, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு "அடிகளும், முதலியாரும் பிள்ளையும் நாட்டாரும் முன்வரப் போகிறார்களா இல்லையா?" என்றெழுதினார்.[41]

'தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்' என்றழைக்கப்பட்ட சிங்காரவேலரின் இந்தி எதிர்ப்புக் குரலுக்கு, அன்றைக்கு தமிழ் நாட்டிலிருந்து பொதுவுடமை இயக்கத்தினர் கேளாக் காதினராக முகம் திருப்பிக் கொண்டார்கள். இன்றுவரை அப்படித்தான்!

1937இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்ப்புலவர்கள், பிற அறிவாளிகள், பொதுமக்கள் ஆகியோர் ஆதரவுடன் வெற்றிகரமாக நடத்தப்பெற்றது. 9 தளபதிகள் (சர்வாதிகாரிகள்) இதற்கென நியமிக்கப்பட்டனர். இவர்களில் இருவர் பெண்கள். ஒருவர் பார்ப்பனர்– காஞ்சிபுரம் பரவஸ்து இராஜகோபாலாச்சாரியார்; ஈழத்து அடிகள் என அறியப்பட்ட ஈழத்து சிவானந்த அடிகளும் இதில் பங்குபெற்றார்.[42] திராவிட இயக்கத்துக்கு ஒரு விரிந்த மக்கள் தளத்தைப் பெற்றுத் தந்தது 1937 இந்தி எதிர்ப்புப் போராட்டமே ஆகும்.

39. மா. இளஞ்செழியன், தமிழன் தொடுத்த முதற்போர், ப. 46 பெரியார் சுயமரியாதை பிரசார வெளியீடு, 1986, 2ஆம் பதிப்பு
40. குடிஅரசு 1931 சூன் 14 தலையங்கம்; மயிலை சீனி வேங்கடசாமி 'இந்தியாவின் பொது பாஷை இங்கிலீஷா இந்தியா?' குடிஅரசு இதழ் 1931 ஆகஸ்டு 30
41. அ. இராகவன், 'இந்தியும் காந்தியும்', 'தமிழ்ப் புலவர்களே இன்னும் தூக்கமா?' குடிஅரசு 1931 ஜூலை 26.
42. பா. இளஞ்செழியன், முந்நூல் ப. 6

படிப்பகம்

தமிழ் மக்களுக்குத் தமிழ்மொழி பற்றிய தன்னுணர்ச்சி ஊட்டுவதில் 1930களில் திராவிட இயக்கம் குறிப்பிடத் தகுந்த வெற்றியைப் பெற்றதுஎன்றால், வேறொரு வகையில் அனைத்திந்திய தேசியம், திராவிட இயக்கத்தின்மீது வெற்றி பெற்றது. அயோத்திதாசப் பண்டிதர் காலம் முதல் 30 ஆண்டு காலமாக திராவிட இயக்கத்தோடு தலித் மக்கள் கொண்டிருந்த உறவு மிக நெருக்கமானது. ரெட்டமலை சீனிவாசன், எம். சி. ராஜா, மீனாம்பாள் சிவராஜ், எஸ். பி. ஐ. பாலகுலசிவம், மேயர் சிவராஜ், மேயர் முனுசாமிப் பிள்ளை என தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர்கள் அனைவரும் திராவிட இயக்கத்தோடு இணைந்து நின்றனர்.[43] 1932 பூனா ஒப்பந்தத்தின் மூலம் 'காங்கிரசு மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலன்' என்ற மாயை உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டைச் சேர்ந்த எம். சி. ராஜா 'வீடணன்' ஆக்கப்பட்டு 1937இல் ராஜாஜி மந்திரிசபையில் அமைச்சராகவும் ஆக்கப்பட்டார். அதன் பின்னர் தாழ்த்தப்பட்ட மக்கள் திரள் மீண்டும் திராவிடக் கருத்தியல் நோக்கி நகர்வதற்கு 40 ஆண்டுக் காலம் ஆயிற்று. தலித் மக்களுக்கு என வலிமையாகத் திரண்ட ஒரு இயக்கம் 30களிலும் 40களிலும் காந்திய மாயையில் கரைக்கப்பட்டது. 40 ஆண்டுக்காலம் தமிழ்நாட்டில் தலித் மக்கள் இயக்கமற்றுப் போயினர்.[44] இவர்களிலும் பெரும்பாலோர் தென்னிந்தியாவில் அம்பேத்கரை அங்கீகரித்த முதல் இயக்கம் 'திராவிட இயக்கம்' என்பதையும் மறந்து போயினர். 1933லேயே அம்பேத்கரின் நூல்களை ஈரோடு குடியரசு பதிப்பகம் தமிழில் வெளியிட்டது.

1930களில் குடியரசு வெளியீடாகவும் ஈரோடு பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடாகவும் வெளியிடப்பட்ட அறிவு நூல்களின் தொகுதி மிகப் பெரியதாகும். இங்கர்சால், பெட்ரண்ட் ரஸ்ஸல் ஆகியோரின் மொழிபெயர்ப்பு நூல்களும் கே. பிரமச்சாரி என்பவர் எழுதிய பிரபஞ்ச உற்பத்தி (1930) பெரியார் எழுதிய 'பிரகிருதி வாதம்' (1934) சிங்காரவேலரின் குடியரசு எழுத்துக்கள் ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்தவையாகும்.

1937 இந்தி எதிர்ப்புப் போராட்டம் தந்த புதிய தெம்பில் 1938இல் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தைப் பெரியார் முன் வைத்தார்.[45] 1937–44 காலகட்டத்தை 'வீரம் மிகுந்த திரா

43. பார்க்க: சிவக்குமரன், பூனா ஒப்பந்தம். நீதிக் கட்சி பவள விழா மலர்
44. சிவக்குமரன், பூனா ஒப்பந்தம். ப. 28 - 32
45. எஸ்.வி.ராஜதுரை வ. கீதா, பெரியார்: சுயமரியாதை சமதர்மம் ப. 680–91

www.padippakam.com



விட தேசியம் உருவான காலம்' என்று வகைப்படுத்துகிறார் நம்பி ஆரூரன்.[46] மிட்டாமிராசுகள் 1937லேயே திராவிட இயக்கத்தில் இருந்து விலகிக்கொண்டனர் என்றால், சமூகத்தின் மேல் தளத்து மக்கள் திராவிட இயக்கத்திலிருந்து 1944க்குள் விலகிக் கொண்டனர். 1949இல் அண்ணாவின் விலகல் திராவிடத் தமிழ் தேசியக் கருத்தியலுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய சரிவாகும்.

1940களில் தமிழ்நாட்டில் அனைத்திந்திய தேசியத்தில் நிகழ்ந்த குறிப்பிடத் தகுந்த மாறுதல் காங்கிரசுக் கட்சியின் தலைமை நிரந்தரமாக பார்ப்பனரல்லாதாரின் கைக்கு மாறியது தான். இதனைக் காங்கிரசுக்குள் 'இராஜாஜி என்ற இந்தியத் தலைவரைக் காமராசர் என்ற (அன்றைய) தமிழகத் தலைவர் வெற்றி கொண்ட கதை' எனக் குறிப்பிடலாம்.[47]

1950களில் தமிழ்த் தேசியக் கருத்தியலின் மறு உயிர்ப்புக்குக் காரணமானது மொழிவழி மாநிலப் பிரிவினையாகும். ஒரு தேசிய இனம் தன் நிலவியல் எல்லைகளைப் பற்றி கொண்ட அக்கறையின் வெளிப்பாடாக 'தேவிகுளம் பீர்மேடு தமிழர்க்கே' என்ற முழக்கத்துடன் எழுந்த போராட்டத்தைக் குறிப்பிடலாம்.

ம.பொ.சி.யின் தமிழரசுக்கழகம், சி. பா. ஆதித்தனாரின் நாம் தமிழர் இயக்கம், தி. மு. க., பொதுவுடைமைக்கட்சி ஆகியவை ஓரணியில் திரண்டு நின்று நீதிக்கட்சியின் பழைய தலைவரான பி. டி. ராஜனைத் தலைவராகக் கொண்டு, கடையடைப்புப் போராட்டம் ஒன்றை நடத்தின. கண்டன ஊர்வலத்தில் ஜீவானந்தமும் வெங்கட்ராமனும் காவல் துறையினரின் தடியடிக்கு ஆளாகிக்

---

46. Nambi Aruran முந்நூல் ப. 219
47. 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலிருந்தபோது, ராஜாஜி காங்கிரசிலிருந்து விலகியிருந்ததும், மீண்டும் அவர் 1945இல் காங்கிரசுக்குள் நுழைய முயன்றதும், திருப்பரங்குன்ற மாநாட்டில் காமராசரும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும் ஒன்று சேர்ந்து காங்கிரசுக்குள் ராஜாஜி நுழைவதை எதிர்த்ததும், அனைத்திந்தியக் காங்கிரசின் துணையோடு ராஜாஜி காங்கிரசுக்குள் திரும்ப வந்ததும், 'திராவிடநாடு' இதழில் அண்ணா 'கோடு உயர்ந்தது; குன்றம் தாழ்ந்தது' என எழுதியதும் தனி நூலுக்குரிய செய்திகளாகும் விரிவான செய்திகளுக்குப் பார்க்க; டி. எஸ். சொக்கலிங்கம், '1945 தமிழர் போராட்டம்' சென்னை, 1957.

படிப்பகம்

www.padippakam.com



காயம் அடைந்தனர்.[48] பெரியாரின் ஆதரவைப் பெற்ற பார்ப்பன ரல்லாதார் ஆட்சி தயங்கித்தயங்கி தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நிறைவேற்றியது. ஆனால் 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்தை ஏற்க மறுத்தது. பார்ப்பனரல்லாதார் ஆட்சியைக் காப்பது என்ற பெயரில் பெரியார் எடுத்த நிலைப்பாடுகள் தமிழ்த் தேசியத்திற்கு உரமூட்டுவதாக அமையவில்லை.

1965இல் தமிழ் மாணவர்கள் மத்தியில் எழுந்த இந்தி எதிர்ப் புப் போராட்டம் மைய அரசின் வல்லாண்மையைக் குறி கொண்டு தாக்கிய போராட்டமாகும். வாக்கு வங்கி அரசியலுக்கு ஆட்பட்ட திராவிடக் கருத்தியலாளர்களின் கட்டுக்களையும் கைகளையும் மீறி எழுந்த நெருப்பாகும் அது.

இன்று அதன் கனல் துண்டுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. பஞ் சாப், அஸ்ஸாம், காஷ்மீர், ஜார்கண்ட், போடோ, சடிஸ்கர் என வடமாநிலங்களில் தேசிய இன உணர்வுகள் அரும்பி வருகின்ற நேரத்தில் அனைத்திந்திய தேசியத்திற்கு மாற்றாக ஒரு தத்து வத்தை வளர்த்தெடுக்க தமிழ்நாடடில் வாக்கு வங்கித் தலைவர்க ளால் இயலவில்லை.

பன்னாட்டு மூலதனங்கள் அணுகுண்டுக்குப் பதிலாக வணிக ஒப்பந்தங்களையும், துப்பாக்கிக்குப் பதிலாக தகவல் தொடர்பு சாதனங்களைக் கையகப்படுத்திக் கொண்டும் பெருவாரியான மக் கள் திரளின் அரசியல் சமூக நலன்களைக் கொள்ளையிடுகின்றன. இது பற்றிய தன்னுணர்ச்சியினை இன்று தமிழ்நாட்டுப் புலமையா ளர்கள் மட்டுமே பெற்றிருக்கிறார்கள்.

தமிழ் தேசிய எழுச்சியின் அடையாளமாகக் கருதப்பட்ட தைப்பொங்கல் விழாவில் தொலைக்காட்சியில் சங்கராச்சாரியார் 'அருளாசி' வழங்குகிறார். தகவல் தொடர்புச் சாதனங்களின் வழி பார்ப்பனியம் அதிகார மையங்களைத் தன்னிடம் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

பெருவாரியான மக்கள் திரளுக்கு இதற்கு எதிர்நிலையான ஞானம் கிடைக்கவில்லை. 'இந்த ஞானம் வந்தால் பின் நமக் கென்ன வேண்டும்' என்பதுதான் தமிழ்நாட்டு புலமையாளர்களின் ஆதங்கமாக இருக்கிறது.

---

48. என்.வி. நடராஜன், 'அவர் கண்ட அறப்போர்.' Sir P.T. Rajan Eighty Second Birthday Souvenir 1973, p. 241-244

படிப்பகம்

# லாவண்யா கவிதைகள்

## 1. சுதந்திரம்

கர்ப்பவாசலுக்கு வெளியே
காத்திருப்பது
அரவணைப்பா அரளியா
நிச்சயமில்லை
பிறக்கிறாள்

ஆடுகளின் தோழமையிலோ
உயிர்த்தேவைகளுக்கு மறைவிடமில்லாத
சிறுநகரின் அரசுப்பள்ளியிலோ
நகர்கின்றன இவளின் பால்யகாலங்கள்

ராமராஜ்யப் பொய்கள்
கத்திமுனையில்
இவளின் கழுத்துச் சங்கிலியைக்
கழற்றிப் போகின்றன.

இவள் சல்வாருக்கு மாறுவதே
சேலையில்
பத்திரம் குறைவதால்தான்
அடுக்களை வேலைகள்
அங்கீகரிக்கப்படாத உழைப்பென்று
அலுவலகம் போனாள்
இருபுறமெரியும் மெழுகுவர்த்தியானாள்

இவளின் தாய்மை
தினமும் காலையில்
நர்சரியின் ஆயாவுக்கு
கூடுபாய்ந்து
முன்னிரவில் திரும்புகிறது

இவள்
பாட்டியாகும்போது
குடும்பத்துக்கு வெளிநபராகும் வாய்ப்பை
காலம்

படிப்பகம்

www.padippakam.com


கருணை இல்லங்களாய்
கோடிகாட்டுகிறது

இவளுக்கென்ன சுதந்திரம் கிடைத்திருக்கிறது?
சில அழகுசாதனங்கள்
சில மின்சாதனங்கள்
ஜீன்ஸ் கால்சராய்கள் தவிர...

## 2. இரும்புச் சிலந்தி

முயல்கள்
புலியின் பற்களில்
காணாமல் போவதுபோல
வயல்களும் பச்சை
மரங்களும்
சிலந்தியின் வயிற்றில் மறைந்தன.

இரும்புச் சிலந்தி
வயல்களை விழுங்கி
காங்க்ரீட் முட்டைகளிடுகிறது.

கிராமத்துச் சிறுவர்கள்
பிடித்த பொன்வண்டுகள்
தீப்பெட்டிகளிலடையும்
நகரத்து சிரமஜீவிகள்
தீப்பெட்டி வீடுகளிலடைக்கப்படுகிறார்கள்.

ஒருவன் வெளிவிடும் சுவாசம்
ஒருவன் உள்வாங்கும் கட்டாயமாய்
ஒருவன் வேர்வையிலடுத்தவன்
நனைகிற நிர்ப்பந்தமாய்
நிகழ்கிறது நகரில் இடம் பெயர்தல்

மாலைமுழுதும் விளையாட்டுக்கு
மைதானங்கள் இல்லை
எதிர்கால டெண்டுல்கர்களுக்குத்
தெருவே மைதானம்

நகரத்துக்கு நாற்பது மைல் தொலைவில்

படிப்பகம்

www.padippakam.com


பண்ணை வீடு
காய்கறித் தோட்டம்
விற்கிறார்கள்
வரிச்சலுகை தரும் அரசை
இரும்புச் சிலந்தியைப்
பின்னிருந்தியக்கும் வியாபாரிகள்

### 3. இருமை

மனம்விட்டுப் பேசுவோம்
நாம் சம்பள அடிமைகள்
நமக்கு இன்னும் விடியவில்லை

லாட்டரிச் சீட்டை சுரண்டிப் பார்த்தோம்
நகம் பெயர்ந்து போயிற்று
நப்பாசைகளை விடமுடியவில்லை

நிதிநிறுவனம் சீட்டுக்கம்பெனி
துவங்கவும் நமக்குத் துணிவில்லை

ராசிபலனைப் பார்த்தோம்
ஜோசியர் அதிர்ஷ்டம் கொட்டுமென்றார்
கூரையில் ஓட்டைபோட்டு வைத்தோம்

எலி, கொட்டாங்கச்சி
தலையிழந்த கோழிக்குஞ்சு
கூரைவழியே வந்து விழுந்தன...

பங்கு வியாபாரம் மீண்டும் செய்ய
அர்சத்மேத்தா அனுமதிக்கப்பட்டிருக்கிறான்

அவன் அடுத்தவன் சொத்தை
அனுபவிக்கப் பிறந்திருக்கிறான்
நாம் லோல்படப் பிறந்திருக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com


## 'சகாரா' கவிதைகள்

### 1. விதிவிலக்குகள்

எவன்டா இங்கே
கள்ளச் சாராயம் காய்ச்சறவன்
வாடா ஒருகை பார்க்கலாம்
கத்தியபடி ஓடிய போலீஸ்காரர்
நீ காச்சு தலைவா
எவன் வந்து தடுக்கறான்னு பார்க்கலாம்
கத்தியபடியே திரும்பி வந்தார்
ஒருகை பார்த்து.

எவண்டா இங்கே
ஆபாசப்படம் ஒட்டறவன்
கிழிங்கடா அவனையும்
அவன் படத்தையும்
பிளிறியபடி ஓடிய தாடிக்காரன்
நீ ஒட்டு மச்சி
எவன்வந்து மயிரப் புடுங்கிருவான்னு
பாத்துடுவோம்
பிளிறியபடியே வந்தான்
கையில் ஓர்
அம்மணப்படத்துடன்

### 2. ஆற்றுப் படை

மனசின் வேக்காட்டை
டிகிரிபோட்டு அளக்கமுடியாமல்
சிமிட்டிய கண்களும் காயும்
ஈர ஓட்டமின்றி
ஆறு வளரும் வழியை
பிளாட் போட்டு விற்றால்
லஞ்சமாவது கிடைக்கும் அதிகாரிக்கு
குடிநீருக்கும் உதவாமல்
பாசனத்திற்கும் பயனின்றி

படிப்பகம்

www.padippakam.com



பாவம் சும்மா ஓடுகிறது
மலமும் மூத்திரமுமாய்
ஆண்டவன்
தீர்த்தச்சொம்பு நிறைய.

## ஐயப்பன்

எப்பொழுது இறந்துவிடப் போகிறேன்
என்று சொல்வதற்கில்லை.
பாடாய்ப் படுத்துகிற
இந்த உடம்பை
மண்ணிற்குள் புதைத்தால்தான் நிம்மதி!
எதையும் அதனால்
தாங்கிக் கொள்ள முடியவில்லை.
சோகம் வந்தால் சுருங்கிப்போகிறது.
மகிழ்ச்சி வந்தால் படபடத்துப் போகிறது.
வெயிலில் திரிந்தால்
வியர்த்துப் போகிறது.
மழையில் நனைந்தால்
நடுநடுங்கிப் போகிறது.
எப்பொழுதும் ஏதாவது ஒரு வியாதியோடு
இருக்கத்தான் பிரியப்படுகிறது.
இந்த மேனியை பாதுகாப்பது என்னவோ
பிரம்ம பிரியத்தனம்தான்
சாகும்வரை.

## கோ. இராஜேந்திரன்

கையேந்தும் தெருவோரத்து
சிறுமிகளாய்
வாய் பிளந்த நிலங்கள்.
எய்ட்ஸ் நோயாளியின்
எலும்புக் கூடாய்

படிப்பகம்

www.padippakam.com


காய்ந்த கிளையுடன்
மொட்டை மரங்கள்

வறண்டு கிடக்கின்றன
கற்களும் புதர்களுமாய்
முகம் பார்த்த கிணறு.

கக்கத்தில் குழந்தையோடு
சும்மாடுகட்டி
குடத்தோடு அலையும்
கிராமத்து அவலங்கள்

எல்லோரும் வானத்தையே
பார்க்கிறார்கள்
மலட்டுவானம்.

வீசுகின்ற காற்றிலும்
ஒளித்துவைத்திருக்கிறான்
நெருப்பை.

பெருமூச்சின் சூட்டில்
தீப்பற்றிக் கொள்ளும்
காய்ந்த வேர்க்கூரைகள்.

அரசாங்கம் நடவடிக்கை
எடுக்கிறது.
எதுவும் சாத்தியம்தான்
செயற்கை முறையில்
கருத்தரிப்பது
மனிதனுக்கும்
மழைக்கும்

இருந்தாலும் எதுவும் தெரியாத
அப்பச்சி
வருணபகவானுக்கு பொங்கலிட்டு
ஆடுவெட்டினாள் குடும்பத்தோடு நேற்றுத்தான்
இன்றைக்கு
அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள்
வானத்தையே
யார் சொல்லியும் கேட்காமல்
செத்த பின்னும்.

●

படிப்பகம்

www.padippakam.com

அவைதிகப் பாரம்பரியத்தில்

# திராவிட இயக்கங்கள்

—பொ. வேல்சாமி—

—சென்ற இதழ்த் தொடர்ச்சி

## பகுதி 2

இந்தியத் துணைக்கண்டம் முழுமையிலும் ஆன கருத்தியல்கள், இயக்கங்கள் ஆகியவற்றை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு பார்த்தோமேயானால் அவற்றுள் வைதிகக் கூறுகள் அல்லது அவைதிகக் கூறுகள் இவற்றில் ஏதாவதொன்று கூடுதலாக இருக்கும். 18ஆம் நூற்றாண்டை ஒட்டி இந்தியத் துணைக்கண்டத்தில் வடக்கில் உருவான பல்வேறு சமூக மறுமலர்ச்சி இயக்கங்கள் பலவற்றிலும் வைதிகக் கூறுகள் மிகுந்திருப்பது கண்கூடு. எடுத்துக்காட்டாக பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இராஜாராம் மோகன்ராய், ராணடே முதலானவர்களால் உருவாக்கப்பட்ட சதி ஒழிப்பு, பாலிய விவாக மறுப்பு, விதவைத் திருமணம் முதலியவற்றிற்கான இயக்கங்கள் எல்லாம்கூட வைதிகக் கூறுகள் மிகுந்த இயக்கங்களாகவே இருந்தன. இந்து மதத்தை நவீன காலத்திற்கேற்ப புத்துயிர்ப்புச் செய்வதே இவர்கள் நோக்கமாக இருந்தது. அடிப்படையில் வேத மேன்மையை இவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். நம் காலத்து நவீனத்துவ நாயகனாகிய பாரதியையும்கூட இத்தகைய வைதிகக் கூறுகள் நிறைந்துள்ளவனாகவே காண முடியும். எனில் வ.வே.சு. ஐயர் முதலான நமது மறுமலர்ச்சி நாயகர்கள் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

மாறாக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக குரல் கொடுத்த பலரும், குறிப்பாக சாதி முறையை கருத்தியல் அளவிலும் இயக்க மட்டங்களிலும் எதிர்த்தவர்கள் பலரும் அவைதிகக் கூறுகள் மிகுந்தவர்களாக இருப்பது கண்கூடு. அண்ணல் அம்பேத்கர் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டோம். வாழ்நாள் முழுவதிலும் வைதிகக்கூறுகளை எதிர்த்தவர் அவர். பிராமணியத்தையும் முதலாளியத்தையும் இரு பெரும் எதிரிகளாய் பறைசாற்றியவர் அவர். தம் வாழ்நாளின் இறுதியில் பெரும் மக்கள் திரளோடு வைதிக இந்து மதத்தை விட்டொழித்துவிட்டு புத்த மதத்தைத் தழுவியவர் அவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றிற்காக வாழ்நாள் முழுமையும் போராடியவர் அவர். கற்பி, ஒன்றுசேர், கலகம் செய் என கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியவர்

படிப்பகம்

www.padippakam.com

அவர். தாழ்த்தப்பட்டவர்க்கான பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க முயற்சித்தவர்.

அம்பேத்கரின் முன்னோடியாக மராட்டியத்தில் விளங்கிய அண்ணல் ஜோதிபா பூலே அவைதிகக் கூறுகளின் மொத்த உருவாகத் திகழ்ந்தவர். வர்ணாசிரமத்தையும், பார்ப்பனியத்தையும் வேரோடு கிள்ளியெறிய முயற்சிகள் மேற்கொண்டவர். கல்விக்கு குறிப்பாக பெண்களின் கல்விக்கு முதன்மை அளித்தவர். எழுத்து முறையில் பாலியல் கூறுகளை ஒழித்து பால்சாரா எழுத்துமுறை ஒன்றை 150 ஆண்டுகளுக்கு முன்பே முயற்சித்தவர்.

தமிழகத்தில் நமது சித்தர் மரபினரும், இராமலிங்க அடிகளாரும், இசுலாமிய மரபில் வந்த சூபி கவிஞர்களும் வைதிக மரபிலிருந்து வெவ்வேறு மட்டங்களில் விலகி நிற்கின்றனர். இராமலிங்க அடிகளார் முதலானோர் சாதிகளை எதிர்த்தமையும், பெண்கல்வி பற்றி பேசியமையும், பசிப்பிணி அகற்றுதலுக்கு முக்கியத்துவம் கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கன.

தமிழறிஞர்கள் அனைவரும் வைதிக மரபில் வரக்கூடியவர்கள் தான் என்று சொன்னால் அது ஒரு மிகையான கூற்றல்ல. விதி விலக்காக சொல்லப்படக் கூடியவர் அயோத்திதாசப் பண்டிதர் (1840–1915). காத்தவராயன் என்ற இயற்பெயர் கொண்ட பறையர் சமூகத்தைச் சேர்ந்த அயோத்திதாச கவிராஜ பண்டிதர் திராவிட மகாஜன சங்கம் (1881) என்ற அமைப்பையும் பின்னாளில் சாக்கிய புத்த மத சங்கம் என்பதையும் உருவாக்கிச் செயல்பட்டவர். தாழ்த்தப்பட்டவர்களுக்கான அரசியல் கோரிக்கைகளை திராவிட மகாஜன சங்கம் முன் வைத்தது. புத்தமதத்தை மீட்டுருவாக்கும் பணியை சாக்கிய புத்த சங்கம் மேற்கொண்டது. வடமொழி, பாலி, ஆங்கிலம், தமிழ் எனப் பல மொழிகளில் ஒருசேர புலமை பெற்ற பண்டிதர் திருக்குறள் அறத்துப் பாலுக்கும், ஆத்திச் சூடிக்கும் புதிய உரை எழுதியுள்ளார். பார்ப்பனரின் மேலாண்மை நிறுவப்பெற்ற சூழ்ச்சி வரலாற்றை "யதார்த்த பிராமண வேதாந்த விவரம்", "வேஷப்பிராமண வேதாந்த விவரம்', என்கிற இருநூல்களில் ஆராய்ந்துள்ளார். இந்திர தேச சரித்திரம், அரிச்சந்திரன் பொய்கள், திருவள்ளுவர் வரலாறு, புத்த மார்க்க வினாவிடை என்பன அவரது நூல்களில் சில. 'ஒரு பைசா தமிழன்' என்கிற இதழைத் தொடங்கி நடத்திய பண்டிதர் வேத மரபிலிருந்து விலகிய புத்த மரபு சார்ந்த தமிழக வரலாறொன்றைக் கட்ட முயன்றவர்.

இத்தகைய அவைதிக மரபின் கடைசி கண்ணியாக நம் கண் முன் காட்சியளிப்பது ஈ. வெ. ரா. பெரியார் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



## பகுதி 3

திராவிட இயக்கம் என்ற ஒற்றைப் பெயரில் நம்மால் இன்று அழைக்கப்படும் இயக்கமென்பது உண்மையில் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்ட பல்வேறு கூறுகளின் தொகுப்பாகும். நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், தனித் தமிழ் இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய பல்வேறு கூறுகளுக்கு இடையேயான பொருத்தப்பாடுகளைக் காட்டிலும் வேறுபடும் கூறுகள் மிகுதி. இவை அனைத்தையும் திராவிட இயக்கம் என்கிற ஒற்றை கருத்தாக்கத்தின் கீழ் இணைப்பதற்கான ஒரே அடிப்படை ஆரிய-திராவிடர் என்னும் முரண் எதிர்வைக் கட்டமைத்து ஆரிய மேலாண்மையை எதிர்த்தது என்கிற ஒரு அம்சத்தில் மட்டுமாகும். நாம் இதுகாறும் சொல்லி வந்தவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது பார்ப்பன மேலாண்மை எதிர்ப்பு என்பது அவைதிக மரபின் ஒரு கூறுதானே ஒழிய அதுமட்டுமே அவைதிக மரபின் அடிப்படையும் ஆகாது. எனவே திராவிட இயக்கக் கூறுகள் எல்லாவற்றையும் பார்ப்பன எதிர்ப்பு என்கிற ஓர் அம்சத்தின் அடிப்படையில் மட்டும் அவைதிக மரபிற்குள் வைத்துவிட முடியாது. திராவிட இயக்கங்களுக்குள்ளும் வைதிக மரபுக் கூறுகள் மிகுந்துள்ளவற்றையும் அவைதிக மரபுக் கூறுகள் மிகுந்துள்ளவற்றையும் வேறுபடுத்திப் பார்ப்பது அவசியம். பெரியாரின் சுயமரியாதை இயக்கம் முற்று முழுதாக அவைதிகத் தன்மையுடன் மிளிர்ந்ததை இங்கே விளக்க வேண்டியதில்லை. நீதிக்கட்சியைப் போலன்றி பெரியார் பார்ப்பனர்களின் அரசியல் மேலாண்மையை மட்டுமன்றி சடங்கு மேலாண்மையையும் எதிர்த்தவர். தனித்தமிழ் இயக்கம் போலன்றி தமிழில் கலந்து போன வடமொழிச் சொற்களை மட்டுமன்றி வைதிகக் கருத்தாக்கங்களையே எதிர்த்தவர். தமிழை (வைதிக) மதத்தால் கறையுண்ட மொழி என்றவர் அவர். பெண் விடுதலை குறித்து மிக நவீனமான சிந்தனைகளை முன் வைத்தது மட்டுமல்லாமல் இயக்க நடவடிக்கைகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்தவர். தர்மாம்பாள், மூவலூர் இராமாமிர்தம், மணியம்மை போன்ற பெண்கள் இயக்கத்தில் தலைமையேற்க வழி வகுத்தவர். வைதிகக் கூறுகளில் ஒன்றான தேவதாசி மரபை முத்துலெக்ஷ்மி ரெட்டி எதிர்த்த போது, சத்தியமூர்த்தி ஐயர் போன்ற வைதிகர்களுக்கு எதிராக முத்துலெக்ஷ்மி அம்மையை ஆதரித்து தேவதாசி முறை ஒழிப்பிற்குக் காரணமானவர். அடித்தட்டு மக்களின் கல்விக்கும் இட ஒதுக்கீட்டிற்கும் வாழ்நாள் எல்லாம் போராடியவர். அம்பேத்கர் போன்று அடித்தட்டு மக்களுக்கு கல்வி நிறுவனங்களை உருவாக்க முனைந்தவர்.

படிப்பகம்

www.padippakam.com



திராவிட இயக்கத்தின் கூறுகளில் ஒன்றாகிய தனித்தமிழ் இயக்கத்தை அவைதிக மரபில் வைத்துப் பார்ப்பதற்கான கூறு களே ஏதும் இல்லை. முற்றிலும் வைதிக மரபு சார்ந்த ஒரு இயக் கமாகவே சுந்தரம் பிள்ளையால் கால்கோளிடப்பட்டு மறைமலை யடிகளால் உருவாக்கப்பட்ட தனித்தமிழ் இயக்கத்தைக் காண முடி யும். ஆரியக் கூறுகளை மிகக் கடுமையாக அவர்கள் எதிர்த்த போதும், ஆரிய வேதங்களை இவர்கள் மறுத்த போதிலும் சைவம் மூலமாக இவர்கள் வேத மேலாண்மையை ஏற்றுக்கொள்ள வேண் டிய அவசியம் ஏற்படுகின்றது. நாங்கள் சொல்வது தமிழ் வேதம் என இவர்கள் முழக்கமிட்ட போதும் தமிழ் வேதம் என்றால் என்ன, அவை எவ்வகையில் ஆரிய வேதத்திலிருந்து வேறுபடுகின் றன என்பதை அவர்கள் விளக்கியதில்லை; விளக்கவும் முடியாது. நீதிக்கட்சி அரசியல் ரீதியாக மட்டுமே பார்ப்பன மேலாண்மையை எதிர்த்தது. பார்ப்பனரின் மேலாண்மையை சடங்களவில் ஏற்றுக் கொண்டது. இட ஒதுக்கீட்டைத் தாண்டி அது போனதில்லை. திராவிடநாடு திராவிடர்க்கே, தனித்தமிழ் நாடு ஆகிய முழக்கங் கள் நீதிக்கட்சியின் எல்லைக்கு அப்பாற்பட்டவை. தி மு. க. வைப் பொறுத்த மட்டில் அவைதிகக் கூறுகளை முதன்மையாகக் கொண்டு அதன் தொடக்கம் இருந்ததெனினும் நவீன அரசு ஒடுக்கு முறை இயந்திரத்திற்கான குடிமக்களை உருவாக்கும் பணியை அது தனது தலையாய பணியாக ஏற்றுக்கொண்ட பின்னர் அது தனது வைதிக எதிர்ப்புக் கூறுகளை மழுங்கடித்துக் கொண்டது.

## பகுதி 4

திராவிட×ஆரிய என்ற முரண் எதிர்வு கட்டமைவே தமிழ ரின் வீழ்ச்சிக்கு காரணம் என்ற ஒரு குரல் இன்று வலுவாகத் தமிழகத்தில் ஒலிக்கத் தொடங்கி உள்ளது. (குணா— திராவிடத் தால் வீழ்ந்தோம்) பார்ப்பனிய (ஆரிய) எதிர்ப்பு என்பதைக் காட் டிலும் திராவிட எதிர்ப்பு என்பதே சரியாக இருக்கமுடியும் என்று ஒலிக்கிறது இந்தக் குரல். தமிழர்களின் வீழ்ச்சிக்குக் காரணம் திராவிடப் படையெடுப்புகள், தெலுங்கர், கன்னடர், மலையாளி கள் முதலானோரின் ஆதிக்கம்தான் என்று ஒலிக்கிறது இந்தக் குரல். இது எந்த அளவிற்குச் சரியானது என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் நமது கட்டுரைத் தலைப் புடன் பொருந்தக்கூடிய ஒரு சில அம்சங்களை இங்கு சுட்டிக் காட் டுவது அவசியம். திராவிடத்தால் வீழ்ந்தோம் என்கிற இந்தக் குரலை ஒலிப்பவர்கள் தமிழர்களின் எதிரிகளாக சுட்டிக்காட்டு பவை பெரியாரின் திராவிட இயக்கம், சமண, பௌத்த மரபுகள், களப்பிரர் காலம் முதலியன. தமிழின் பொற்காலமாக இவர்கள் சுட்டுவது வைதிகம் கோலோச்சிய மூவேந்தர் ஆட்சி, பல்லவ சோழ

படிப்பகம்

www.padippakam.com



ஒருங்கிணைப்பு, சமண–பௌத்தத்தை வீழ்த்திய சைவ, வைணவ பக்தி இயக்க காலம், மறைமலையடிகளார் உள்ளிட்ட தனித்தமிழ் இயக்கம். 'திராவிட' என்கிற கருத்தாக்கம் இன்று எந்த அளவுக்குப் பொருந்தும் என்பது விவாதத்திற்கு உரிய ஒன்று என்பதில் நமக்குக் கருத்து மாறுபாடில்லை. ஆனால் திராவிடம் என்கிற கருத்தாக்கத்தை எதிர்க்கிறோம் என்கிற பெயரில் பெரியார், சமண பௌத்த முதலான அவைதிகக்கூறுகளையே எதிர்ப்பதும் சைவம், வேதம் (தமிழ்ப் பார்ப்பனியம்) ஆகியவற்றை ஆதரிப்பதும் மிகவும் ஆபத்தானது. இத்தகையோர் பெரியாரை மட்டுமல்ல– அம்பேத்கர், அயோத்திதாசப் பண்டிதர் போன்றோரையும் மறுப்பதாக உள்ளது கவனிக்கத்தக்க ஒன்று. ●

---

## அவன் வேலை

—ககன்

வெளிநாடு போய்
கக்கூஸ் கழுவும்
வேலைதான்
வாய்த்தது...
அங்கு
சம்பாதிச்ச காசில்
இங்கு
அக்ரஹாரத்தில்
வீடு வாங்கி
போட்டான பின்...
ஊர் திரும்புகிற நாளில்
ஊதாரிப்பயல்களுக்கு
வெளிநாட்டு மது
விருந்து வைத்து...
"ஆமா
அந்த சேரிப்பயலுவ
ரொம்ப துள்ளுனானுகளாமே
திருவிழாம்போது..."
என
அணைந்த நெருப்பைத்
தூண்டிவிட்டு
மீண்டும்
பீ கழுவ
வெளிநாடு
போவான்
அவன்...

படிப்பகம்

www.padippakam.com

# சிந்திக்கிறார்களாம் சில நொடிகளில்...

—மு. சிவகுருநாதன்—

மலந்துடைக்கப் பண்ணிய[1] 'இந்தியா டுடே'யின் அரசியல் நாம் அறிந்ததுதான். திராவிட இயக்கம், தலித்தியம் போன்றவற்றைக் காய்வதும், பெண்ணியம் என்ற பெயரால் பார்ப்பனிய மதிப்பீடுகளை உயர்த்திப் பிடிப்பதும், கலாச்சாரம், தேசியம் என்று பேசி மொத்தத்துவ இந்து கலாச்சாரத்தையும் இந்து தேசியத்தையும் கட்டிக் காப்பதும், பெண்கள் பங்கேற்கும் விவாதத்திலும்கூட சமூகநீதி, இடஒதுக்கீடு போன்றவற்றைப் பழிப்பதுமான இன்னபிற வேலைகளும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

"யாகாவாராயினும் நாகாக்க"[2] என்னும் தலைப்பில் கருணாநிதி பார்ப்பனப் பத்திரிகைகளைக் குறை கூறியதை "பத்திரிகைத் துறைமீது தாக்குதல்; ஜனநாயகத்திற்கு ஆபத்து"[3] என்று வீரிடுகிறார் வாஸந்தி. ஜெயலலிதாவைப்பற்றி எல்லாப் பத்திரிகைகளும் எழுதிய பின்புதான் கருணாநிதிக்கு வெற்றி சாத்தியமாகியது என்ற மிரட்டல் வேறு.

அடுத்து, "பிராமண குலத்தில் பிறந்த ஜெயலலிதாவை எந்த பிராமண பத்திரிகை கண்டிக்காமல் விட்டது?"[4] என்று கேள்வி கேட்கிறார். கே. ஆர். நாராயணனைப் பற்றி எழுதும் போது தாழ்த்தப்பட்ட சாதி என்று குறிப்பிடும் இவர்கள் ஜெயலலிதாவை 'பிராமண குலம்' என்று குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும்.

பீகார் பிரச்சினைகளுக்கு "லல்லு கைது எப்போது?"[5] என்று கிண்டல் செய்யும் தினமலர் போன்ற பார்ப்பன பத்திரிகைகள், ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது "ஜெயா கைது எப்போது?"[6] என்று செல்லமாகக்கூடக் கேட்டதில்லை!

"இந்துக்களுக்கு சரித்திர உணர்வே கிடையாது"[7] என்ற அரேபியப் பயணி அல்பரூனியை மேற்கோள் காட்டி, "கருணாநிதிக்கு சரித்திர உணர்வே இல்லை" என்கிறார். அல்பரூனி சொன்னது சரியாகத்தான் இருக்க வேண்டும். கருணாநிதி "நானொரு இந்து" என்று எங்காவது கூறியிருக்கிறாரா? அல்லது திருப்பதிக்கு மாதமொரு மொட்டையடித்தும் சங்கராச்சாரி காலில் விழுந்தும் எழுந்திருக்கிறாரா? என்று வாஸந்திக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை.

படிப்பகம்

www.padippakam.com



மற்றொரு 'சிந்தனை'யில், "இன அடையாள கோஷம் விபரீத அர்த்தங்களை ஏற்படுத்தும். சமுதாய ஏற்றத்திற்கு உதவாது"[8] என்கிறார். 'தமிழன் என்கிற மொழியடையாளம், திராவிடன் என்கிற இன அடையாளம் வேண்டாம். ஆனால் இந்து என்ற மத அடையாளம் மட்டும் வேண்டும்' என்பதுதானே வாஸந்தியின் உள் நோக்கம்?

'பத்திரிகை ஜனநாயகம், தூண், அது, இது...' என்று பேசும் போது இன்னொன்றும் ஞாபகத்திற்கு வருகிறது. ஜெயலலிதாவை எதிர்த்த சுப்ரமணியசுவாமி அவருடன் சேர்ந்துவிட்டாரே! என்று வியப்பு மேலிட எழுதுகின்றன. அவர் அந்நியக் கைக்கூலி என்பதை மறைத்து, ஏதோ புனிதம் கெட்டுவிட்டதாகக் கூத்தடிப்பது அபத்தமாயிருக்கிறது. "ஜெயலலிதாவின் மீது தொடுத்த குற்றச்சாட்டுகள், வழக்குகள், புகார் மனுக்கள், போன்றவற்றை வாபஸ் பெறுகிறேன். தெரியாமல் செய்துவிட்டேன்," என்பது தான் சாமியின் நிலை. இதேபோல் ஆளுங்கட்சி எதிர்ப்பு என்ற பெயரில் ஜெயலலிதாவைப் பாராட்டி எழுதப் போவது திண்ணம். இதுதான் தூண்களின் வேலை அல்லவா.

இந்தச் சரணடைதலுக்கு இன்னொரு உதாரணமும் உண்டு. போஃபர்ஸ் பேர வழக்கில் வரிந்து கட்டிக்கொண்டு எழுதிய ஆள் தான் அருண்செளரி. போஃபர்ஸ் பிரச்சினையில் வி. பி. சிங்கை ஆதரிக்கும் போது 'தீர்க்கதரிசி' 'சோ' அவரை எச்சரித்தாரம். 'அதை கேட்காமற் போனதன் பயன் இப்போதுதான் தெரிகிறது' என்று எழுதுகிறார் அருண்செளரி.

மேலும், "சமூகநீதி என்று பேசிக்கொண்டு ஒரு தலைமுறையைக் குட்டிச்சுவராக்கும் லாலு போன்றவர்கள் (வி. பி. சிங்கையும் சேர்த்துதான்) 50 பேரை சிறையில் அடைத்தால்தான் நாடு உருப்படும்", என்கிறார் செளரி. மண்டல் எதிர்ப்பும் இந்துத்துவ வெறியும் நன்கு வெளிப்படுவதை இதனால் உணரலாம். வி. பி. சிங் என்ற 'துரோகி'யை நம்பி ராஜீவ் காந்தி என்ற 'திருவாளர் பரிசுத்தத்தை"க்[9] காட்டிக் கொடுத்து விட்டேனே," என்ற பலமான வருத்தம் அருண்செளரிக்கு. பத்திரிகை தர்மம், ஜனநாயகத்தின் தூண்கள் போன்ற பம்மாத்துகளனைத்தும் ஒருவாறு விளங்கத் தான் செய்கிறது.

பீகாரில் லாலூ தொடங்கிய ராஷ்ட்ரிய ஜனதா தளத்தை ஐக்கிய முன்னணியில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற தி. மு.க. வின் முடிவை விமர்சித்து "ஊழலை எதிர்ப்போம் என்ற கோஷத்தில் மாற்றம் ஏன்?"[10] என்று கேள்வி எழுப்புகிறார் வாசந்தி.

படிப்பகம்

www.padippakam.com



இதற்கு முந்திய இதழில் போஃபர்ஸ் பிரச்சினையில் ராஜீவ் காந்திக்குப் பங்கில்லை என்று சொல்லி அருண் நேருவைத் தாக்கி மணிசங்கர் அய்யர் எழுதியிருக்கிறார். இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி போன்றவற்றில் மன்னிப்பு கேட்காத குறையாக அருண் சௌரி அழுது புலம்பியிருக்கிறார். இங்கு மணி சங்கர் அய்யர் ஆதாரம் கிடைத்த பிறகும்கூட ஊழலே நடக்கவில்லை என்றும் பங்கில்லை என்றும் வாய்கூசாமல் சொல்லமுடிகிறது. வாஸந்தி, அருண்சௌரி, மணிசங்கர் அய்யர் போன்றவர்களுக்கு ஒரு நியாயம், கருணாநிதிக்கு ஒரு நியாயம் என்பதுதான் அவர்கள் ஓம்பும் வர்ணாசிரம தர்மம் போலும்.

இடஒதுக்கிடு என்று வருகிறபோது பாலச்சந்தர், கமலஹாசன், மணிரத்னம், ஷங்கர் போன்ற பார்ப்பன சினிமாக்காரர்களும் சுஜாதா, மாலன், வாஸந்தி போன்ற 'பிரபல தமிழ் எழுத்தாளர்'களும் ஒரே நேர்கோட்டில் வந்துவிடுகின்றனர். ஜென்டில்மேன்[11] சினிமா ஒரு உதாரணம். சுஜாதா போன்றோர் பண்ணுகின்ற கதைகளிலும் இட ஒதுக்கீட்டினால் பார்ப்பனர்கள் முழுமையாகப் பாதிக்கப்படுவதாகக் காட்டி, ஒதுக்கீட்டை முடிந்தவரை கிண்டல் செய்து பார்ப்பான் ஒருவன் இவ்வளவையும் தாண்டி முதலிடம் பெறுகிறான் என்று கதைக்கிற கதையும்[12] உண்டு.

"நூறு சதவீதம் பைத்தியக்காரத்தனம்"[13] என்ற தலைப்பில் எழுதும் ஸ்வபன் தாஸ் குப்தா "இந்த ஒதுக்கீடு பந்தயக்கதை நமக்கு வழங்குவது பல நீதிகள். மிகமிகக் கசப்பான நீதி சமூகநீதிப் பாசாங்கு பண்ணிப்பண்ணி இந்தியா பயித்தியக்கார ஆஸ்பத்திரி ஆகிக்கொண்டிருக்கிறது"[14] என்று காழ்ப்பை அள்ளித் தெளித்து "நேற்று பெண்களுக்கு ஒதுக்கீடு. நாளை பிற சிறுபான்மையினரும் கேட்பார்கள்"[15] என்று எச்சரிக்கை செய்கிறார். இதைப் படிக்கும் போது நமக்குத் தோன்றுவது இதுதான்: வாஸந்தியோடு சேர்ந்து நிறைய பயித்தியங்கள் உலா வருகின்றன என்பதே. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அடிமைகளாய் முகமிழந்தவர்கள் இன்று தம் முகத்தை ஓரளவுக்கேனும் வெளிக்காட்ட முனைகிறபோது இந்தப் பார்ப்பன அறிவுஜீவிகளின் அயோக்கியத்தனங்கள் நுரைத்துக் கொப்பளிக்கின்றன.

சுதந்திர தினப்பொன்விழாவைப் பற்றி எழுதுகிறபோதுகூட "யாருக்காக இந்தக் கொண்டாட்டம்?"[16] என்று கேட்டு "92·/. மதிப்பெண் பெற்று, மேல் ஜாதியில் பிறந்துவிட்ட குற்றத்துக்காக கல்லூரியில் இடம் கிடைக்காமல் தவிக்கும் மாணவனுக்காகவா?"[17] என்று அடுக்கிக் கொண்டே போகிறார். அந்தோ! பரிதாபம்! 'இவ்வளவு மதிப்பெண் வாங்கிவிட்டு செருப்புக்குப்

படிப்பகம்

www.padippakam.com



பாலிஷ்[18] போடமுடியுமா என்ன? எனவேதான் தீக்குளித்துத் தன்னை மாய்த்துக் கொள்கிறார்கள். ஏனென்றால் பார்ப்பான் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாத பிறவியாயிற்றே' என்றுகூட அங்கலாய்க்கலாம். இவ்வளவு ஆண்டுகளாக செருப்பு தைத்துக் கொண்டு, மலம் அள்ளிக்கொண்டு இருந்தவர்கள் நீங்கள் உட்கார்ந்திருந்த இடங்களில் அமரும்போது உங்களுக்கு என்னமாய்க் கோபம் வருகிறது! அவர்களை முன்னேறவிடாமல் தடுத்து அந்த இடங்களை எவ்வளவு காலம் நீங்கள் பற்றிக் கொண்டிருந்தீர்கள் என்பதைமட்டும் உணர மறுப்பது ஏன்?

மேலும் இடஒதுக்கீட்டின் மூலம் தகுதியற்றவர்கள் பணிக்கு வந்துவிடுவதால் நிர்வாகம் சீர்கெடுகிறது என்ற அவதூறை பார்ப்பன பத்திரிகைகள் திட்டமிட்டே பரப்பிவருகின்றன. ஒரு சமயம் 'சுதந்தரப் போராட்ட தியாகி' சி. சுப்ரமணியம் "உயிர் காக்கும் மருத்துவத்துறை தவிர்த்து பிறவற்றுக்கு மட்டும் இடஒதுக்கீடு செய்யலாம்," என்று விதிவிலக்கு வகுத்து அருளிப்போந்தார். இங்கே இடஒதுக்கீட்டினால் வந்தவர்கள் எந்தத்துறையைச் சீரழித்தார்கள்? 92·/ மதிப்பெண் பெற்றவர்கள் எதையெல்லாம் கட்டிக்காத்தார்கள் என்பதை நாம் நாளும் அறிந்துதான் வருகிறோம்.

கே. ஆர். நாராயணன் குடியரசுத் தலைவரானது குறித்து எழுதும் இந்தியா டுடே "தலித் என்பதால் நாராயணனுக்கு இந்தப் பதவி என்பது அவரது ஈடு இணையற்ற சாதனைகளை புறக்கணிப்பது போலாகும்"[19] என்கிறது. 'தலித்'துன்னு சொல்லி இடஒதுக்கீடு மாதிரி தகுதியில்லாதவரை உட்கார வைத்துவிடவில்லை. பாத்திரமறிந்துதான் பிச்சை போட்டிருக்கிறோம் என்பதாக இதற்குப் பொருள்.

ராமதாசின் கருப்புக்கொடி போராட்டம், மற்றும் தலித்துக்களின் பொன்விழா எதிர்ப்பு போராட்டம் பற்றி எழுதும்போது வாஸந்தி, "யாரை அவமானப்படுத்துகிறார்கள்?" என்று கேள்வி கேட்டு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று துரதிர்ஷ்டவசமாக முன்னிறுத்தப்பட்டாலும் சொந்தத் தகுதியாலேயே ஜனாதிபதியாயிருக்கும் நாட்டின் தலைமகனையல்லவா?"[20] என்று பதிலும் தருகிறார்.

இத்தனை ஆண்டு காலமாக அதிகாரத்தில் மிதந்து கிடந்தவர்களுக்கு தலித்துகள் கையில் அதிகாரம் என்பது ஜீரணிக்க முடியாத ஒன்றாக மாறியிருக்கிறது. அதற்கு எல்லாவித சப்பைக் கட்டையும் கட்டத் தயாராக இருக்கிறார்கள்.

தேவகௌடவிற்குப் பிறகு பிரதமர் பதவிக்கு ராம்விலாஸ் பாஸ்வான் பெயர் பேசப்பட்டபோது குடியரசுத் தலைவர் பதவியை

படிப்பகம்

www.padippakam.com



நாராயணனுக்கு அளிக்கப் போவதால் மற்றொரு தலித்திற்கு பிரதமர் பதவி தேவையில்லை என்று தட்டிக் கழித்தனர். ஜவகர்லால் நேரு- ராஜேந்திர பிரசாத் முதல் நரசிம்மராவ்-சங்கர்தயாள் சர்மா ஈறாக எத்தனையோ ஆதிக்கக்காரர்கள் ஒருங்கே இரண்டு பதவிகளையும் வகித்து குப்பை கொட்டியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் ஒரே சாதியினருக்கு இரு பெரிய பதவிகளுமா என்று ஒரு நாயும் குலைக்கவில்லை.

பி. ஜே. பி. தன்னுடைய ஓட்டு வங்கியில் தலித்துகளை இணைப்பதற்காக வேறு வழியின்றி நாராயணனுக்கு ஆதரவு கொடுத்த உண்மையை மறுத்து, "பார்த்தீர்களா, காங்கிரஸ், பி. ஜே. பி., ஐக்கியமுன்னணி ஆகிய அனைத்தும் சேர்ந்து குடியரசுத் தலைவராக கே. ஆர். நாராயணனைக் கொண்டு வந்துள்ளதை" என்று ஜெயகாந்தன் பீற்றிக்கொள்வதை இத்தோடு இணைத்துப் பார்க்கலாம்.[21] பி. ஜே. பி.யும் ஐக்கிய முன்னணியும் இணைந்து செயற்படும் தருணம் இது என்று அடுத்த இதழில் எழுதப்போவதையும் இடதுசாரிகளும் பி. ஜே. பி. யும் இணைந்து செயற்பட தக்க சமயம் இதுவே எனறு அடுத்த கலை இலக்கியப் பெருமன்றக் கூட்டத்தில் பேசப் போவதையும் கண்டு கொள்ளாமல் விட்டுவிடலாம். செத்த பாம்பை அடித்தென்ன லாபம்?

"தமிழருக்கே என்று கோஷம் போடுபவர்கள் இந்துத்துவ கோஷங்களை விமர்சனம் செய்ய முடியாது"[22] என்று வாஸந்தி பிறிதோர் இடத்தில் நியதி வகுக்கிறார்.

இந்துத்துவ கோஷங்களை எழுப்புபவர்கள் யார்? பி. ஜே. பி., ஆர். எஸ். எஸ்., வி. எச். பி., பஜ்ரங்தள், இந்து முன்னணி, சிவசேனை ஆகிய கட்சிகள்மட்டுமல்ல. வாஸந்தி, மணிரத்னம், போன்ற பார்ப்பன அறிவுஜீவிகள், பார்ப்பனப் பெருமுதலாளிகள், அனைத்து கட்சிகளிலும் (கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்பட) ஊடுருவியுள்ள பலருந்தான். இவர்களில் சிலர் இந்துத்துவ கோஷத்தை நேரிடையாக எழுப்ப முடியாமல் 'இந்தியன்' என்ற கோஷத்தை எழுப்பி வருகின்றனர். இறுதியாக இவர்கள் அனைவரும் ஒன்று சேரும் புள்ளி இந்துத்துவமே.

இந்தியா என்பதையே அரசமைப்புச் சட்டத்தில் ஒன்றியம் (Union) என்று குறிப்பிடுகிற போது அதைத் தேசம் என்ற வரையறைக்குள் எப்படி அடக்க முடியும் என்று தெரியவில்லை. அப்போது தமிழன், மலையாளன், தெலுங்கன், மராட்டியன், போன்ற மொழியடையாளமே மேலெழும்பும். 'இந்தியன்' என்ற கோஷத்தை எழுப்பிக் காட்டுக் கூச்சல் போடுபவர்கள் இதைச் சிந்திப்பதே கிடையாது.

படிப்பகம்

"ஒரு தலைவருக்கு பிரதமர் பதவி கிடைக்கவில்லை என்றால் தமிழினத்திற்கு ஏற்பட்ட அவமானம்"[23] என்று பேசுகிறார்களாம். இதை எழுதியது யார் என்பதை உணர வாஸந்திக்கு நெடு நேரம் பிடிக்காது. பிரச்சினையை உருவாக்கி அதில் குளிர்காயும் பண்பும் ஆமை போல் உடம்பை உள்ளிழுக்கும் பண்பும் யாருக்கு இருக்கிறது?

"சாதிக்கலவரங்களா? அதற்கான சமூகப் பொருளாதார காரணங்களை ஆராயப் பொறுமையில்லையா? உசுப்பிவிடு தமிழின உணர்வை"[24] என்று தமிழினத்தின் இன்றைய நிலையை நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் என்பீர்கள். கொஞ்சம் பொறுங்கள், வாஸந்தியே சமூகப் பொருளாதார காரணிகளை ஆராய்ந்து நமக்கு விண்டுரைக்கிறார்.

"தமிழகத்தில் தென்மாவட்டத்தில் நடைபெறும் சாதிக் கலவரத்திற்கு அரிசன மக்களின் பொருளாதார முன்னேற்றமும், பொறுமையின்மையுமே காரணமாகும்."

எப்படியிருக்கிறது ஆராய்ச்சி! தலித்துகளுக்குப் பொறுமையில்லையா? தமிழின உணர்வை உசுப்பிவிடுபவர்களுக்குப் பொறுமையில்லையா? அல்லது வாஸந்தி கூட்டத்துக்குப் பொறுமை இல்லையா? மேலும், "பூகோள, சரித்திர, சமூகக் காரணங்கள் என்ன என்று ஆராயும் துணிவில்லாமல், தீர்க்கதரிசனம் இல்லாமல்..."[25] என்றெல்லாம் எழுதிக்கொண்டிருக்கும்– துணிவு, தீர்க்கதரிசனம் ஆகியவற்றை நிரம்ப உடைய வாஸந்தி, மணிசங்கரய்யர், ஸ்வபன்தாஸ் குப்தா போன்றோரின் கைவரிசை இந்தியாடுடே பக்கங்களில் இறைந்து கிடைக்கிறது.

வாஸந்தியும் சரி, ஸ்வபன்தாஸ் குப்தாவும் சரி எழுதும் கட்டுரைகளில் மேல்சாதி×கீழ்சாதி சொல்லாக்கங்களுக்கு குறைவில்லை. வருணாஸ்ரம கொள்கையை ஏற்றுக் கொண்டு பார்ப்பனீய மேலாண்மையை நிறுவ முயலும் ஆதிக்க உணர்வு நிரம்பிய இவர்களால் வேறு எப்படி எழுத முடியும்? உயர்த்தப்பட்ட சாதி×தாழ்த்தப்பட்ட சாதி என்ற சொல்லாக்கங்களை இங்கு காணவே முடியாது.

சாதிக்கலவரம் நடந்த தென் மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்து "திருவிழா காலத்திலும் பூசையில்லை"[26] என்று கண்ணீர் சிந்தி ஆதங்கப்பட்டு வெறுமை குடிகொண்டிருக்கிற கோயிலின் படத்தைப்போட்டு அங்கலாய்க்கிறார் வாஸந்தி.

அம்பேத்கர் சிலைக்கு 'புனிதக்கேடு' என்று கிண்டல் செய்கிறார் தாஸ் குப்தா. மேலும் "மகாராஷ்டிரத்தில் வெடித்துக்

www.padippakam.com


கிளம்பியதாகச் சொல்லப்பட்ட அந்த 'தலித்' கோபம் நியாமானது; கண்ணீர்விட்டுக் கதறக்கூடிய அளவுக்கு அனுதாபத்திற்குரியது என்று கருதப்பட்டால், இதே மாதிரி வேறு ஜாதியோ அல்லது ஒரு மதக்குழுவோ தங்களுக்கு அவமதிப்பு இழைக்கப்பட்டதாகச் சொல்லி வன்மத்துடன் ரியாக்ட் செய்யும் போது அதையும் மனிதாபிமான கண்ணோட்டத்தில்தான் பார்க்கவேண்டியிருக்கும். பிகாரில் இரண்டு சாதிகளுக்கிடையே நடக்கும் முடிவற்ற மோதல்களை சமூகவியல் பாசாங்கு பண்ணி மன்னித்து விட வேண்டுமா?''[27] என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போகிறார். தற்போது இந்தியா முழுமையும் தலித் எழுச்சி வெடித்துக் கிளம்பியிருப்பதைக் கண்டு பொறுக்க முடியாமல் கதறுவது கண்கூடாகத் தெரிகிறது. மண்டல் எதிர்ப்பு வன்முறையில் மேலாதிக்க சாதியினர் எவ்வளவு தீவிரத்துடன் இறங்கினார்கள் என்பதும், மேலும் பல பத்திரிகைகள் உள்பட பலர் அதை எப்படி தூபம் போட்டு வளர்த்தனர் என்பதும் நமக்கெல்லாம் தெரியும். அந்த மாதிரியான உயர்த்தப்பட்ட சாதியினரின் வன்முறையை மனிதாபிமான கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டுமாம். தலித் கோபம் மட்டும், ''அனுதாபத்திற்குரியது என்று கருதப்படலாம்'' தான். இதுவே எழுத்து வன்முறை. (அழுத்தம் நம்முடையது.)

''பசையான பணிகளில் பெரும்பாலானவை SC அதிகாரிகளுக்கே ஒதுக்கப்படுகிறது''[28] என்கிறார். அது என்ன பசையான பணி? இந்தப் பணியில் இதுவரை யார் அடைத்துக் கொண்டிருந்தார்கள் என்பது புள்ளி விவரங்கள் சொல்லும். நாடு விடுதலை அடைவதற்கு முன்பும், 50 ஆண்டுகள் ஆகிய இன்றும் அதிகாரத்துவ உயர் பதவிகளில் யார் அதிகமாக அமர்ந்திருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாததல்ல.

இங்கு அனைவரும் ஊழல் பேர்வழிகளாக இருப்பதால் வீரப்பனுக்கு வக்காலத்து வாங்குவது போன்ற தோற்றத்தில் கருணாநிதியை தாக்குகிறார் வாஸந்தி. ''சம்பல் காடுகளில் ஒரு மாபெரும் இயக்கம் நடந்ததே நினைவிருக்கிறதா? ஒரு எளிய மனிதர் சொன்ன வார்த்தைகளுக்காக உயிர்களை கொசுக்களை அடிப்பது போல் மாய்த்து வாழ்ந்த கொலைகாரர்கள் பொத்பொத்தென்று அவரது பாதங்களில் ஆயுதங்களைப் போட்டு சரணடைந்தார்களே நினைவிருக்கிறதா? இதேபோல் இங்கு யாருடைய சொல்லுக்சாவது பணிந்து சந்தனக் கடத்தல் வீரப்பன் தனது ஆயுதங்களைக் கீழே போட்டு சரணடைவான் என்று நம்மால் கற்பனைகூட செய்ய முடியுமா?''[29] என்று, சரணடையும் பேச்சு தொடங்கிய நேரத்தில் எழுதி திசை திருப்புகிறார். ஜூனியர் விகடன் 'வீரப்

படிப்பகம்

www.padippakam.com



பனுக்கு மன்னிப்பு அளிப்பதா?' என்று குமுறும் குடும்பங்களின் பேட்டியை வெளியிடுகிறது. குமுதம், வீரர் தேவாரத்தின் பேட்டியை வெளியிட்டு புளகாங்கிதம் அடைகிறது. சோ மாதிரியான ஆட்கள் பற்றிச் சொல்லவே வேண்டாம். 'பூலான்தேவி எம். பி. யா? என்னும் காட்டுக்கத்தல் இன்னும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. இவர்கள்தான் சமூகவியல் பார்வை உடையவர்கள் என்றும் பத்திரிகையாளர்கள் என்றும் வலம் வருகிறார்கள். வெட்கக்கேடுதான் இல்லையா?

சாதிக் கலவரங்களுக்கு சமூக-பொருளாதார காரணங்களை ஆராய்ந்து விண்டுரைத்த இவர்கள், அரசுக்கு பூகோள, சரித்திர, சமூகக் காரணங்களை ஆராயும் துணிவில்லை என்றும் தீர்க்க தரிசனம் இல்லை என்றும் அரசை சாட என்ன தார்மீக உரிமை கொண்டிருக்கிறார்கள் என்று நாம்தான் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும்.

தலித்துகளின் போராட்டம் அரசை எதிர்த்து அல்ல. அவர்களை அவர்களே எதிர்த்துதான் என்ற மாயையை வாஸந்தி உருவாக்கி போர்க்குணத்தை மழுங்கடிக்கப் பார்க்கிறார்.

"அது சரி. யார் மீது இவர்கள் கோபத்தைக் காண்பிக்கிறார்கள்? யாரை அவமானப்படுத்துகிறார்கள்? இந்திய அரசியல் சாசனத்தை வடிவமைக்கும் உயரத்திற்கு உயர்ந்து அறிவே ஆயுதம் என்று உணர்த்திய தாழ்த்தப்பட்ட சமூகத்தின் மாணிக்கத்தையல்லவா?"[30] என்று எழுதுகிறபோது வாஸந்தியின் ஊடறுக்கும் சாகசம் நன்கு விளங்குகிறது.

அம்பேத்கரின் எழுத்தும் பேச்சும் இதற்குப் பதிலாக விளங்கும். அரசியல் சட்டத்தை எழுதியது பற்றி அம்பேத்கர், "நான் கூலிக்கு எழுதுபவனாக இருந்தேன். நான் எதைச் செய்ய வேண்டும் என்று எனக்குச் சொல்லப்பட்டதோ அவற்றை என் சித்தத்திற்கு மிகவும் எதிரான முறையில் செய்தேன்"[31] என்கிறார்.

மேலும், "ஐயா, அரசியல் சட்டத்தை நான்தான் உருவாக்கினேன் என்று என் நண்பர்கள் சொல்கிறார்கள். அதைக் கொளுத்தும் முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன் என்பதை நான் கூறத் தயார். அது எனக்கு வேண்டவே வேண்டாம்; அது யாருக்கும் உகந்தது அன்று"[32] என்றும் பேசுகிறார்.

பெண்ணுக்கு எதிரி பெண்ணே என்று கட்சி கட்டும் ரேவதி போன்றோரைப் போல இவரும் தலித்திற்கு எதிரி தலித்தே என்கிற மாதிரியான எதிர்க் கட்டமைப்பை உருவாக்குகிறார். அரசி

படிப்பகம்

www.padippakam.com



யல் சட்டத்தை உருவாக்கும் பணியில் அம்பேத்கர் இருந்தாலும் அது அவருக்கு கைவிலங்கிட்ட செயலாகவே இருந்து வந்தது. அவரைச் சூழ்ந்திருந்த பார்ப்பனீய – வர்ணாஸ்ரம – இந்துத்துவத் தாக்குதல்களில் அவரால் எதுவும் செய்ய முடியாமற் போனதே உண்மை.

விடுதலைப் புலிகள் ஆதரவு என்ற பெயரில் ஆர். வெங்கட்ராமன், சந்திரசேகர், ராஜீவ் காந்தி, சுப்ரமணியன் சுவாமிகள் போன்ற பார்ப்பனர்கள் சூழ்ச்சியால் தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசினாலே கலைக்கப்பட்டுவிடுவோம் என்று தி. மு. க. அஞ்சுவதும், இதையே பத்திரிகைகள் வழிமொழிவதும் இங்கு நடந்தேறுகிறது. அதேபோல 'தலித்துகளே! நீங்கள் போராட்டம் செய்யாதீர்கள். நீங்கள் நடத்தும் போராட்டம் அம்பேத்கர், கே. ஆர். நாராயணன் ஆகியோர்களுக்கு எதிரானது என்றெல்லாம் மாய வலை பின்னிப் பார்க்கிறார் வாஸந்தி. "ஆக்க பூர்வமான இயக்கம் நடத்த அறிவுஜீவிகளுக்குமா தெரியவில்லை?"[33] என்று வேறு ஆதங்கப் படுகிறார்.

"படித்தவர்களும் பார்வையில்லாமல் போனதற்காக, நானும் அனுசரிக்கப் போகிறேன் கருப்பு தினத்தை"[34] என்றும் எழுதுகிறார். 1947இல் ஆகஸ்ட் 15ஐ பெரியார் துக்கதினமாகக் கொண்டாடினார். அதன். காரணங்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன. 50 ஆண்டுகள் ஆன பிறகும் அடித்தட்டு தலித் மக்களுக்கு எந்த உரிமையும் கிடைக்கவில்லை. இதற்காக கருப்பு தினம் என்றால் வாஸந்தி போன்றவர்களால் ஏன் பொறுத்துக்கொள்ள முடியவில்லை? தங்கள் இடத்திற்கு பாதிப்பு வந்துவிடும் என்ற பயத்தினால்தானே! பார்ப்பன பயம் என்பது வாஸந்தியின் கயவாளித்தனமான அறிவாளித்தனமாக வெளிப்படுவதுதான்.

கலாச்சாரம் அழியக்கூடாது; காக்க வேண்டும்; வேர்களைத் தேட வேண்டும் என்ற பெயரில் தேவதாசி முறை அழிந்து போனதை (ராஜாஜி, சத்தியமூர்த்தி போன்று) மூக்கினைச் சிந்திகதையும்[35] பண்ணியவர்தான் இந்த வாஸந்தி.

"எந்த நல்ல எழுத்தாளன் என்று பெயரெடுத்தவனிடமும் மார்க்சியத்தின் செல்வாக்கு இருப்பதை உணர முடியும். அவன் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவன் மார்க்சியத்தின் பாதிப்புக்கு உட்பட்டவனாக இருப்பான்"[36] என்று வாஸந்தி சொன்னதை நாம் இவ்வாறு சொல்லலாம்:

படிப்பகம்

www.padippakam.com



"எந்த 'நல்ல' பார்ப்பன எழுத்தாளன் என்று பெயரெடுத்தவனிடமும் இந்துத்துவத்தின் செல்வாக்கு இருப்பதை உணர முடியும். அவன் ஆர். எஸ். எஸ்.ஸில் உறுப்பினனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவன் இந்துத்துவ பாதிப்புக்கு உட்பட்டவனாக இருப்பான்."

அடிக்குறிப்புகள்:–

1. இந்தியா டுடேயின் முதல் இலக்கிய மலர் மே 30, 1993இல் நிறப்பிரிகையால் மலம் துடைக்கப்பட்டது.
2, 3, 4. இந்தியா டுடே ஜூலை 10, 1997
5. Laloo என்பதை லாலூ / லாலு என்றெழுதாமல் லல்லு என்று தொடர்ந்து எழுதிக் கிண்டல் செய்கிறது தினமலர்.
6. ஜெயலலிதாவை 'ஜெயா' என்று செல்லமாக அழைத்தது இதே பார்ப்பன தினமலர்.
7. இந்தியா டுடே ஜூலை 10, '97.
8. ,, ,, 23, '97.
9. ராஜிவ் காந்திக்கு தொடக்க காலத்தில் இதே பத்திரிகைகளால் Mr. Clean தோற்றம் தரப்பட்டது.
10. இந்தியா டுடே ஜூலை 30, '97.
11. அதிக மதிப்பெண் பெற்றும் டாக்டராக முடியாமல் தற்கொலை செய்துகொள்ளும் பிராமண இளைஞன்.
12. இந்தியா டுடே இலக்கிய மலர், '95– 'சேச்சா' சிறுகதை— சுஜாதா. இதேபோல் சுஜாதா எழுதிய கதைகள் ஏராளம்.
13, 14, 15. இந்தியா டுடே ஜூன் 6–20, 97.
16, 17. ,, ஜூலை 16, '97.
18. மண்டல் எதிர்ப்புப் போராட்டத்தில் நடந்த ஷூவுக்கு பாலிஷ் போடும் போராட்டம்.
19. இந்தியா டுடே ஜூலை 10, '97.
20. இந்தியா டுடே ஆகஸ்ட் 13, '97.
21. தினமணி கதிர், ஜெயகாந்தனின் சபை நடுவே தொடர், மேலும் திருத்துறைப்பூண்டி கலை இலக்கிய மன்றப் பேச்சு.
22, 23, 24. இந்தியா டுடே ஜூலை 23, '97.
25. இந்தியா டுடே ஆகஸ்ட் 13, '97.
26. இந்தியா டுடே மே 21, ஜூன் 5, '97

படிப்பகம்

www.padippakam.com



27, 28, 29. இந்தியா டுடே ஜுலை 30, '97.
30, 33, 34. இந்தியா டுடே ஆகஸ்ட் 13, '97.
31, 32. 'இந்து, இந்தி, இந்தியா'- எஸ். வி. ஆர். எடுத்தாண்ட அம்பேத்கரின் பேச்சு.
35. இந்தியா டுடே இலக்கிய மலர், 1995- 'சின்னம்' நெடுங்கதை வாஸந்தி.
36. சுபமங்களா- வாஸந்தி நேர்காணல், ஜுலை 1993. ●

## பங்கஜம் மாமியின் படைப்புலகம்

அண்மையில் 'புக்கர் விருது' பெற்ற அருந்ததிராய் பற்றி வாஸந்தி இப்படிச் சொல்கிறார்; "படைப்பிலக்கிய உலகத்தைச் சேர்ந்தவள் என்கிற பெருமிதத்திலும் ஒரு இந்தியன் என்கிற உணர்விலும் என் நெஞ்சம் பூரிக்கிறது."

இதைக் கேட்க நேர்ந்தால் Bernard Malamud என்பார் கொஞ்சம் கோணல் புன்னகை செய்திருப்பார். அவர் யார் என்று கேட்கிறீர்களா? ஒரு படைப்பாளி. அவர் எழுதிய ஒரு கதையின் பெயர் In Retirement. நீங்கள் படித்ததில்லையா? அதனாலென்ன. வாஸந்தி எழுதிய வயசு கதை படித்திருப்பீர்களே, நர்மதா வெளியிட்ட வாஸந்தியின் 'பொய்முகம்' தொகுப்பிலிருந்து! 'வயசு' படுத்திய பாட்டை ஒரு வரலாறாகவே எழுதலாம். மாலன் 'இந்தியா டுடே'யை விட்டு வெளியேறியதற்கு 'வயசு'ம் ஒரு காரணமாக இருக்கக்கூடும். மிகுந்த அறச்சீற்றத்தோடு அம்பலப்படுத்த முன் வந்த கோமல் சுவாமிநாதன் சரிக்கட்டப்பட்டபின், அவர் சொன்னாரே ஒரு சுலோகம்: "வாஸந்தி என்னும் கொசுவை அடிக்க சுபமங்களா என்னும் குண்டாந்தடி எதற்கு?" ஆனால் கோவி. மணிசேகரனை நொக்கிய போது அது குண்டாந்தடியில்லை, வெறும் கருப்பஞ்சக்கைதான் என்று விளங்கத்தான் செய்தது.

வாஸந்தி ஒரு படைப்பாளிதான். தமிழில் எழுதிப் பிழைக்கும் இந்தியப் படைப்பாளி. 'இது மொழிபெயர்ப்பு அல்லது தழுவல்' என்று சொல்லும் நேர்மையை ஞாபகமாகத் தொலைத்துவிட்டு, கறைபடிந்த பெருமிதங்களை சேகரம் செய்கிற படைப்பாளி என்று நீங்கள் கறார் செய்தாலும்கூட, தமிழின் இலக்கிய பீடங்கள் யாவும் இதுபோன்ற பெருமிதங்களைக் கொள்முதல் செய்வோரைக் கொண்டாடி மகிழ்கிறவர்களாலேயே நிரப்பப்பட்டுள்ளன.

ஜெயமோகன் வாஸந்தியின் படைப்புகளை வெறும் 'கிளிக் கதைகள்' என்று மலையாளப் பத்திரிகையில் 'கிருத்திருவம்' செய்

—இதன் தொடர்ச்சி 59ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

கேரள தேசத்தில் தலித்துகளின் பள்ளி நுழைவுப்

# போராட்டம்

—எ. எம். சாலன்—

'தலித்துக்கள் பொதுப்பாதையில் நடக்கக் கூடாது. நல்ல ஆடை - அணிகலன்களை அணியக் கூடாது. நல்ல பெயர்களைச் சூட்டக் கூடாது. பெண்கள் தலையில் பூ வைத்துக் கொண்டு நடமாடக் கூடாது. மார்புகளை மறைக்கக் கூடாது. ஆண்களும்-பெண்களும் முழங்கால் மறையும்படியாக வேட்டி- சேலை கட்டக் கூடாது. காலில் செருப்பு அனிந்துகொண்டு நடக்கக் கூடாது. நிலவுடமையாளர்கள் 'முதலிரவில்' வந்து அனுபவித்த பின்பே, ஒரு தலித் தன் மனைவியோடு வாழத் துவங்க வேண்டும்!'

இவைகளெல்லாம் (நம் நாட்டில்- குறிப்பாக கொச்சி, திருவிதாங்கூர், சென்னை மாகாணங்களில் நடந்ததாக) 19ஆம் நூற்றாண்டும் 20ஆம் நூற்றாண்டும் நமக்குத் தரும் வரலாற்றுச் சித்திரங்களாகும்!

மேற்கண்ட சமூகக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடியது போலவே பள்ளிக்கூட நுழைவுப் போராட்டத்திலும் இவர்கள் கால் எடுத்து வைக்கிறார்கள்.

குறிப்பாக இவர்களின் அன்றைய வீர நாயகனான அய்யங்காளி (திருவனந்தபுரத்திலிருந்து சுமார் 13 கி.மீ. தூரத்திற்கு அப்பால், தெற்கே வெங்கானூர் என்னும் இயற்கை எழில் நிறைந்த கிராமத்தில் பெருங்காற்று விளையிலுள்ள, பிலா வட்டத்துக் குடும்பத்தில், மேல் சாதியினருக்கு அடிமை வேலை செய்து பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த புலையர் சாதியைச் சேர்ந்த அய்யன் என்பவருக்கும் மாலா என்ற பெண்மணிக்கும் 28-8-1863இல் பிறந்த செல்ல மகன். முதன் முதலில் திருவிதாங்கூரில் சாதிப் பேய்க்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தலித்துகளைத் திரட்டிபூசச் செய்த தலித் பண்பாட்டுப் போராளி!) அன்றைய வெள்ளை அதிகாரியிடம் 'எங்களுக்கும் படிக்க வாய்ப்பளிக்க வேண்டும்' என ஒரு மனு கொடுக்க, அதன் பலனாக 'தலித்துக்களுக்கும் பள்ளிக்கூடங்களில் படிக்க வாய்ப்பளிக்க வேண்டும்' என அங்கிருந்து ஓர் உத்தரவு பிறக்கிறது. இந்த விஷயம் திருவிதாங்கூர் சமஸ்தானத்து திவான் கவனத்திற்குக் கொண்டு வரப்படவே, அவர் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன! காரணம், இது சம்பந்தமாக அவர் ஏற்கனவே ஒரு உத்தரவை வெளியிட்டிருந்தார். (வருடம் 1910.) அப்போதுதான் அந்த உத்தரவு ஏதோ ஒரு அலுவலகத்

படிப்பகம்

www.padippakam.com

தினுள் திட்டமிட்டு அமுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் வந்து அவர் பொறியில் தட்டியது. இதையொட்டி (மூன்று வருடங்களுக்கு முன்பு அமுக்கி வைத்திருந்த) அந்த பள்ளிக்கூட நுழைவு சம்பந்தமான உத்தரவு மீண்டும் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதற்கெதிராக மேல்சாதியினரிடமிருந்து கடுமையான எதிர்ப்பும் கிளம்பியது.

உதாரணத்திற்கு 'நம் (மேல் சாதியினருடைய) ஆசாரங்களிலும்கூட தலித்துகளுக்கு சமத்துவம் வேண்டும் என வாதிடக்கூடியவர்கள் ஒரு காரியத்தை மறந்து போகிறார்கள். அதாவது, நம் பாடசாலைகளில் சேர்ப்பதற்காக வேண்டி கொண்டுவரக்கூடிய பிள்ளைகளின் யோக்கியதையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அவர்கள் வரிந்துகட்டிக் கொண்டு வருவது நல்லது. அவர்கள் தங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டு இப்படி முன் வரத் துவங்குகிறார்கள் எனத் தெரியவில்லை. தலைமுறை தலைமுறையாக தங்கள் அறிவை, சேற்றில் இறங்கி வேலை செய்வதிலேயே ஈடுபடுத்தி வந்த இந்தச் சாதிக்காரர்கள், காலங்காலமாக மேல்நிலையிலேயே இருந்து வருகின்ற சாதிக்காரர்களுடைய பிள்ளைகளுக்கு சரி-நிகர் சமானமாக உட்கார்ந்து படிப்பதென்பது— ஒரு குதிரையினையும் ஒரு எருமை மாட்டினையும் பிடித்து ஒரே நுகத்தினடியில் கட்டுவதற்கு சமம் அல்லவா...!' என்று சுதேசாபிமானி என்ற மலையாள இதழில், 1910இல், நெய்யாற்றின் கரையிலுள்ள கே. ராமகிருஷ்ணபிள்ளை என்ற அறிவுஜீவி எழுதிய தலையங்கம் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவை ஒருபுறமிருக்க, 'கீழ்சாதியைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்' என்ற உத்தரவு வெளியானதும், கீழ்ச்சாதியைச் சேர்ந்தோர் தங்கள் பிள்ளைகளைத் தொட்டெடுத்துப் பள்ளிக்கூடங்களில் கொண்டு சேர்ப்பதற்காக வேண்டி அழைத்துச் சென்றனர்.

அரசாங்க உத்தரவு வெளியான அதே வருடத்தில் தலித் பண்பாட்டுப் பொராளியான அய்யங்காளியும் பாலராமபுரத்தைச் சேர்ந்த ஊருட்டம்பலத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காக வேண்டி, பூசாரி அய்யன் என்பவருடைய மகளான பஞ்சமியைக் கூட்டிக்கொண்டு சென்றார்.

இந்நடவடிக்கை மேல்சாதியினரின் கோபத்தைக் கிளறிவிட்டது. அவர்களில் சில சட்டம்பிமார்கள் ஒன்றுதிரண்டு அய்யங்காளியையும் அவரது சகாக்களையும் தடுப்பதற்காக வேண்டி வழியில் தயாராக நின்றுகொண்டிருந்தார்கள். இந்த இடத்தில் வைத்து இருதரப்பினருக்கும் உக்கிரமான மோதல் ஏற்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



'கல்வி கற்றே தீருவோம் நாங்கள்!' என கீழ்ச்சாதியினரும், 'ஒரு போதும் உங்களை கல்வி கற்க அனுமதிக்கமாட்டோம்' என மேல் சாதியினரும் விடாப்பிடியாக நின்று மோதினார்கள்.

தலித்துகளின் பள்ளிக்கூட நுழைவைச் சொல்லி இந்த மண்ணில் நடந்த 'முதல் கலகம்' இது.

ஊரூட்டம்பலத்தில் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது 1907இல். அதில் கீழ்ச்சாதியைச் சேர்ந்தவர்களுடைய பிள்ளைகள் 1910 வரையிலும் படிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதற்குரிய தலையாய காரணம், மிகப் பெரிய சமூகக் கொடுமைகளில் ஒன்றான தீண்டாமையே! எனவேதான் கீழ்ச்சாதியினர் தங்கள் கனவில்கூடக் கண்டறியாத பள்ளிக்கூட சம்பந்தமான உத்தரவு, அவர்களை இம்மாதிரி பரவசத்துடன் ஓடும்படி செய்தது. இருட்டில் நின்றுகொண்டு வழி தெரியாமல் தத்தளிப்பவர்களுக்கு சிறிய அளவில் வெளிச்சம் தென்பட்டாலே போதும். சில சமயங்களில் அதுவே அவர்களை லட்தியத்தின் பக்கம் கூட்டிக்கொண்டு போய்ச் சேர்த்துவிடும்!

காலங்காலமாக மலையோரங்களிலும் ஊருக்கு வெளியேயுள்ள சந்து பொந்துகளிலும் வாழ்ந்துவந்த கீழ்ச்சாதியினருடைய பிள்ளைகள், இப்போது வாயில் வெள்ளிக் கரண்டிகளுடன் பிறந்த தங்கள் பிள்ளைகளுக்குச் சரிநிகர் சமானமாக உட்கார்ந்து படிக்கப் போவதையறிந்த மேல் சாதியினருக்குக் கோபம் கொப்பளித்துக் கொண்டு வந்தது.

அன்று அவர்களது தலைவராக இருந்தவர் கொச்சப்பி பிள்ளை என்பவராவார்.

'எங்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் கீழ்ச் சாதியைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு படிப்பதற்காக அனுமதி வழங்கக்கூடாது. அதையும் மீறி அவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவார்களேயானல், அப்பள்ளிக்கூடம் அடித்து நொறுக்கப்படும்' என மேல் சாதியினர் ஓர் அணியில் நின்றுகொண்டு, ஒரே குரலில் எச்சரிக்கை செய்தனர்.

இதையும் மீறி அய்யங்காளி பஞ்சமியைக் கூட்டிக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் போகும் பொழுதுதான்– வழியில் வைத்து தலித்துகளுக்கும் (குறிப்பாக புலையர்கள்) நாயர்மார்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

அத்தோடு நின்று விடவில்லை. தலித்துகளின் பள்ளிக்கூட நுழைவைச் சொல்லி இருதரப்பினரும் ராத்திரியும் பகலும் மோதிக் கொண்டார்கள். நடக்கக்கூடாத காரியம் நடந்துவிட்டதைப்

படிப்பகம்

www.padippakam.com



போல எண்ணி வெறிகொண்ட மேல்சாதியினர் தலித்துகள் வாழும் பகுதிகளுக்குள் நுழைந்து, அவர்களது ஆடு, மாடு, கோழி முதலியவைகளையும், கண்ணில்பட்ட அவர்களது அத்தியாவசியமான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனர். அதில் அவர்களுக்குத் தேவையில்லாதவை சேதப்படுத்தப்பட்டன. கண்ணில் பட்ட தலித் பெண்களை அவர்களுடைய 'காமத்தீ'க்கு இரையாக்கிக் கொண்டனர். அத்தோடும் கோபம் அடங்காததால் தலித் மக்களுடைய குடிசைகளை தீ வைத்துக் கொளுத்தினார்கள். சில வீடுகளிலுள்ள பெண்களும் குழந்தைகளும் இருப்பிடங்களைவிட்டு துரத்தப்பட்டனர். அக்குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களோ 'எங்களை ஜீவனுடன் விட்டால் போதும்!' என காடுகளை நோக்கி ஓடினார்கள். ஓடி ஒளிந்த பிறகும்கூட மேல்சாதி சட்டம்பிகளால் தேடிப்பிடித்துக் கொண்டு வரப்பட்டு, மிருகத்தனமாக தாக்கப்பட்டார்கள். இம்மாதிரியான அக்கிரமங்களைத் தட்டிக் கேட்க வந்த தலித் போராளிகள் ரத்தத்தில் கிடந்து துடிதுடித்துச் செத்தார்கள்.

கொச்சப்பி பிள்ளை முன்பொருமுறை சபதம் செய்தது போல, ஊருட்டம்பலத்திலுள்ள பள்ளிக்கூடம் அக்னிக்கு இரையாக்கப்பட்டது. ஆனால் கேஸ் எடுக்கப்பட்டதோ, ஒன்றும் தெரியாத சில தலித்துகளின் பேரில் மாத்திரமாக இருந்தது.

இதுசம்பந்தமாக Trivancore State Manual Vol. 11இல், டி.கே. வேலுப்பிள்ளை கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"ஸ்ரீமூலம் திருநாளினுடைய காலகட்டத்தில் உண்டான அசம்பாவிதங்களில் ஒன்றாகும் இப்புலையர் போராட்டம். இப் போராட்டம் நெய்யாற்றின் கரை தாலுக்காவைச் சுற்றியுள்ள இடங்களிலெல்லாம் படர்ந்து வீசியது. அது அக்காலத்தில் உண்டான போராட்டங்களில் எல்லாம் மிக மூர்க்கத்தனமாக நடந்த போராட்டமாக இருந்தது."

ஆக, பள்ளிக்கூட நுழைவின் பேரில் நடந்த இப்போராட்டம் ஒரு வார காலமாகத் தொடர்ந்து நடந்தது.

ஊருட்டம்பலத்தில் தொடங்கிய இப்போராட்டம் தற்காலிகமாக அடங்கியிருந்தாலும் கூட, அது எழுப்பிவிட்ட புதிய ஓசைகள், அக்கம்பக்கத்திலுள்ள ஊர்களான மாராயமுட்டம், வெங்கானூர், பெரும்பழுதூர், குன்னத்துக்கால் போன்ற இடங்களிலெல்லாம் போய்ச் சேர்ந்திருந்தன. எங்கேயெல்லாம் நாயர் சாதியினரும் தலித்துகளும் இருந்தார்களோ அங்கேயெல்லாம் இப்போராட்டத்தையும் அதன் விளைவையும் சொல்லி அவரவர் நிற்கும் சாதிப் படிகளில் நின்று முணுமுணுத்துக் கொண்டார்கள்.

இப்போராட்டத்தில் நாயர் சாதியினரோடு வேறு சில சாதியினரும் தோளுடன் தோள் சேர்ந்து நின்றதாகத் தெரிய வருகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com



54ஆம் பக்கத் தொடர்ச்சி—

திருக்கிறார். நமக்கென்னவோ வாஸந்தியின் நொடிச் சிந்தனைகளுமே கிளிப்பேச்சாகத்தான் (Romantic Talk) படுகிறது; மதத்தைதன் மகாதமனியில் மடை மாற்றிக்கொண்டவரின் கிளிப்பேச்சாக.

நேற்று என் நண்பர் தன் அண்டை வீட்டில் இடி விழுந்தது பற்றி மெத்தப் படித்த ஒரு மாமியிடம் சொன்னபோது, ''உடனே கிருஷ்ணா கிருஷ்ணான்னு சொல்லியிருந்தா விழுந்திருக்காதே,'' என்றார். அந்த மாமியும், 'உயர்ஜாதிக்காரர்கள், கீழ்ஜாதிக்காரர்கள்' என்னும் சுட்டல்களைக் கேள்விகளற்றுப் பயன்படுத்துகின்ற வாஸந்தி போன்றோரும் ஒன்றுதான் அல்லவா. இப்படிப்பட்டவர்களின் சிந்தனையில் சுயபரிசீலனையோ சுயமதிப்பீடோ இருக்காது என்பதற்கு 'டைம்' பத்திரிகையிலிருந்து வாஸந்தி எடுத்தாண்டுள்ள இந்த மேற்கோளே சான்று: ''முகலாயப் படையெடுப்புகள், ஆங்கிலேய காலனி ஆட்சி, 50 ஆண்டுகால ஜனநாயக ஆட்சி எல்லாவற்றையும் மீறி இந்த வெறி (ஜாதிவெறி) நீடிக்க மதம் உதவுகிறது.''

முகலாயர்களையும் ஆங்கிலேயர்களையும் விடுங்கள்; அவர்கள் அந்நியர்கள். சொந்த மனிதர்களின் 50 ஆண்டுகால ஆட்சியிலும் தாங்கள் சுதந்திரம் பெறவில்லை என்று துக்கம் அனுஷ்டிப்பவர்களைப் பார்த்து மன்னிப்பு கோருவதற்கு மாறாக எள்ளி நகையாடும் வாஸந்திக்கு இந்த மேற்கோள் தன்னைக் கேள்விக்குள்ளாக்கும் என்னும் விவஸ்தையில்லாததுதான் வினோதம். படைப்புலகமாகட்டும், சிந்தனைத் தளமாகட்டும்— அவரவர்க்கான அறியாமைகளோடும் அறிதலுக்கான நியாயங்களோடும் வக்கணையாய் மொழி வதோடல்லாமல் அந்த அறியாமைகளுக்கும் அறியும் நியாயங்களுக்கும் உண்மையுள்ளவராயும் இருப்பதே ஒருவரைப் படைப்பிலக்கியவாதியாகவும் சிந்தனையாளராகவும் இனங்காட்டும். வாஸந்திக்கு அது வாய்த்துவிடும் எனில், அவர் சொல்லும் மாற்றத்துக்கான கைகோர்த்த போராட்டத்துக்கு ஒரு நண்பர் கிடைத்த மாதிரி.

இவரை மாமி என்றழைத்தது மரியாதைக்காகத்தான். ரஞ்சனி மஜூம்தார் எனும் இளைய குறும்பட இயக்குநர் இவருடைய மாட்டுப் பெண்ணாம். திருப்பூர் கிருஷ்ணன் குறிப்பிலிருந்து தெரிந்து கொண்டதை இங்கே குறிப்பிடுவதன் காரணம் 'இந்தியன்' என்ற உணர்வு இவர்களுக்குள் எப்படிப் பொருந்திப் போகிறது என்று வியக்கத்தான். நம்மூர் ஆராயி, அவள் மருமகள் வீராயி ஆகியவர்களுக்கு அந்த உணர்வு, தலைச்சுமைக்கு மேலாக ஏற்றிவைத்த அம்மிக்கல் மாதிரி தரையோடு தரையாக அமுக்கிவிடாதோ. அவர்கள் கொசுவிக் கட்டிய சீலைத்துணியைத் 'தமிழச்சிகள்' என்னும் அடையாளமே இறுக்கமாகப் பிடித்திருக்கிறது. இந்த அடையாளமும் அவர்களை எடுத்து நிறுத்தவில்லைதான் என்றாலும் இதையும் அவிழ்த்தெறிந்துவிட்டு எப்படி அம்மணமாய் நிற்பது? ஆ-ர்.

படிப்பகம்

www.padippakam.com

# ஆப்ரிக்க சினிமா

விமர்சனம்

இலண்டனில் வசித்துவரும் தமிழ்நாட்டுக்காரர் யமுனா ராஜேந்திரன், அங்கு தான் பார்த்து ரசித்த, பாராட்டிய சிறந்த ஆப்ரிக்க, ஆப்ரோ–அமெரிக்கப் படங்களைத் தெரிவு செய்து அவற்றைப் பற்றிய தனது சொந்த மதிப்பீடுகள், திரைப்பட விமர்சனத்தில் தேர்ச்சி பெற்றவர்களின் கருத்துகள், சில நேர்காணல்கள் ஆகியவற்றைத் தொகுத்து எழுதியுள்ள கட்டுரைகளை 'ஆப்ரிக்க சினிமா' என்ற நூலாக 'நிழல்' வெளியீட்டகம் (இதற்கு முகவரி குறிப்பிடவில்லை) வெளியிட்டுள்ளது.[1]

இந்த நூலில் மதிப்பீடு செய்யப்படும் படங்களில் சிலவற்றைத் தமிழகத்திலுள்ள பல்வேறு திரைப்படச் சங்கங்களின் (Film Clubs) உறுப்பினர்களாக உள்ளவர்கள் பார்த்திருக்கக் கூடும். அமெரிக்கக் கறுப்பினத் தலைவர் மால்கம் எக்ஸ் பற்றி ஸ்பைக் லீ இயக்கியுள்ள திரைப்படத்தையும் பலர் பார்த்திருக்க வாய்ப்புண்டு. ஜில்லா பொன்டே கார்வோவின் 'அல்ஜியர்ஸ் சண்டை' (Battle of Algiers) 'ஸ்டார் மூவிஸ்' சானல் வழியே கடந்த மூன்றாண்டுகளில் 50, 60 முறை காட்டப்பட்டுள்ளது. ஒஸ்மான் செம்போனின் 'சாபம்' படத்தின் (Xala) ஒளிநாடா யமுனா ராஜேந்திரனின் உபயமாகக் கிடைத்ததால் தமிழகத்தில் பல்வேறு நகரங்களில் பலர் அதைப் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. வேறு சில படங்களையும் பலர் பார்த்திருக்கலாம்.

நூலாசிரியர் தரும் விளக்கங்களில் அவரது சொந்தக் கருத்துகளும் பிற விமர்சகர்களின் கருத்துகளும் பின்னிப் பிணைந்துள்ளன. எனவே அவரது தனிப்பட்ட நிலைப்பாடு என்ன என்பது நமக்குப் பல இடங்களில் விளங்கவில்லை. மார்க்சியம், அமைப்பியல், பின்–நவீனத்துவம் என்ற பலவகையான கோட்பாட்டு விளக்கங்களைக் குறிப்பிடுகின்ற அவர் தனது முன்னுரையில் "என்னளவில் அமைப்பியல் விமர்சனம் என்பது முக்கியமாக வெகுஜன சினிமாவில் நிகழ வேண்டும். ஆதிக்கமொழி வெளிக் கொணரப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும். முதலில் சினிமா பற்றி தலித் விமர்சன மரபு எழவேண்டும். தலித் சினிமா கோட்பாடு மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு சிந்திக்கப்பட வேண்டும்" என்று கூறுகிறார். அதாவது பிறர் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய தனது விருப்பங்களைக் கூறுகிறார். "தமது கலாச்சார வேர்களை ஆதிக்க கலாச்சாரங்களுக்காக இழந்துவிடுவது முற்றிலும் தன்னை இழப்பது போலாகும்" என்று ஆப்ரிக்க சினிமா இயக்குநர் ஹெய்லே கெரிமா கூறுவதை மேற்கோளிட்டு "வயிற்றுப் பிழைப்புக்கு சமரசம் செய்யும் தலித்களின் மௌடீகத்தை கெரி

படிப்பகம்

www.padippakam.com

மாவின் கேள்விகள் உலுப்பிவிடும்'' என்கிறார். பார்ப்பனியத்தால் கட்டமைக்கப்பட்ட சாதியக் கலாச்சார வேர்களை படித்த தலித்துகள் தக்க லவத்துக்கொள்ளாததை 'சமரசம்', 'மௌடீகம்' என நூலாசிரியர் கூறுகிறாரா? அல்லது பார்ப்பன– இந்து மத விழுமியங்களை ஏற்றுக்கொள்வது 'சமரசமா?' அப்படியானால், இது படிக்காத தலித்துகளிடம்கூட இருக்கிறதே. தலித்துகள் தக்க வைத்துக்கொள்ள வேண்டிய கலாச்சாரக் கூறுகள் யாவை என்பதை நூலாசிரியர் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். ஆப்ரிக்கக் கலாச்சாரத்திலும்கூட தக்கவைத்துக் கொள்ளத் தேவையில்லாத பல ஆணாதிக்கக் கூறுகளும் பழங்குடிவாதக் கூறுகளும் உள்ளன.

எனினும் வெள்ளையரின் இனவெறிக் கொடுமைகளுடன் ஒப்பிடத்தக்க சாதியக் கொடுமைகளுக்குள்ளாகும் தலித்துகளின் வாழ்க்கை அனுபவங்களுடன் ஒப்பிடத்தக்க பல நிகழ்ச்சிகள் ஆப்ரிக்கத் திரைப்படங்களில் சித்தரிக்கப்படுவதை இந்த நூல் விரிவாக எடுத்துரைக்கிறது. ஆப்ரிக்கத் திரைப்படங்களை நன்கு புரிந்துகொள்வதற்காக ஆப்ரிக்க நாடுகளின் அரசியல், பொருளியல் பண்பாட்டுப் பின்னணிகளும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. ஆனால் இந்நூல் நெடுக வாக்கிய அமைதியும் இலக்கண அமைதியும் முழுமையாக அலட்சியம் செய்யப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக:

1. (செனிகல் நாட்டு மூன்று இனங்களில்) "Wolof இனத்திற்கு மட்டுமே மொழி இருக்கிறது'' (ப. 15) (அப்படியானால் மற்ற இரு இன மக்கள் அனைவருமே ஊமைகளா? ஊமைகளுக்குக்கூட சைகை மொழி இருக்குமல்லவா?

2. "1995 வருடத்திய செனிகலில் செடார் செங்காரின் கட்சிதான் ஆட்சியிலிருக்கிறது. செடார் செங்காருடன் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நல்ல உறவிருக்கிறது.'' (ப.16) (1991 ஆகஸ்ட்டில் சோவியத் யூனியனே தகர்ந்துவிட்டது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி என்பது ஏதும் அதற்கப்புறம் இல்லை. அதன் எச்சங்கள் பல்வேறு கட்சிகளாகவும் குழுக்களாகவும் வெவ்வேறு பெயர்களில் இயங்குகின்றன.)

3. "மணப்பெண்ணுக்கு அடங்கிப்போகும்படி, கூப்பிட்டபோது போய்ப் படுக்கும்படி அறிவுரை கூறுகிறாள் தாய்'' (ப.21) - ('கணவனுக்குப் பணிந்து போகும்படி, அவன் கூப்பிட்டபோது போய்ப் படுக்கும்படி மகளுக்கு அறிவுரை கூறுகிறாள் தாய்' என வாக்கியம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.)

4. "விறைக்கமாட்டாதவனை ஏசுகிறார்கள் பெண்கள்'' (ப.21). வீர்யமிழந்து குறி விரைக்காத நிலையைத்தான் இப்படிச் சொல்கிறார் நூலாசிரியர்.

5. "பொன்டே கார்வோவின் ரசிகர்களில் (Admirers) ஒருவர் பாலஸ்தீன அறிஞர் எட்வர்ட் ஸைத். அவர் காணும் காரணங்கள் இரண்டு. ஒன்று, இசை இவர் படங்களில்

படிப்பகம்

www.padippakam.com



பெறும் அழுத்தம் தொடர்பானது. அடுத்தது சைத் முரண் படும் விஷயம் காலனிய எதிர்ப்புப் படத்தில் உஷ்ணத்தைக் காண்பிக்கிறார். கார்வோவின் படங்களில் முரண்பாடான நீரோட்டத்தையும், சிதைக்கப்பட்ட இலட்சியத்தையும் பிர தான கருவிக்கு எதிரான விரிவான விவரங்களையும் காண முடியும் என்பதுதான்'' (ப.92). (நமது சிற்றறிவிற்கு இது பிடிபடவேயில்லை.)

தான் பேசுவதையும் எழுதுவதையும் அனுதாபத்தோடு பகிர்ந்து கொள்ள, புரிந்து கொள்ள, ஆலோசனையும் விமர்சனமும் சொல் லக் கூடிய ஒரு சூழல் யமுனா ராஜேந்திரனுக்கு இல்லாமலிருக்க லாம். ஆனால் தமிழ்மொழி மட்டுமின்றி சினிமா மொழியும் தெரிந்துள்ள பதிப்பாசிரியர்களான ப. திருநாவுக்கரசு, ஜோ. ஜார்ஜ், கொ.மு. ரியாஸ் அகமது ஆகியோர் பொறுப்பும் கவன மும் எடுத்திருந்தால் மேற்சொன்ன அமைதிக்குலைவை மட்டுமின்றி நூலிலுள்ள எண்ணற்ற அச்சுப்பிழைகளையும் சரிசெய்திருக்கலாம்.

மேற்சொன்ன குறைபாடுகளை பொருட்படுத்தாது இந்த நூலுக் குள் நுழைவோமானால், சினிமாக் கலையில் அக்கறையுள்ள தமிழ் வாசகர்கள் – ரசிகர்கள், மாற்று சினிமாவில் ஈடுபாடுடைய வர்கள் ஏராளமான செய்திகளைத் திரட்டிக் கொள்ளலாம். தலித் சினிமாவுக்கான சாத்தியப்பாடுகளைப் பற்றிய சிந்தனை தமிழ கத்தில் – இந்தியாவில் ஏன் இன்னும் வலுவாக எழவில்லை என்ற நூலாசிரியரின் கேள்வியிலுள்ள நியாயத்தை உணர்ந்து கொள்ள லாம். கவுண்டமணி – செந்தில் நகைச்சுவைக் காட்சிகளில் உள்ள சாதியம் பற்றி நாம் ஏன் பேசுவதில்லை என்ற கேள்வியையும் காத்திரமாகப் பரிசீலிக்கலாம்.

கடைசியாக இந்தியாவில் ஒரு கெரிமாவோ ஒரு உஸ்மான் செம் போனோ இந்தியத் தணிக்கை வாரியத்தின் தடுப்புச் சுவர்களைத் தாண்டி வரமுடியுமா? பழைய காலனிய, நவகாலனிய, மதவாத, பாலியல் வன்முறைகளைப் பற்றி எத்தனை துணிச்சலோடு ஆப் ரிக்க, ஆப்ரோ – அமெரிக்க இயக்குநர்களால் செய்ய முடிந்திருக் கிறது! இங்கு ஒரு 'எலிப்பத்தாயம்' சாத்தியம்; 'சாபம்' (Xala) சாத்தியமில்லை. ஒரு 'சர்தாரி பேகம்' சாத்தியம்; 'சாம்பலிலி ருந்து எழும் மனிதன்' சாத்தியமில்லை. ஒரு Underground Cicemaவால் முடியுமோ என்னவோ?

**எஸ்.வி. ராஜதுரை**

---

1 விற்பனை உரிமை: தாமரைச் செல்வி பதிப்பகம், 31/48, இராணி அண்ணா நகர், கே.கே.நகர், சென்னை-78, விலைரூ.35.

படிப்பகம்

www.padippakam.com



# இருட்டு

—பாரவி

"கண்ணு தெரியுதாய்யா?"

"தெரியலீங்க."

"எந்தக் கண்ணு தெரியலே?"

"ரெண்டு கண்ணும் தெரியலீங்க."

"கை அசையறதுகூடவாத் தெரியலே?"

"இல்லீங்க."

"வெளிச்சம் எந்தப் பக்கத்திலேர்ந்து வருதுன்னு சொல்லு."

"தெரியலீங்க."

"மேலேர்ந்து வருதா? கீழேர்ந்து வருதா?"

"தெரியலே."

அந்த இளம் கண் மருத்துவன் மேலும் எரிச்சல் கொண்டான். நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது. மாலைநேரத்தில் மற்ற நண்பர்களுடன் பொழுதைக் கழிக்க விரைவாய் வருவதாய்ச் சொல்லியிருந்தான்.

இது முதல் இடம் அல்ல. முதல் குப்பக்காட்டானும் இல்லை. இந்தத் தலை காய்ந்தவர்களுடைய தந்திரம் அவனுக்கு ஏற்கனவே புரிந்துவிட்ட பாடம். உரக்க அலுத்துக்கொண்டான்;

"தோ பாருய்யா. ஒரு மண்ணுமே தெரியலேன்னா ஆபரேசன் இல்லே. கண்ணாடி கெடைக்காது. இந்த ஆளுக்குப் பண்ண முடியாது. அடுத்த ஆளு வா. பொற முத்திருச்சா?"

அழைத்து வரப்பட்டிருந்த முப்பது, நாற்பது பேர்களில் அறுவை செய்ய ஐந்தாறு பேர்கூடத் தேறவில்லை. நேரம் கடக்கிறதெனும் பரபரப்பும், அடுத்த கிராமத்திற்குச் செல்ல வேண்டிய வேகமும் இருந்தாலும், இன்று ஒரு நாளில் எவ்வாறு நிர்ணயித்த இலக்கின்படி நோயாளிகளைக் கண் அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்க முடியும் எனும் தவிப்பு, முகாம் ஏற்பாடு செய்திருந்த குழுவினருக்கு ஏற்பட்டது. இந்த மருத்துவ இளைஞன் ஆட்களைக் கழிக்கும் வேகத்தைப் பார்த்தால் ஒரு நூறுபேர்கூடத் தேறுவது கடினமாகிவிடும் போலிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



"தோ பாரும்மா. உனக்கு யாரோ தப்பா சொல்லியிருக் காங்க, ரெண்டு கண்ணும் தெரியலேன்னு சத்தியம் பண்ணிச் சொன்னாதான் கண்ணாடி கொடுப்பாங்கன்னு. அது தப்பு. பொற முத்தியிருந்தாக்கூட கண்ணுல கொஞ்சமாவது கையசைவு நெழலு வெளிச்சம் தெரிஞ்சாத்தான் பொறயக் கீறிட்டு போட்டுக்க கண்ணாடி கொடுப்பாங்க. டாக்டரு கேக்கற கேள்விக்கு நெதா னமா பதட்டப்படாம பதில் சொல்லு. இப்ப பாரு. வெளிச்சம் எந்தப் பக்கத்திலேர்ந்து வருது? சோத்துக்கை பக்கமிருந்தா, பீச் சக்கை பக்கத்திலேர்ந்தா?"

ஆட்கள் தேறவேணும் என்னும் தவிப்புடன் முகாம் குழுவில் ஒருவர் விளக்கினார். கிழவி தலையை ஆட்டினாள். எங்கே யிருந்தோ வெளிச்சம் நெழலாட்டம் தெரிவதாகச் சொன்னாள். "சரியா சொல்லு, எந்தப் பக்கத்திலேர்ந்து?" என இடப்பக்கமாக டார்ச் ஒளியை அசைத்துக் காட்டியபின் அவள் மிரட்சியிலிருந்து ஓரளவு தெளிந்தாள்.

"பீச்சக்கைக்கா வருதுங்க."

மருத்துவ இளைஞன் இந்த மாதிரி ஆட்களின் வேலைகள் முன்பே தனக்குத் தெரிந்ததுதான் என்பதாகச் சிரித்தான். மற் றவர்களும் சிரிப்பு காட்டினார்கள்.

"இதப் போலக் கேட்டுக்கிட்டிருந்தா சரிப்படாது. ஒண்ணும் தெரியலேன்னு சொன்னா உடனே போயிட்டுவான்னு அனுப்பிட னும். சரியா? அடுத்தது வா. என்னா உனக்கு? கண்ணுல தண்ணி வருதா? இந்தா, இந்த சீட்டுல எழுதிக் கொடுக்கற மருந்தை வாங்கிப் போடு. இந்த மாதிரி சும்மா கண்ணெக் காமிக் கணும்னு வர்றவங்களையெல்லாம் நிக்க வைக்க வேணாம். தேர்ற கேசா இருந்தா வரிசையில நிக்கட்டும். வரட்டும் வரட்டும்."

வரிசையில் வந்தவர்களை ஓரிரு நொடிகளில் பார்த்து முடித்த அந்த இளம் மருத்துவன் போடப்பட்டிருந்த நாற்காலியில் சரிந்து உட்கார்ந்து வலது கையில் மணி பார்த்தான். பிற்பகல் நெருங் கிக் கொண்டிருந்தது.

முகாம் குழுவினரில், வந்தவர்களில் யார் கண் மருத்துவர், யார் பொறுப்பாளர் எனத் தெரிய முடியாமல், எல்லாரும் மருத்து வர்களா அல்லது கண்ணாடி வழங்கும் அதிகாரம் உடையவர்களா, கீழ்ப்பணியாளர்களா என்பதும் அறிவதற்கஞ்சுபவர்களாய், ஒவ் வொருவரையும் 'சார்' போட்டார்கள். 'ஐயா' என்றார்கள். 'சாமி' எனக் கும்பிட முனைந்தார்கள். 'டாகுட்டர்' என்றழைத் தும் பணிவைக் காட்ட முற்பட்டார்கள். இந்தக் குக்கிராம மக்க

படிப்பகம்

www.padippakam.com



ளைக் கொண்டுவருவதை, இழுத்து நிறுத்தி வைப்பதைப் பார்க்க வேடிக்கையாகிவிடலாம்– யார் யாரை வேடிக்கை பார்க்கிறார்கள் எனப் புரிவதற்கு முன்.

காலை ஒன்பது மணிக்குக்கூடி கிராமம் கிராமமாய்ச் சென்று பிற்பகல் வந்து கொண்டிருந்தது. வாங்கி இருபது ஆண்டுகளாகி யிருந்த ஈப்பு (ஜீப்) அந்த இளம் கண் மருத்துவனையும் முகாம் பொறுப்பாளர்களில் சிலரையும் சுமந்து கொண்டு புழுதி கிளப்பி யது. இருட்டுவதற்குள் அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராமங்களை முடித்துவிடக் கட்டளை. இரண்டு நாட்கள் கழித்து தொடங்க வுள்ள இலவச மருத்துவ முகாமுக்கு குறைந்தது இருநூறு நோயா ளிகளைக் கண்டறிந்தாக வேண்டும். சென்ற முகாமின்போது நூற்றுக்கும் குறைவான ஆட்களையே அனுப்ப முடிந்தது கண்டிக் கப்பட்டிருந்தது. இந்நிலையில் இருமடங்கு இலக்கு உள்ள நிலை யில் போகும் போக்கு உற்சாகம் தருவதாய் இல்லை என்ன மருத்துவனோ.

ஒரு மருத்துவரைப் போலத் தோன்றாமல் விடுமுறையைக் கழிக்க வந்த இளைஞனைப் போல, கோடு போட்ட வண்ண பனி யன் சட்டையில் கழுத்தில் தொங்கிய தங்கச் சங்கிலி மேலே தெரிய, கையில் வார ஏடுகளுடன் டார்ச் ஒன்றை மட்டுமே கருவி யாகக் கொண்டு வந்திருந்த அந்தக் கண் மருத்துவ இளைஞனின் அவசரம் வேறு தெரிவு செய்யப்படும் நோயாளிகளின் எண்ணிக் கையைக் கூட்டும் வகையில் இல்லை. அவன் கேட்பவற்றிற்கு உடனுக்குடன் பதில் சொல்லாமல் இழுக்கும் பேர்கள் கழிக்கப் படுவதைக் குறைக்க வேண்டும். 'உங்களையெல்லாம் எனக்கு நன் றாகத் தெரியும், வேலையைப் பாருங்கள்' என சொல்லாமல் சொல் லும், நடப்பில் அசட்டை காட்டும் மருத்துவ இளைஞனிடம் ஏதும் சொல்ல யாரும் முயலவில்லை.

இவன் எவ்வளவோ தேவலை. சென்ற முறை வந்த அந்த வய தான மருத்துவன் இப்படிக்கூடப் பார்க்கவில்லை. யார் யாரை அறுவைக்கு முதிர்ச்சியடைந்த நோயாளிகள் என்று சொன் னோமோ அவர்கள் பெயர்களையெல்லாம் கிறுக்கிக்கொண்டு அவர் களை நேராக முகாமுக்குக் கொண்டுவரச் சொல்லி எரிந்துஎரிந்து விழுந்தான் என மூத்த முகாம் குழு உறுப்பினர் சொன்னார்.

அடுத்த சிற்றூருக்கு ஊர்தி புறப்பட்டது. ஊர்ச்சாலை புழுதி பறந்தது. பெரிய பெரிய கருங்கல் ஜல்லி மட்டுமே சில இடங்க ளில் இருந்தது. பாறைச் சக்கைகள் பரப்பப்பட்டவை எப்படி சாலை - அதுவும் ஜல்லி சாலையாகுமென்பதும் புலப்படாதது. மேலே போட்ட செம்மண்ணும் கரைந்து போய், கானலில் புழுதி கிளப்பிய சாலையில் மேடும் பள்ளமுமாய், ஊர்தி உள்ளே இருந்

படிப்பகம்

www.padippakam.com



தவர்களை இடித்துக்கொள்ளச் செய்தது. தெரியும் பசுமை இழந்த சிறு குன்றுகளும், நின்ற பனைகளும், குத்துகுத்தான புதர்களும் இருந்த தகிப்பைக் குறைப்பனவாய் இல்லை. சில காக்கைக் கரைதல்களும், கருங்குருவிகளின் பறப்பும் தவிர, தலையில் துணியை முக்காடிட்டுச் சென்ற ஓரிரு ஆட்களும், ஆடுகளும், கொம்பு மட்டும் பெருத்த மாடுகளும் மேடும் பள்ளமும் ஒடித்து ஒடித்து வரும் வண்டியைப் பார்த்து மிரண்டு ஒதுங்குவதுதான் நேர்வது.

“என்னுடைய நகரத்தில் இவ்வளவு வெயில் தெரிவதில்லை. அது என்ன மலை? எங்கே இளநீர் கிடைக்கும்?’’ என நிழலில் வளரும் மருத்துவ இளைஞன் அவ்வப்போது ஏதோ சொன்னான். அடுத்துவரும் கிராமத்தில் நிச்சயம் இருக்குமென உறுதி சொல்லப்பட்டது. காயும் வெயிலில் இருக்கும் தென்னைகளிலும் காய்ப்பு குறைந்துவிட்டிருந்தது. காய்ப்பவையும் நகர மக்களின் தாகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. சரியான மழையுமில்லாதது காய்களை சிறுக்க வைத்தது. ஆனால் வரக்கூடிய பெரிய மனிதர்களுக்கு எப்படியும் இளநீர்க் காய்கள் கொண்டு வரப்பட்டாக வேண்டும். அந்தக் காய்களுக்கான விலையை யார் கொடுக்கிறார்கள் என்று யாரும் கவலைப்படுவதில்லை. யாரோ வெட்டுகிறார்கள்; யாரோ குடிக்கிறார்கள்.

நல்ல வேளையாய் வந்து சேர்ந்த கிராமத்து ஊழியன் சொல்லி வைத்தபடி இளநீர்க் காய்களை வைத்திருந்தான். கிராமத்துத் தண்ணீரைக் குடிக்காமல் வறண்டு வந்த மருத்துவனை மேலும் எரிச்சலடையாமல் செய்ததற்காகப் பாராட்டு பெற்றான். நோயாளிகளும் அதிகமிருந்தனர். ‘இப்படியும் கெட்டிருக்குமா!’ என அதிர்ச்சியைத் தரும் கண்களுடன் அந்த இளம் பெண் விடாமல் பேசிக்கொண்டே நின்றிருந்தாள். மங்கிப்போய் நைந்த புடவையை ஏத்தலும் தாழ்த்தலுமாய் மேலாக்கு போலச் சுற்றியிருந்தாள். அவள் கை பிடித்து துணைக்கு ஒரு பஞ்சடைந்த கிழவி.

“வயசு இருவதுக்கு ஆவுதுங்க. நா சின்னதா இருக்கப்போ ஒரு கண்ணுல பார்வ தெரிஞ்சுது. பொறவு அம்ம வாத்திச்சா, அந்தக் கண்ணும் போயிடிச்சி. ஆயாதான் கஞ்சி ஊத்துது. எனக்கு கண்ணு தெரிய வெச்சீங்கன்னா எதோ பொயப்பேன். கண்ணாலங்காச்சின்னு எங்கனா ஒதுங்கினா, ஆயா மண்டயப் போட்டாலும் பொயச்சிப்பேன். எனுக்கு கண்ணு வருங்களா?’’,

அந்தப் பெண்ணின் இடது கண் சிறுத்து குழியில் புதைந்து வெள்ளையாயிருந்தது. அழுக்கும் தள்ள, மற்றது வெளித் தள்ளி வெள்ளைப் படலம் பூத்து கண் மணியும் தெரியாமல் அச்சம் தந்தது. பத்து வருசமா கும்பிடாத சாமி இல்லே. ஒரு டார்ச்

படிப்பகம்

www.padippakam.com



வெளிச்சத்தை அடித்துக் காட்டி அவளுடைய கண்களை சோதித்து குணமாக்குவது பற்றிக் கூறுவதும் விடிவு காலமாய் கல்யாணத்தை விரைவு படுத்த முடிவதும் முடியுமா? ஆனாலும் அப்பெண்ணின் ஆவலான எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் யாரையும் அசைப்பதாய் இருந்தது.

மருத்துவ இளைஞன் பார்க்கும் போதே சொல்லிவிட்டான்: "இங்க எதுவும் பண்ண முடியாது. நகரத்துக்கு வா. கண் ஆஸ்பத்திரிக்கு வந்தா எதாவது செய்ய முடியுதான்னு பார்க்கலாம். ஞாயித்துக் கிழமை வராதே. மத்த நாள்லே காலையில வா."

ஒரு சீட்டில் நகரத்திலுள்ள பெரிய கண் மருத்துமனைக்கு பரிந்துரைத்து குறிப்பு எழுதிக் கொடுத்ததை கிழவி வாங்கி கையில் சுருட்டிக் கொண்டாள். தனக்கு கண் பார்வை அளிக்கப்பட்டால் எப்படியெல்லாம் அவள் வாழ்க்கை சீர்படும். செய்பவர்களுக்கு எவ்வளவு புண்ணியம் என்பதையெல்லாம் யாரோ அக்கறையுடன் காது கொடுத்துக் கேட்பதுபோல செம்பட்டையாய்ப் பறந்த முடியை ஒரு கையால் தடவிக்கொண்டே அந்தப் பெண் உரக்கச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கிழவியால் இழுத்துச் செல்லப்பட, முகம் ஒரு பக்கமும் உடம்பு ஒரு பக்கமும் பார்க்க நகர்ந்தாள். தொலைவில் தள்ளியிருக்கும் பெரிய நகரத்திற்கு யார் அழைத்துச் செல்வார்கள்? ஆகும் செலவை செய்பவர்கள் யார்? ஓடும் நேரத்துடன் போட்டிபோட்டு ஓடவே யாருக்கும் நேரமிருந்தது.

"அடுத்தது வா... மசமசன்னு நிக்காமல்."

மான் விழி, மீன் விழி, கோலவிழி, கயல்விழி, கோபவிழி எல்லாம் இந்தக் குக்கிராமங்களில் இல்லையா? எவர் அவற்றையெல்லாம் மொத்தமாகக் குத்தகை எடுத்துக் கொண்டனர்? இப்படியுமா இப்படியுமாவென பார்வையிழந்த கண்களுடன் நிறம்போன சேலைக் கந்தல்களையும் பழுப்பேறிய கிழிசல் வேட்டிகளையும் சுற்றியவாறு உடன் வந்தவர்கள் இழுத்து இழுத்து நிற்க வைக்க தடுமாறி வந்து நிற்பவர்கள் முனங்கிய வார்த்தைகள் மிகவும் கலக்கந் தருவன. நீர் பெருகும் கண்கள். பொங்கி அழுக்கு குவிந்த எந்தக் கதையும் பேசாத கண்கள். எதுவும் தெரியாத கண்கள். எதையும் தெரிந்துகொள்ளத் தடுக்கப்பட்ட கண்கள். தன் வேலையை செய்துகொள்ளவாவது பார்வை கிடைத்தால் போதும். என்ன கிடைக்கப் போகிறது. கண்பார்வை, கண்ணாடி, உணவு, துணி, பணம்— எது கிடைக்கும்? சாப்பாடு போட்டு, துணியும் கொடுத்து, கண்ணை சரியாக்கி கண்ணாடி போட்டுவிடுவார்களென்றுதான் சொல்லப்பட்டு மூலை முடுக்குகளில் முடங்கிக் கிடந்தவர்களுக்கு ஆசை காட்டப்பட்டிருந்தது. கொண்டு செல்ல, திரும்பவிட வண்டியும் இருக்கலாம்; அல்லது பஸ் செலவு கொடுக்

படிப்பகம்

www.padippakam.com



கப்படலாமெனவும் பேசிக்கொண்டார்கள். அழைத்து வந்து உட னிருக்கும் ஆட்களுக்கு உணவு, பஸ் செலவுக்குப் பணம் உண்டா கிடையாதா என்பது அங்கங்கு குழப்பத்தை அதிகமாக்கியது. எது கொடுக்கப்பட்டாலும் ஏமாந்த சோணகிரிகளான தங்களுக்கு எதுவுமே எப்போதுமே வந்து சேருவதில்லையெனவும் அரைகுறை யாய் முணுமுணுப்புகளும் கேட்டன.

"கூச்ச போட்டீங்கன்னா எப்படி பாக்க முடியும்? எங்க வந் தாலுஞ் சோத்துக்கு அலையுங்க. போயி சேர்மானமா நில்லு." அதட்டல் போடுவதை உரியவர்கள் கேட்க வேண்டுமேயென்ற கவலை யுடன் தான் இருப்பதை உணர்த்த ஊர்ப் பெரிய மனுசன் குரல் கொடுத்தான். வந்திருக்கும் பட்டணத்து டாக்டர் பேருக்காவது தன் கண்களையும் டார்ச் அடித்து பார்க்க வைக்கவும் தனிக் கவ னிப்பு கிடைப்பதை ஊர்க்காரர்கள் பார்க்க வைப்பதும் வேறு அவ னது நோக்கமாயிருந்தது.

வெளுத்த முழுக்கை சட்டை – வேட்டி அணிந்து வந்த ஓய்வு பெற்ற உள்ளூர் ஆசிரியர் ஆங்கிலத்தில் அவரது பார்வைக் குறை பாட்டையும் கேடராக்ட் பற்றியும் தெரிவிக்க முற்பட்டது பலனளிப் பதாயிருந்தது. நாற்காலியிலிருந்து எழுந்து தலை வெளுத்த அந்த முன்னாள் ஆசிரியரின் கண்களை தன் விரல்களால் அகட்டிப் பார்க்கவும் மேலும் கேட்கவும் முனைந்தான் அந்த மருத்துவ இளைஞன். முன்பு நாள்தோறும் செய்தித்தாள் படிக்க முடிந்த தையும், ஒரு கண்ணில் அரைகுறை பார்வையும் மங்கி வருவதை யும், நகரத்துக்கு வந்தால் தங்களைக் காணயியலுமா எனக் கேட் டும், போட்டிருந்த கண்ணாடியைக் கழட்டியவாறு அவர் தெளிவா கக் கூறி வந்தார். மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி தனியே நின்ற அவருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் தனி முனைப்பு காட்டப் பெற்று கண்களை சோதித்துக் கொள்ள முடிந்ததே நிறைவைத் தந்தது. ஓய்வு பெற்ற ஆசிரியரின் ஐயத்தை மருத்துவ இளைஞ னும் உறுதி செய்தான். அறுவை சிகிச்சை செய்ய இன்னும் முற்ற வேண்டும். தற்போது புதிய உத்திகள் வந்திருப்பதால் நகரத்தில் சிறப்பான வைத்தியம் சிறிது கூடுதலான செலவானாலும் பெறலா மென்பதை அவரும் ஏற்றுக் கொண்டார். எனினும் அப்போ தைக்கு போடக்கூடிய துளிகள் அடங்கிய மருந்தின் பெயரை சீட் டில் எழுதி வாங்கிக் கொண்டே இளம் மருத்துவனுக்கு வாழ்த்தும் வணக்கமும் நன்றியும் தெரிவித்து விலகினார்.

மீண்டும் அனைத்தும் இயங்கத் தொடங்கின. தள்ளல், நெருக் குதல், முனகல், முணுமுணுப்பு, இரைச்சல். திருத்தவே முடி யாத கூட்டம். கண் இருந்தால் மட்டும் என்ன கிழித்துவிடுவார்

படிப்பகம்

www.padippakam.com


களென யாரோ அலுத்துக் கொண்டு கொட்டாவியும் விட்டார்கள்.

இரண்டு நாட்களில் முடிக்க வேண்டியதை– எல்லா கிராமங்களுக்கும் செல்ல வேண்டிய இலக்கை இன்றே ஒரே நாளில் முடித்து விடலாமென சொல்லப்பட்டதை வரவேற்பதாய் முதல் முறையாக சிறிது சிரிப்பைக் காட்டினான் அந்த மருத்துவ இளைஞன். மற்றவர்களும் பதிலுக்கு சிரித்து அவனுடன் தலையை ஆட்டினர். மதிய உணவு நேரம் கடந்து விட்டிருப்பதை அப்போதுதான் கவனித்தது போல ஒவ்வொருவரும் அடுத்தவரிடம் மணி கேட்டனர். ஓரளவு சுத்தம் செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் இருந்த அரைகுறை அறையில் அவனுக்காகப் போடப்பட்டிருந்த நாற்காலி மேசைமேல் தேடிக் கொண்டு வந்து போடப்பட்ட வாழை இலைக்கு முன் கைகளைக் கழுவிய பின் சாப்பிட உட்கார்ந்தான் மருத்துவ இளைஞன். இருந்த ஓட்டை ஜன்னல்களின் கதவுகளை இன்னும் திறந்துவிட்டு, எப்போதும் வராத மின்சாரத்தைத் திட்டுவதாய்க் காட்டி, கிழிந்த விசிறியால் அவனுக்கு விசிற ஒரு ஆள் நின்றான். கழுத்திலும் நெற்றியிலும் முன் கைகளிலும் அவ்வப்போது வியர்வையை கைக்குட்டையால் துடைத்துக் கொள்வதும் விசிறிக்கொள்வதுமாயிருந்த அந்த இளம் கண் மருத்துவனைப் பார்க்க பரிதாபமாகத்தானிருந்தது. பெசலாய் சொல்லி சமைத்த கறி சோறு மணத்தது.

பொழுது இனி ஓடிவிடும். பிற்பகல் மூன்றை நெருங்கியும் வெயிலின் காந்தல் குறையாமல் வறண்ட காற்றையும் வீசாமல் செய்தது. கண் மருத்துவ இளைஞன் சாப்பிட்டு எழுந்திருப்பதற்குள் பகல் உணவை முடித்து வந்துவிடும் அவசரத்தில் முகாம் குழுவினர் எப்போதோ வந்து போகும் ரயில் வழியோரக் கடையில் மரப்பலகையில் நெருக்கியடித்து உட்கார்ந்து, இருந்த மிளகாய் நெடிக் குழம்புச் சோற்றை அவசர அவசரமாய் விழுங்க முற்பட்டனர்.

இவர்கள் சாப்பிட்டு முடித்து முன் நின்றால்தான் மீதி வேலையும் முடியும். புளியமர நிழலில் வெப்பந்தான் அதிகமாய் இருந்தது. இருட்டுவதற்குள் எல்லா ஊர்களுக்கும் சென்றுவிட முடியுமா? காலை பத்து மணிக்கே எல்லாரும் வந்து குழுமிவிட வேண்டுமென அந்தப் பகுதியின் அனைத்து ஊர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. விடிந்தும் விடியாத காலையில் குடித்திருந்த பழங்கஞ்சியும் ஆவியாகி, மேலும் பஞ்சடைந்த கண்களுடன் அங்கங்கு காக்க வைக்கப்பட்டிருக்கும் ஒரு கூட்டம் ஓரமாய். காத்திருக்கப் பழகிய கூட்டம்.

●

அடுத்த இலக்குக்குப் புறப்பட்டது வண்டி.

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# அறிவுரை வித்தகன்

## சல்மான் ருஷ்டி

மாதத்தின் கடைசி செவ்வாய்க்கிழமை. வைகறைப் பொழுது. அந்தப் பேருந்து தனது முன்விளக்குகளைக்கூட அணைக்காமல் பிரிட்டிஷ் தூதரக அலுவலகம் முன்பு வந்து நின்றது. உள்ளே ஒரு வெண்ணிலவு—மிஸ் ரெஹனா. வந்து நின்ற பேருந்து கிளப்பிய புழுதி மேகம் அவள் அழகுக்குக் கொஞ்ச நேரம் திரை போட்டாலும் அது அவள் கீழே இறங்கும் வரைதான்.

அந்தப் பேருந்து முழுக்க அராபிய கலாச்சார சாயலில் பளீரென்ற பல வண்ணத்தீட்டல்கள். அதன் முன்பக்கம் பச்சை மற்றும் தங்க நிறத்தில் 'முந்திச் செல் கண்மணியே' என்னும் வாசகம். பின்புறத்தில் 'போய்வா என் பாட்டாவே' மற்றும் 'வாழ்க வளமுடன்' என்னும் வாழ்த்துகள். மிஸ் ரெஹனா ஓட்டுனரைப் பார்த்து பேருந்து மிகவும் அழகாக இருப்பதாகச் சொல்லப்போக, பேருந்து நின்றதும் அவன் கீழே குதித்துவந்து நாடக பாணியில் தலை தாழ்த்தி அவளுக்காகக் கதவைத் திறந்துவிட்டான்.

மிஸ் ரெஹனாவுக்குப் பார்ப்பவரைக் கிறங்க வைக்கும் பெரிய கரிய ஒளிவீசும் கண்கள். அக்கண்களைப் பார்த்ததுமே 'அறிவுரை வித்தகர்' முகமது அலி தனக்கு வாலிபம் திரும்புவதாக உணர்ந்தார். அவள் தூதரக நுழைவாயிலை நெருங்குவதையும், தங்க நிறப் பித்தான்கள் பளப்பளக்கும் காக்கி சீருடையும் விசிறி மடிப்பு வைத்த தலைப்பாகையும் அணிந்த காவலாளியான தாடிக்கார லாலாவிடம் அலுவலகம் எப்போது திறக்கும் எனக் கேட்பதையும் அவர் கவனித்தார்.

தூதரக அலுவலகத்திற்கு வரும் செவ்வாய்க் கிழமைப் பெண்களிடம் வழக்கமாக எரிச்சல்படும் அந்த லாலா மிஸ் ரெஹனாவுக்கு கொஞ்சம் மரியாதையாகவே பதில் சொன்னான்:

"அரை மணியும் ஆகலாம். ரெண்டு மணி நேரமும் ஆகலாம். துரைமார்கள் எல்லாம் இப்பதான் காலைச் சிற்றுண்டியைக் கொட்டிக்கிட்டு இருக்காங்க."

தூதரகத்துக்கும் பேருந்து நிறுத்தத்துக்கும் இடையிலான புழுதி படர்ந்த சுற்றுவெளி ஏற்கனவே செவ்வாய்க்கிழமைப் பெண்

படிப்பகம்

www.padippakam.com



களால் நிரம்பியிருந்தது. அவர்களில் சிலர் பர்தா போட்டிருந் தார்கள். வெகு சிலர் ரெஹனாவைப் போல பர்தா இல்லாமலும் இருந்தார்கள். அநேகமாக எல்லாரும் பயந்தவர்களாகவும், துணைக்கு வந்திருந்த சகோதரன் அல்லது மாமன்மார்களை மலைபோல் நம்பியவர்களாகவும் தென்பட்டார்கள். ஆனால் மிஸ் ரெஹனாவோ தனியாக வந்திருந்ததோடு எந்தவித பதட்டமும் இல்லாதவளாகவும் இருந்தாள்.

முகமது அலியால் இந்த வாராந்திர விண்ணப்பப் பறவைக ளில் எது ஒரே கணையில் விழுந்துவிடும் என்பதை ஒரு பார்வை யில் கண்டுகொள்ள முடியும். ஆனால் இன்றோ அவரது கால்கள் தனியாக வந்திருந்த அந்த அபூர்வ தடங்கண்ணாளை நோக்கி அவரையறியாமலேயே நடந்தன.

''மிஸ், நீங்க லண்டனுக்கு பெர்மிட் வாங்க வந்திருக்கீங்கன்னு நெனைக்கிறேன்,'' என்று தன் பேச்சைத் தொடங்கினார்.

தூதரகச் சுற்று மதிலின் ஒரு மூலையில் இருந்த சிற்றுணவுக் கடையில் நின்று கார பக்கடாவைத் தின்று கொண்டிருந்தவள் அவர் குரலைக் கேட்டுத் திரும்பினாள். அத்தனை நெருக்கத்தில் பார்த்த போது அந்தத் தடங்கண்கள் அவரது இரைப்பை சுரப்பி யில் தப்பிதம் செய்தன.

''ஆமா,'' என்றாள்.

''அப்படின்னா, நான் அது விஷயமா சில நல்ல யோசனை களைக் கொடுக்க முடியும். அதுக்காக செலவும் ரொம்ப ஆகாது.''

அவள் புன்னகைத்தவளாய், ''நல்ல யோசனைகள் வைரங்க ளைவிட அரியவைதான். ஆனா, என்னால ஒன்னும் தரமுடி யாது. நான் ஒரு அனாதை. உங்க சீமாட்டிகள்ல ஒருத்தியில்ல,'' என்றாள்.''

முகமது அலி மேலும் அழுத்தம் கொடுத்துச் சொன்னார்:

''என்னோட நரைச்ச தலைய நீங்க நம்பலாம். என் யோச னைகள் நீண்ட அனுபவத்தால மெருகேறினது. உங்களுக்கு கட் டாயம் நல்லது செய்யும்.''

அவள் மறுத்துத் தலையாட்டினாள்: ''இல்லிங்க, என்கிட்ட பணம் கிடையாது. அங்க பாருங்க, நெறைய பொம்பளைங்க அவுங்கவுங்க குடும்பத்துப் பணங்காய்ச்சி மரங்களோட வந்திருக் காங்க. அங்க போங்க. நல்ல யோசனைக்கு நல்ல சன்மானமும் கெடைக்கணும் இல்லியா?''

படிப்பகம்

www.padippakam.com



முகமது அலி தனக்குப் புத்தி பேதலித்துக்கொண்டிருப்பதாக நினைத்தார். ஏனெனில் அவருடைய குரலே அதன் உக்கிரத்தை உதிர்க்கக் கண்டார். "மிஸ், விதிதான் என்னை உங்கக்கிட்ட இழுத்தாந்திருக்கு. வேறென்ன சொல்ல. நாம இப்படி சந்திச்சிக்குவோம்னு ஏற்கனவே எழுதி வச்சிருக்கு. நான் ஏழைதான். ஆனா உங்களுக்காக என் யோசனையை இலவசமாவே வழங்கத் தோணுது."

அவள் மீண்டும் நகைத்தாள்: "அப்படின்னா நான் அவசியம் கேக்கணும். விதியே ஒரு வெகுமதிய அனுப்பிவச்சா அது அதிர்ஷ்டம்தான்."

அவர் அவளை, பக்கத்தில் இருந்த தனது, ஒரேயொரு கணக்குப்பிள்ளை டெஸ்க்' உள்ள 'ஆபீசுக்கு' அழைத்துப்போனார். அவள் தனது கையிலிருந்த- செய்தித்தாளில் சுற்றிய கார பக்கடாவைத் தின்றபடியே பின்தொடர்ந்தாள். பக்கடாவை எந்தக் கட்டத்திலும் பகிர்ந்து கொள்ள முயலவில்லை.

முகமது அலி ஒரு மெத்தை தடுக்கை எடுத்து தூசு படிந்த தரையில் போட்டு அதில் அவளை உட்காரச் சொன்னார். தான் அவளுக்கு எதிரே டெஸ்க் முன்னால் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டார. வெளியே ஒரு பத்துப் பதினைந்து ஜோடி ஆம்பிளைக் கண்கள் அவரைப் பொறாமையோடு நோட்டமிடுவதையும் 'ஒரு இளைய அழகுப் பெட்டகம் இந்தத் தலை நரைத்த ஏமாற்றுப் பேர்வழியிடம் வசியமாகிவிட்டாளே' என்று புழுங்குவதையும் அவரால் உய்த்துணர முடிந்தது. ஆழ்ந்து மூச்சிழுத்தவராய் தன்னை ஒருநிலைப்படுத்திக் கொண்டார்.

"பேர் சொல்லுங்க."

"மிஸ் ரெஹனா. பிராட்போர்ட் – லண்டனிலுள்ள முஸ்தபா தார் என்பவருக்கு நிச்சயிக்கப்பட்டவள்."

"பிராட்போர்ட் – இங்கிலாந்து" என இதமாய்த் திருத்திய முகமது அலி, "லண்டன் ஒரு நகரம் மட்டும்தான்- மூல்தான், பகவல்பூர் மாதிரி. இங்கிலாந்து ஒரு பெரிய தேசம் — உலகத்திலுள்ள கல்மனசுக்காரர்களையெல்லாம் உள்ளடக்கிய தேசம்," என்றார்.

"அப்படியா? நன்றி," என்றாள் அ.சவின்றி. ஒருவேளை அவள் நையாண்டி செய்கிறாளோ என்று அவருக்கொரு சந்தேகம்.

"விண்ணப்ப படிவத்தை நிரப்பி இருப்பிங்க. எங்கே இப்படிக் குடுங்க பாக்கலாம்."

படிப்பகம்

www.padippakam.com



ஒரு பழுப்பு உறையில் அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்த விண்ணப்பத்தை அவரிடம் தந்தாள்.

''சரியாயிருக்கா?'' என்று கேட்டபோது முதல் தடவையாக அவள் குரலில் மெலிதாகப் பதட்டம் தென்பட்டது.

டெஸ்கில் அவள் கையூன்றியிருந்த இடத்தருகே தட்டியபடி ''இருக்கணும். கொஞ்சம் பொறுங்க. பார்த்துடலாம்,'' என்றார்.

விண்ணப்பத்தாள்களை அவர் நோட்டம்விடும் வேளையில் அவள் தன் பொட்டலத்தைத் தின்று முடித்திருந்தாள்.

படித்துமுடித்ததும் ''பிரமாதம், எல்லாம் சரியா இருக்கு,'' என்றார் முகமது அலி.

''ரொம்ப நன்றி. அப்ப நான் போயி அங்க வாசல் பக்கத்துல நிக்கிறேன்,'' என்று சொல்லி எழ முயன்றாள்.

பதறிப்போனவராய்ப் பெருங்குரலில், ''என்ன நெனச்சுக்கிட்டு இருக்கீங்க?'' என்று கத்தி தன் நெற்றியில் அடித்துக்கொண்டார். ''இது அவ்வளவு சுலபமான காரியம்னா நெனைக்கிறீங்க? என்னமோ நீங்க போயி இத நீட்டிட்டு மூச்சுவாங்கி நின்னதும் அவுங்க ஒரு பெரிய புன்னகையோட பர்மிட்ட கொடுத்துடுவாங்கன்னு நெனைக்கிறீங்களா? மிஸ் ரெஹனா, ஒன்னத் தெரிஞ்சுக்கங்க. நீங்க ஒரு போலீஸ் ஸ்டேஷன விட மோசமான ஒரு எடத்துக்குப் போறோங்கறத மனசுல வையுங்க.''

''அப்பிடியா? உண்மையாவா!''

முகமதுஅலியின் வாய்ச் சவடால் தன் வேலையைத் துவங்கி விட்டது. இப்போது அவள் தொடர்ந்து அவர் பேச்சைக் கேட்டுத் தானாக வேண்டும். அவரும் சிறிது தொடர்ந்து அவள் முகத்தை பார்த்துக் கொண்டிருக்க முடியும்.

இன்னொருமுறை அமைதியாக மூச்சை இழுத்துவிட்டு தனக்கு அத்துப்படியான உத்திகளை அவிழ்த்துவிட்டார்.

'இந்தத் தூதரக அதிகாரிகளுக்கு புருஷன்காரன் ஹூட்டன்ல பஸ் டிரைவராக இருக்கான், மான்செஸ்டர்ல சார்டட் அக்கவுண்டெண்டா இருக்கான்னு சொல்லி பர்மிட் கேட்டு வர்ற செவ்வாய்க் கெழமப் பொண்ணுக எல்லாருமே திருடிங்க, பொய்க்காரிங்க, ஏமாத்துப் பேர்வழிங்கன்னு நெனப்பு'' என்றார்.

''அப்படின்னா, நான் அப்படி இல்லன்னு சொல்லுவேன்'' என்று அவள் சொன்னாள். அவளுடைய இந்த வெள்ளை மனசு அவரிடம் ஒரு பயத்தையே ஏற்படுத்திவிட்டது. 'அவள் ஒரு சின்னக் குருவிபோல. அவர்களோ பொய்ப் பார்வை காட்டும் கழுகுகள் மாதிரி' என்று அவளுக்கு விளக்கினார். ஒரு சகோதரன்

படிப்பகம்

www.padippakam.com


கேட்கக்கூசும் கேள்விகளையெல்லாம் அவளிடம் அவர்கள் கேட்பார்கள். அவள் இன்னும் கன்னி கழியாமல்தான் இருக்கிறாளா? இல்லையென்றால் அவளுடைய ஆளின் காதல் சேட்டைகள் என்ன? அவர்கள் ஒருவருக்கொருவர் கொஞ்சிக்கொள்ளும் அந்தரங்கமான செல்லப்பெயர்கள் என்ன? என்றெல்லாம் கேட்பார்கள்' என்றார்.

முகமது அலி இதையெல்லாம் முரட்டுத்தனமாகவே சொன்னார். ஏனென்றால் அவள் இதுபோன்ற கேள்விகளை உண்மையில் சந்திக்க நேரும்போது அதிர்ந்து போகாமல் இருப்பாள் அல்லவா.

அவர் சொல்லியதைக் கேட்டு அவள் கண்களில் அசைவில்லை எனினும் கைகள் மெல்ல நடுங்கின.

அவர் மேலும் தொடர்ந்தார்:

"அவங்க ஒங்க வீட்டில எத்தன அறைகள் இருக்குன்னு கேப்பாங்க. சுவர்களின் நிறம் என்ன? வீட்டுக் குப்பைய எந்தெந்த நாள்ல கொட்டுவீங்க? ஒங்க ஆளோட அம்மாவோட- மூனாவது ஒன்னுவிட்ட தம்பியோட- அத்தையோட- ஒர்ப்படியாள் மகளோட நடுப்பெயர் என்னென்னெல்லாம் கேப்பாங்க. இதே கேள்விகள முஸ்தபா தரரிட்டயும் அங்க கேட்டு பதில வாங்கி வச்சிருப்பாங்க. ரெண்டும் ஒத்துப் போகணும். ஒன்னு தப்பாச்சோ நீங்க அவ்வளவுதான்."

கொஞ்சம் தொண்டையைச் செருமி சரி செய்து கொண்டு' தணிந்த குரலில் ரெஹனா கேட்டாள்: "சரிங்க பெரியவரே, இதுல ஒங்க அறிவுரை என்ன?"

இந்தக் கட்டத்தில்தான் முகமது அலி தன்னிடம் சிக்கியவர்களின் காதுகளில் இரகசியம் ஓதுவது வழக்கம். தூதரக அலுவலகத்தில் நம்பகமான ஒரு ஆளைத் தனக்குத் தெரியுமென்றும், அவருக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தால் காரியம் கச்சிதமாக முடிந்துவிடும் என்றும், இது ஒரு நல்ல பேரம் என்பதால் தான் எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்கு, சம்பந்தப்பட்ட பெண்களே மனமுவந்து ஐந்நூறு ரூபாயோ, அல்லது ஒரு தங்கச் சங்கிலியோ தந்துவிட்டு சந்தோஷமாகச் செல்வார்கள் என்றும் சொல்வார்.

அநேகமாக அவர்கள் பலநூறு மைல்களுக்கப்பாலிருந்து வந்திருப்பார்கள்— வழக்கமாக இதைத் தெரிந்துகொண்ட பிறகுதான் அவர் தனது வலையைப் பின்னுவார்— பிற்பாடு ஒருவேளை தாங்கள் ஏமாற்றப்பட்டது தெரியவந்தாலும் இவரைத் தேடிக்கொண்டு பெரும்பாலும் அவர்கள் வரப்போவதில்லை.

வாழ்க்கை கடினமானது. ஒரு கிழவன் தன் சாதுரியத்தால் தான் காலம் தள்ள வேண்டும். இந்த செவ்வாய்க்கிழமைப் பெண்

படிப்பகம்

www.padippakam.com



களுக்காக இரக்கப்படுவது முகமது அலி வேலை இல்லை.

ஆனால் இப்போதோ அவர் குரல் மீண்டும் சதி செய்துவிட்டது. அவருடைய வழக்கமான தந்திரோபாயங்களைப் பேசுவதற்குப் பதிலாக அவருடைய உள்கிடக்கையை அவளுக்கு வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது. அவருடைய குரல் அவருக்கே ஆச்சரியமளித்தது.

''மிஸ் ரெஹனா, நீங்க ஒரு அபூர்வ பிறவி. போற்றிக் காக்க வேண்டிய ஆபரணம். என் சொந்த மகளுக்குச் செய்ய முன் வராத உதவியைக்கூட, நான் ஒங்களுக்காக செய்வேன். எங்கிட்ட ஒரு டாக்குமெண்ட் வந்திருக்கு. அது ஒங்க எல்லாக் கவலையையும் ஒரு நொடியில தீர்த்து வச்சுடும்.''

''அப்பிடி என்ன ஆவணத்த இந்த மயாஜாலக்காரரு வச்சிருக்கிறாராம்?'' என்றாள். இப்போது அவள் கண்கள் ஐயத்திற்கிடமின்றி அவரைப் பார்த்துச் சிரித்தன.

அவர் தன் தாழ்ந்த குரலை மேலும் தாழ்த்திக் கொண்டார். ''மிஸ் ரெஹனா இது ஒரு பிரிட்டிஷ் பாஸ்போர்ட். வெகு நம்பிக்கையான, பக்கா பாஸ்போர்ட். எனக்கு ஒரு நண்பன் இருக்கான். அவன் ஒங்க பேரையும் படத்தையும் இதுல ஒட்டித் தருவான். அடுத்த நாளே இங்கிலாந்து ஒங்க வீட்டு வாசல்லே.''

அவர் சொல்லி முடித்துவிட்டார். இன்றைய அவரின் பைத்தியக்காரத் தனத்தில் எதுவும் சாத்தியம்தான். ஒருவேளை அந்த பாஸ்போர்ட்டை அவளுக்கு இலவசமாகவே வழங்கிவிட்டு அதன் பிறகு அடுத்த ஓராண்டுக்கு சோற்றுக்கே லோல்படுவதுகூட.

அவர் தன்னையே திட்டிக்கொண்டார்: 'அட முட்டாள் கிழவா, அது எப்படிடா ஒன்னை மாதிரி சாகப்போற கெழவனெல்லாம் இந்த மாதிரி சின்னப் பொண்ணுகளுக்கிட்ட வசியமாயிடுறீங்க!'

ரெஹனா சொன்னாள்: ''எனக்கு இப்ப விளங்குது. அதாவது நீங்க என்னை ஒரு குத்தத்தைச் செய்யத் தூண்டுறீங்க?...''

''குத்தம் இல்ல.. வாய்ப்பு,'' என்று அவர் இடைமறித்துச் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தொடர்ந்து, ''அதாவது, சட்ட விரோதமா பிராட்போர்ட்- லண்டன் போயி, நம்மப் பத்தி இந்த பிரிட்டிஷ் அதிகாரிங்க வச்சிருக்கிற மோசமான அபிப்பிராயத்த நியாயப்படுத்தச் சொல்றீங்க. இது நல்ல அறிவுரை இல்ல, பெரியவரே,'' என்றாள்.

''பிராட்போர்ட்– இங்கிலாந்து...'' என்று திருத்தியவராய் துயரத்தோடு, ''என்னோட வெகுமதியை நீங்க இந்த அர்த்தத்துல எடுத்துக்கக் கூடாது'' என்றார்.

''பின்ன எப்படி?''

படிப்பகம்

www.padippakam.com


"பீபி, நான் இல்லாதவன். இருந்தாலும் இந்தப் பரிச ஒங்க அழகுக்காகத்தான் கொடுத்தேன். தயவு செஞ்சு என் நல்ல மனசு முகத்துல துப்பாதிங்க. இத எடுத்துக்கங்க. இல்ல, விட்டுடுங்க. வீட்டுக்குப் போங்க. இங்கிலாந்த மறந்துடுங்க. அந்தக் கட்டடத் துக்குள்ள மட்டும் போகாதிங்க. போயி ஒங்க கௌரவத்த நாசப் படுத்திக்காதிங்க."

ஆனால் அவள் அவரை ஒதுக்கிவிட்டு அலுவலக வாயிலை நோக்கி நடந்தாள். அங்கே பெண்கள் முண்டியடித்துக்கொண்டிருந்தார்கள். அந்தத் தாடிக்கார லாலா, "பொறுமையா வாங்க. இல்லன்னா ஒருத்தரும் உள்ள போகமாட்டீங்க" என்று கத்திக் கொண்டிருந்தான்.

முகமது அலி பின்னாலிருந்து கத்தினார்: "அவ்வளவு மர மண்டையா இருந்தா போ. எனக்கென்ன போச்சு."

அவள் திரும்பிப் பார்க்கவில்லை.

"இதுதான் நம்ம மக்களப் பிடிச்ச சாபம். ஏழையா இருப் பாங்க. ஒரு எழவும் தெரியாமயும் இருப்பாங்க. ஆனா எதையும் கத்துக்கவும் மாட்டாங்க," என்று கொதித்தார்.

எதிர்ப்புறம் உள்ள பெட்டிக் கடையில் நின்றுகொண்டிருந்த ஒருத்தி, "ஏ முகமதலி. இது ரொம்ப மோசம். அவ வயசுப் பசங் களத்தான் பாப்பா," என்றாள்.

அன்று மகமது அலிக்கு வேறு எந்த வேலையும் ஓடவில்லை. தூதரக வாயில் அருகிலேயே சுற்றிச் சுற்றி வந்தார். பல தடவை தன்னையே திட்டிக் கொண்டார்: 'போடா இங்கிருந்து கெழட்டு முண்டமே. அவ ஒங்கூட இதுக்கு மேல பேச விரும்பிலேடா.'

ஆனால் அவள் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தபோது அவர் இன்னும் அங்கே காத்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"சலாம், அறிவுரைவாலா," என்று அவரை வரவேற்றாள். பார்க்க, சாந்தமாகவே தோன்றினாள். அவரோடு சமாதானமாகிவிட்டதைப்போலவே தென்பட்டாள்.

முகமதுஅலி அதைக் கண்டு, "கடவுளே, யா அல்லா, இவ ஜெயிச்சிட்டா. இந்த பிரிட்டிஷ் அதிகாரிப் பசங்ககூட இவ கண் பட்டு கரைஞ்சுட்டானுங்க. இங்கிலாந்துக்கான பாதை இவளுக் குத் திறந்தாச்சு," என்று உள்ளுக்குள் கத்தினார்.

அவர் அவளைப் பார்த்து நம்பிக்கையோடு முறுவலளித்தார். அவளும் பதிலுக்கு எந்தத் தயக்கமுமின்றி முறுவல் பூத்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



''மிஸ் ரெஹனா பேகம், உன் வெற்றிக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துகள், மகளே'' என்றார். அவள் நெகிழ்ச்சியோடு அவரது கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டாள்.

''வாங்க. ஒங்க அறிவுரைக்காகவும், ஒங்ககிட்ட நான் முரட்டுத்தனமா நடந்ததுக்காக மன்னிப்பாவும் ஒரு கார பக்கடா பொட்டலம் வாங்கி வர்றேன்,'' என்றாள்.

பிற்பகல் புழுதியில் புறப்படத் தயாராக இருந்த ஒரு பேருந்து அருகே அவர்கள் நின்று கொண்டிருந்தனர். கூலியாட்கள் படுக்கை போன்ற பொருள்களைப் பேருந்து கூரைமேல் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். ஒரு நடைபாதை வியாபாரி காதல் கதைகளையும் ஒரு பச்சை மருந்தையும் சந்தோஷத்தின் திறவுகோல் என்று பயணிகளிடம் கூவி விற்றுக் கொண்டிருந்தான். மிஸ் ரெஹனாவும் முகமதுஅலியும் அந்தப் பேருந்தின் முன் பம்பரில் உட்கார்ந்து கொண்டு கார பக்கடாவைச் சுவைத்தார்கள். நமது கிழ அறிவுரை வித்தகர் மகிழ்ச்சியோடு ஏதோ ஒரு சினிமா டியூனை மெல்ல ஹம்மிங் செய்தார்.

திடுதிப்பென்று ரெஹனா சொன்னாள்: ''எங்க நிச்சயதார்த்தமே எங்கப்பா பாத்து செய்தது. அப்ப எனக்கு ஒன்பது வயசு. எங்கப்பாவுக்கு எப்படியாவது என்னைத் தள்ளிவிட்டாக வேண்டிய கட்டாயம். முஸ்தபா தாருக்கு அப்பவே முப்பது வயசிருக்கும். என் அப்பா அம்மா இறந்த பின்னாடி முஸ்தபாவும் இங்கிலாந்து போனாரு. போனதும் என்னைக் கூட்டிக்கிறதா சொல்லிட்டுத்தான் போனாரு. ஆனா ரொம்ப வருஷம் ஆயிடுச்சு. எங்கிட்ட அவரோட போட்டோ இருக்கு. ஆனா பாக்குறப்ப எனக்கு அவரு ஒரு அந்நியமான ஆளு மாதிரிதான். போன்ல அவர் குரல் கூட எனக்கு அடையாளம் தெரியிறதில்லை.''

முகமது அலிக்கு அவள் இப்படித் தன் கதையைக் கொட்டியது ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும் ஆதரவாகத் தலையாட்டிக் கேட்டுக் கொண்டார். ''எது எப்படியிருந்தாலும் பெத்தவங்க பிள்ளைங்க நன்மைக்காகத்தான் எதையும் செய்வாங்க. ஒங்க ஒரு நல்ல மனுஷனத்தானே உனக்குத் தேடியிருக்காங்க. இப்ப பாரு. அவரு தன்னோட வார்த்தையக் காப்பாத்தி உன்னைக் கூட்டிக்கிறாரு. இனிமே அவரைத் தெரிஞ்சிக்கவும் நேசிக்கவும் ஒன் வாழ்நாள் முழுக்க ஒனக்கு முன்னால இருக்குதில்லியா.''

ஆனாலும் அவளது சிரிக்கும் உதடுகளில் நெளிந்த கசப்பைக் கண்டு அவர் குழம்பினார்.

படிப்பகம்

www.padippakam.com



"ஆனா பாபுஜி, நான் இங்கிலாந்து போறேன்னு யாரு சொன்னது? நீங்க பாட்டுக்கு நீங்களே பெர்மிட் போட்ட மாதிரி பேசுறிங்க, என்றாள்.

அவர் அதிர்ந்து போய் எழுந்துவிட்டார்.

"நீ சந்தோஷமா தெரிஞ்சே. அதனாலதான் நான் அப்படி நெனைச்சேன். மன்னிக்கனும். அவுங்க உனக்கு பர்மிட் இல்லேன்னு சொல்லிட்டாங்களா? என்ன ஆச்சு?',

"அவுங்களோட எல்லா கேள்விகளுக்கும் தப்பு தப்பாவே பதில் சொன்னேன். இந்தக் கன்னத்துல இருக்கிற அடையாளத்த அந்தக் கன்னத்துல இருக்கிறதா சொன்னேன். பாத்ரூம் ஒழுங்கையெல்லாம் மாத்திச் சொல்லிட்டேன். எல்லாம் தலைகீழாப் போயிடுச்சு."

"அப்ப இப்ப என்ன செய்யறது? எப்படி நீ இங்கிலாந்து போகப் போறே?"

"இல்ல. நான் திரும்பவும் லாகூருக்கு, என் பழைய வேலைக்கே போறேன். ஒரு பெரிய குடும்பத்துல மூணு அருமையான பிள்ளைங்களுக்கு ஆயாவா இருக்கிறேன். நான் அவங்களப் பிரிஞ்சு வந்ததுல ரொம்ப வருத்தப்பட்டுக்கிட்டிருப்பாங்க."

"ஆனா இது ரொம்பக் கொடுமை, ரெஹனா. நான் சொன்னதைக் கேக்கச் சொல்லி அடிச்சுக்கிட்டேன். இப்ப அதுக்கும் வாய்ப்பு இல்லை. இப்ப அவங்க உன் விண்ணப்பத்த கோப்புல சேர்த்திருப்பாங்க. நாம புதுசா செஞ்சா கிராஸ் செக்ல தெரிஞ்சு போயிடும். போச்சு. எல்லாம் போச்சு. என் பேச்சக் கேட்டிருந்தா எல்லாம் எப்பிடி நல்லபடியா முடிஞ்சிருக்கும்!"

"பரவாயில்ல பாபுஜி. ஆனா நான் நெனைக்கல. உண்மையாவே நெனைக்கல நீங்க இவ்வளவு வருத்தப்படுவிங்கன்னு நான் நெனைக்கல."

பேருந்தில் அமர்ந்து, அது புறப்பட்டபோது முகமதுஅலியைப் பார்த்து மிஸ் ரெஹனா சிந்திய அவளுடைய கடைசிப் புன்னகை அவரது நீண்ட — நெருப்பான — கரடுமுரடான — கடினமான — காதலே காணாத வாழ்க்கையில் ஒரு ஈடற்ற மகிழ்ச்சி,

(Story: Good Advice Is Rarer Than Rubies) தமிழில்:

**ஜெயந்தன்**

படிப்பகம்

www.padippakam.com



# வேரில் உயிர்க்கும் சாரமாய்...

கவிதாசரண்

அண்மையில் படிக்க நேர்ந்தவற்றுள் என்னை அதிகம் ஈர்த்த நூலாக 'உயிர்த்தண்ணீர்' என்னும் சிறுகதைத் தொகுதியைச் சொல்ல வேண்டும். கவிஞராக அறியப்படும் கண்மணி குணசேகரனின் முதல் கதைத் தொகுதி. இப்போதெல்லாம் 'தலித்' என்னும் சொல் சாதி சார்ந்ததாகவே இறுக்கம் பெற்றுவிட்டது. அதை வர்க்கம் சார்ந்ததாகவும் நீட்டக்கூடும் எனில் 'உயிர்த்தண்ணீர்' அந்த வகைக்கான அருமையான 'மாதிரி'. பாரதி சொன்னானே: "கஞ்சி குடிப்பதற்கிலார்– அதன் காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்' என்று – அப்படிப்பட்ட அறிவு துலக்கமற்றவர்களாய்த்தான் ஏறக்குறைய இந்தியச் சிற்றூர் மக்கள் எல்லாருமே இந்தக் கணிணி யுகத்திலும் தங்கள் வறுமையைச் சுமப்பதே வாழ்க்கைத் தவமாகக் கொண்டிருக்கிறார்கள். கண்மணி எழுதித் தீர்க்கும் கதை மாந்தர்கள் அந்த வெகு மக்களின் 'ஒரு சோற்றுப் பதம்.'

இவற்றைக் கதைகள் எனக் குறிப்பது ஒரு வசதிக்காகத்தான். உண்மையில் இவை காற்றில் புனைந்த கற்பனைச் சித்தரிப்புகள் அல்ல. ஒரு அதிசயம் போல வடிவ அழகும், கலை நுட்பமும், படைப்பியல் செறிவும் இயல்பாகப் பொருந்திக் கதைகளாய்த் திரண்டிருக்கும் மெய்யான நிகழ்வுகள். கண்மணி வாழும் செம் மண் காட்டில் இப்போதும் எப்போதும் வாழ்வின் பாவோட்டங்களாக எதிர்ப்படும் நிகழ்வுகள். அன்றாடம் பாவித்தால் வைரமும் குப்பைதான். அந்த மக்களுக்கு இந்த நிகழ்வுகளும் அப்படித்தான். அவற்றைத்தான் கண்மணியின் மையூற்று வேரில் உயிர்க்கும் மண்ணின் சாரமாய், புதுக் கருக்கழியாத வைரப்பூக்களாய் மீட்டுருவாக்கியுள்ளது.

ஆகச் சாதாரணம் போல ஏச்சம் காட்டும் இந்த நூலின் மொழியோட்டத்தில் அர்த்தம் துளிர்க்கும் ஒவ்வொரு இணுக்கும், ஆவணம் பேசும் ஒவ்வொரு வாக்கியமும் நமக்குச் சொல்வதெல்லாம் 'இது புலன்களை விரல்களாக்கிக்கொண்டவனின் செய்நேர்த்தியல்லவா!' என்னும் சாத்தியப்பாட்டைத்தான். ஆலமரமும் அருகம் புல்லும் தம் வேர்களோடும் விழுதுகளோடும் இம்மண்ணைப் பற்றிப் படர்வதுபோல் ஒரு மனிதனாலும் முடியுமா எனில், முடியும்

படிப்பகம்

www.padippakam.com


என்பதற்கு சாட்சி கண்மணி குணசேகரன். முந்திரிக் காட்டுச் செம்மண்ணோடும் விளிம்பில் தளும்பும் அதன் மக்களோடும் சோற்றில் கரைந்த உப்புக்கல் மாதிரி தன் இருப்பைக் கரைத்து உயிர்ப்பூட்டியிருக்கிறார்.

இந்தக் கதைத் தொகுப்பை முதலில் நான் கையெழுத்துப் படிவத்திலும் பின்னர் அச்சாக்கத்தில் எழுத்தெண்ணியும் படிக்க நேர்ந்தது. அப்படி நேராமல் போயிருந்தால் இதன் அழகைத் தவற விட்டிருப்பேன். முதலில் இதைப் படிக்கத் தொடங்கியபோது இதன் மொழியும் நானும் இருவேறு நிலைகளில் இருக்கக் கண்டேன்— நீரோட்டமாக இந்த மொழியும், பனிக்கட்டியாக நானும். முதல் பத்துப் பதினைந்து பக்கங்கள் மொழியோடு ஒன்றாமல் மிதக்கத்தான் முடிந்தது. பின்னர் எப்போதென்ற நினைவழிந்து நீரோடு நீராய்க் கரைந்து போயிருந்தேன்.

என் தொடக்கநிலைத் தடங்கலுக்குக் காரணம் இக்கதைகள் மரபான இலக்கிய மொழியில் எழுதப்படவில்லை என்பதும், நான் மரபு மொழிக்கும் வாழ்வுக்கும் என்னைத் தத்தம் செய்தவனாக வார்க்கப்பட்டவன் என்பதும்தான். பொதுத்தன்மை தவிர்த்து தனித்துவக் கவசமிட்டுக் கொள்வதே மரபின் இலக்கணமாகி, மரபு மொழியானது வெகுமக்களின் இயல்பான வாழ்க்கையை எழுத்தில் விலக்கி வைத்து, என்னதான் உன்னதப்படுத்தினாலும் பொய்யாய் சிதறிப் போகும் கற்பிதங்களை சத்தியப் பிரமாணங்களாக்கிக் கொள்ளும் இலக்கிய மொழியாக 'மேட்டிமையாளர்'களால் மாற்றப் பட்டுவிட்டது. மரபுகள் இயல்புகள் அல்லாமல் மாசுகளாகிவிடும் போது, மீறல்களால் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. இப்படியொரு மீறலின் வெளிப்பாடாகத்தான் கண்மணி குணசேகரன் இக் கதைகளைப் பூச்சுப் புனைவுகளற்ற தன் மண்ணின் மொழியில் படைத்திருக்கிறார். நாம் எல்லாரும் மண் சார்ந்த மொழியில் தவழ்ந்து விளையாடி, மரபு சார்ந்த மொழியில் பயின்று நிலைத் தவர்கள் என்பதால் மனத்தடை உடைத்தவர்களுக்கு இரண்டுக்கு முள்ள இடைவெளி நீருக்கும் பனிக்கட்டிக்குமானதுதான்.

ஒரு மொழி பயன்படுத்துபவர்களாலன்றித் தானாகவே கெட்டு விடுவதில்லை. இதுவரையான மரபுமொழி வெகுமக்களைப் புறக் கணித்ததற்காக, வெகுமக்கள் இலக்கியம் மரபுமொழியைப் புறக் கணித்தல் என்பது எதிர்வு நிலைக்கான நியாயமாகலாமே தவிர எக்காலத்துக்குமான நியாயமாகுமா என்பது கேள்வி. வெகுமக் கள் இலக்கியம் படைக்கும் புதிய படிப்பாளிகள் காலப் போக்கில் (இப்பொழுதேகூட) மரபுசார் வாழ்வும் மண்சார் எழுத்தும்

படிப்பகம்

www.padippakam.com


என இருமைப்பட்டு, பின்னர் புதிய மேட்டிமையாளர்களாக மாற மாட்டார்களா என்பது மற்றொரு கேள்வி. வாழ்க்கையின் போக்கு இதுவாய் இருக்கும்போது, மரபுமொழி- ஆதிக்கவாதிகளின் ஆயுத மாகிவிடுவதென்பது கருத்தியல் ரீதியான அதன் பயன்பாட்டால் தான். இந்நிலையில் குறைந்த பட்சம் மூன்று காரணங்களுக் காவது நமக்கொரு பொதுத்தன்மையுள்ள மரபுமொழி தேவையா கிறது. ஒன்று, அன்னை மடியிலிருந்து ஓர் அறிவுள்ள மனிதனை வார்த்தெடுக்க; மற்றொன்று, பரந்து விரிந்தவொரு மொழிக்குடும் பத்தைப் புரிதல் தளத்தில் இணக்கமாக ஒருங்கிணைக்க; மூன்றா வது, அறிவியல் வெளியை நம் சொந்த மொழியில் அளந்து பார்க்க. ஆகவே, இன்றைய மரபுமொழியின் பொய்யான கற்பிதங்களின் செய்நேர்த்தியையும், இறுக்கமான இலக்கண சட்டகங்களையும் உடைத்துக்கொண்டு, நடப்பியல் மெய்ப்பாடுகளுக்கு நெகிழ்ந்து கொடுப்பதாகவும், வட்டாரமொழி நேர்த்திகளால் வளம் பெறுவதா கவும், பன்முகச் சீர்மையை உள்வாங்கிக் கொள்வதாகவும், மனி தர்களைப் படிநிலைப்படுத்துவதை மறுப்பதாகவும், பால் வேற்று மையைக் களைவதாகவும், புதிதான மொழிமரபை உருவாக்க வேண்டும். அறிவாளர்கள் இடைவிடாமல் அதைப் புழக்கப்படுத்த வேண்டும். படைப்பாளர்கள் தங்கள் வெளிப்பாட்டை இந்தப் பொது மரபு மொழியாலும், தாங்கள் படைக்கும் பாத்திரங்களின் வெளிப்பாட்டை மண் சார்ந்த மொழியாலும் எழுதிச் செல்வது நம் மொழிக்குடும்பத்தின் எல்லைகளும் எண்ணங்களும் விரிவடை யவும் வலிமை பெறவும் உதவும் என்பது நம் எண்ணம்.

கோட்பாட்டு ரீதியாகக் கண்மணியின் மண்மொழியை மீறல் மொழியாக வகைப்படுத்தினாலும், கலைத்திறன் மிக்கதாய் இவர் நெய்திருக்கும் பாமர நேர்த்திகளுக்கு இந்த மொழியே பொருத்த மும் அழகும் மிக்கதாய் இருக்கிறது. இம்மொழியால்தான் அழுக் கில் பூக்கும் அழகுகளை வெளிக் கொணர்வதும், எளிமையில் ஒளி ரும் மனித மேன்மைகளை இனங்காட்டுவதும் வியப்பூட்டும் சாத் தியங்களாகின்றன. இதன் ஓர்மையை 'சிமிட்டித் தரையை நீர் கொண்டு கழுவினால் அழகு; மண் தரையை சாணமிட்டு மெழுகி னால்தான் அழகு' என்று நமக்குச் சொல்லத் தோன்றினாலும், இந்திய சமூகம் இதில் பொதிந்து கொள்ளும் ஆபத்து — தரைகளுக் கிடையிலான வேற்றுமையை வெகு சாமர்த்தியமாக மனிதர்களுக் கிடையிலானதாக நிலைப்படுத்திவிடும் என்பதுதான். எனவே மீறல் என்பது எழுத்தில் மட்டுமாக முற்றுப்பெறப் போவதில்லை எனவும் விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

மண் சார்ந்த மொழியை வட்டாரமொழி என்னும் பெயரில்,

படிப்பகம்

www.padippakam.com

கண்மணிக்கு முன்பே கடந்த ஒரு தலைமுறைக்கும் மேலாகச் சில முற்போக்கு இலக்கியவாதிகள் பயன்படுத்தி வந்துள்ளனர். எதார்த்தவியல் கோட்பாட்டுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தவர்களான அவர்களில் சிலர் கண்மணியை விடவும் தங்கள் படைப்பின் கடைசல் வேலைகளில் கைதேர்ந்தவர்களாய் இருக்கக்கூடும். இதில் கண்மணிக்குள்ள தனித்துவமாவது— இவர் எதை எழுதுகிறாரோ அதுவாகவே இருக்கிறார் என்பதும், மண்சார்ந்த எழுத்து இவருக்கு நினைவேடுகளின் நன்கொடையல்ல என்பதும், 'மரபுசார்ந்த-மண்சார்ந்த' என இருமைப்பட்டுவிடாத ஒருமையைத் தன் எழுத்தில் சுவாசிக்கிறார் என்பதும்தான். 'முத்திரைக் கதை'க்குரிய தகுதிகளாக வடிவம், உத்தி, நேர்த்தி,... எனும் வரிசையில் இந்த 'ஒருமை'க்கு உரிய மரியாதை உண்டெனில், இத்தொகுதியின் 13 கதைகளில் குறைந்தது 10 கதைகள் அந்த முத்திரையைக் குத்திக் கொள்ளும்.

இவரது எழுத்தை வட்டார வழக்கு எனச் சொல்வது ஒரு வசவோடு கூடிய வகைப்படுத்தல் மாதிரி. மார்க்காம்பைச் சுற்றி வேப்பங்காயை அரைத்துத் தடவிய பின்னும் ஒட்டாரமாக கசக்கக் கசக்க உறிஞ்சிக் குடித்த முலைப்பாலில் ஊறிய மண்மொழி இது.

இத்தொகுப்பில் மக்கள் படும் அவலங்களுக்கு அழுத்தம் கொடுப்பதாகச் சொல்லி அவர்களின் புற வாழ்வு கொச்சைப் படுத்தப் படவில்லை என்பதும், தவிர்க்கவியலாமல் வெளிப்படும் மரபான சாதி அடையாளங்கள் அல்லாமல் வேறு சந்தர்ப்பங்களில் சாதி பேசும் உந்துதலை படைப்பாளி முற்றாகத் தொலைத்திருக்கிறார் என்பதும் கவனத்துக்குரிய அம்சங்கள். நடைமுறையில் அப்படியில்லை என்றாலும், சாதி அறியாத பட்சத்தில் ஒரு பறையருக்கும் படையாச்சிக்கும் உள்ளும் புறமும் ஒரு வேறுபாடும் இல்லை என்னும் உண்மை நயமாகப் பதியப்படுகிறது. இதன் மூலம் தலித்திலக்கியப் படைப்பாளர்களிடையே இவர் ஒரு 'மாதிரி'யை முன்வைக்கிறார். இதன் மூலம், புதுச்சிந்தனையாளர்கள் என்னும் பெயரைப் போர்த்திக் கொண்டு, எவ்விதத் தர்க்க நியாயத்துக்கும் உட்படாது 'சாதியறிதல்' என்னும் அரிப்பெடுத்து அடக்கமில்லாமல் சொறிந்து கொள்கிறவர்களுக்கு இவர் ஆசானாயிருந்து 'வெட்கப் படக்' கற்பிக்கும் தகுதியையும் பெறுகிறார். எதார்த்தத்தின் பயன்பாட்டிற்கு எல்லைகள் உண்டு. உணக்கையாய் இருக்கிறது என்பதற்காக இரத்தம் வரச் சொறிந்துகொள்வதுதான் எதார்த்தம் என்பதல்ல; சொறியாமல் இருக்கப் பழகுவதும்தான் எதார்த்தத்தின் புதிய பரிமாணம். இது சாதிக்கு மட்டுமல்ல, மொழிக்கும்தான். எதார்த்தம் சொட்டச் சொட்ட எழுதுவதாகப் பேர் பண்ணிக்கொண்டு தமிழின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் எழுத்

படிப்பகம்

www.padippakam.com



தாளர்கள் இருக்கிறார்கள். எதார்த்தத்தின் எல்லைகள் பற்றிய சுரணை இவர்களுக்கும் வேண்டும்.

இக்கதைகளின் நிகழ்களம் ஒரு சிற்றூரும் அதன் சுற்றெல்லையுமாக ஒற்றைத் தளமாயிருப்பது சிலருக்குக் குறையாகப் படலாம். 'ஒருபடித்தான மக்கள்' 'ஒருபடித்தான மொழிதல்' என்று அதை குறுக்கிப் பார்க்கவும் முற்படலாம். பல்வேறு களங்களும் வெவ்வேறு உத்திகளுமாக, ஒரு வித்தைக்காரனின் சாகசம் போல எழுதிப் பிழைக்கிறவனின் உற்பத்திச் சரக்கை நுகர்ந்து பழகிய வாசக மனதின் 'நாக்கு செத்த' சலிப்பாகவே நாம் இதை வரவு வைக்க வேண்டும். கண்மணி அந்தத் தளத்துக்கு இன்னும் வரவில்லை, அல்லது வளரவில்லை என்பது அவரது நம்பகத்தன்மைக்கான வலிமையாகவே அமைகிறது. இத்தொகுப்பைப் பற்றி கவிஞர் அறிவுமதி— கண்மணியின் செம்மண் காட்டைச் சேர்ந்தவர்— இப்படிச் சொல்கிறார்: "மடுமுழுங்கி நெல் விளையும் சதுப்பு நிலம் நெய்வேலியான் புண்ணியத்தில் ஈச்சங்காடாகி, ஈச்சங்காடும் இரண்டாவது சுரங்கத்தால் இன்று மண்மேடாகிப் போனது போல், போக இருக்கும் அந்தப் பொட்டங் காட்டு வாழ்வின் மிச்சங்களை தப்பு முந்திரி பொறுக்குவது போல சேகரித்திருக்கிறான் தம்பி கண்மணி."

ஆக, அழிவின் விளிம்பில் நிற்கும் தன் மண்ணின் மரண வாக்குமூலத்தைக் கலை நேர்த்தியோடு ஆவணப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு இலக்கிய நோன்பாளர்தான் இந்தக் கண்மணி என்னும் போது அவரை உச்சி மோந்து கொள்ளவே தோன்றுகிறது. அவரது படைப்புலகப் பன்முகத்திறன் என்பது தன் சிற்றூரின் ஒற்றை முகத்தில் 'இடம் பொருள் ஏவல்' எழுதும் பல்வேறு நிலைப்பாடுகளின் உள்ளுருக்கங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக மீட்டெடுப்பதுதான். இவருக்கு அந்தத் தகுதி உண்டு என்பதற்கு வாக்குமூலம் தருவது இந்தத் தொகுதி.

இவ்வளவும் சொன்ன பிறகு, இக்கதைகளைப் பற்றி ஏதும் சொல்லவில்லை என்பது ஞாபகத்துக்கு வருகிறது. இருக்கட்டுமே. இன்னொரு சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டால் போயிற்று. இந்த உயிர்த்தண்ணீரை நின்று பருகவும், நெகிழ்ந்து மறுகவும் இலக்கியந் தேடிகளுக்கு இந்த அறிமுகம் போதும்.

—

**உயிர்த் தண்ணீர்** (சிறுகதைத் தொகுப்பு), கண்மணி குணசேகரன் தாமரைச்செல்வி பதிப்பகம், 31 / 48, இராணி அண்ணா நகர், சென்னை–600 078. விலை ரூ. 35 /–

(இதன் முக்கிய பகுதி தினமணி- 8–1–1998இல் வந்தது. நன்றி.) ●

படிப்பகம்

www.padippakam.com



24ஆம் பக்கத் தொடர்ச்சி—

## இருத்தல்

கொள்ள பார்ப்பனர்களைப் போலவே புரிநூலும் போட்டுக் கொண்டுவிட்டனர்.

இந்தியா முழுமையிலும், அறிவார்ந்த பார்ப்பன இருத்தலைக் காட்சிப்படுத்துவதை வேள்வியாக நடத்திக் கொண்டிருப்பவர்கள் தென்னகத்துப் பார்ப்பனர்கள். தங்களை சமூகத்தின் உச்சிக் குடுமியாகத் தக்கவைத்துக் கொள்வதற்கு என்ன விலை கொடுக்கவும் தயங்கியதில்லை. இதன் சார்பாகவே வடநாட்டுப் பிராமணர்கள் இவர்களை 'திராவிட பிராமணர்கள்' என்று, அதாவது தமிழர்களோடு அதிகம் கலப்புற்றவர்கள் என்னும் பொருளில் குறிப்பிடுகின்றனர். அதை ஏற்கும் விதத்திலேயே காஞ்சி ஆச்சாரியரும் "தமிழ் நமது தாய்மொழி. சமஸ்கிருதம் நமது தந்தை மொழி," என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பார்ப்பனர்கள் சங்ககாலம் முதற்கொண்டே செல்வமும் செல்வாக்குமுள்ள இடங்களிலெல்லாம் தோழர்களாகவும் ஆலோசகர்களாகவும் நுழைந்து, ஆளும் வர்க்கத்தின் நிழலான காரியங்கள் யாவிலும் கைகொடுத்து, கோவில்களைத் தங்கள் ஆளுகைக்குள் கொண்டுவந்தவர்கள். பூசைத் தொழிலை யாரிடமிருந்து பறித்தார்களோ அவர்களை சமூக வட்டத்திற்கு வெளியே தூக்கியெறிந்ததோடு, 'பறையர்' என்னும் சாதிப் பெயரை உலகத்தின் ஒட்டுமொத்த இழிவின் உருவமாக்கி, சாதிகளின் அடி எல்லையாகத் தீண்டாமையைக் கற்பித்தவர்கள். பார்ப்பனர்களின் ஏற்றம் என்பது சமஸ்கிருத மயமாக்கலின் வெற்றி. இதைப் புரிந்துகொள்கிறவர்கள் பறையர்களின் வீழ்ச்சி என்பது தமிழியலின் வீழ்ச்சி எனக் கவனம் கொள்கிறார்களா? சந்தேகமாயிருக்கிறது. இந்த வீழ்ச்சிக்குத் தன்னிச்சையாய்த் துணை செய்தவர்கள் மருத நிலத் தலைமக்கள்.

பார்ப்பனர் தங்கள் அரண்மனை செல்வாக்கைப் பயன்படுத்தி, அறவோரைப் பறையர்களாகக் கீழிறக்கிவிட்டு, ஆலயங்களைக் கைப்பற்றித் தங்களை அந்தணர்களாக அமர்த்திக்கொண்டதோடு, தமிழ்ச் சமூகத்தின் கருத்தியல் தலைமையையும் தாங்களே ஏற்றுக்கொண்டுவிட்டனர். இது, தன்னாக்கமுள்ள வேளாளர்கள் இருப்பில் விழுந்த மரண அடி. இந்தப் பின்னடைவிலிருந்து மீள்வதற்கும், குறைந்தபட்சம் தங்கள் தன்மதிப்பைக் காத்துக் கொள்ளவும், பார்ப்பனர்களுக்குத் தாங்கள் எவ்விதத்திலும் இளைத்தவர்கள் அல்லர் என்று காட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே, பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள எந்தத் திசைவழியைப் பின்பற்றினார்களோ, அதே வழியை அதனினும் கூடுதலான வேகத்துடன் பின்பற்றத் தொடங்கினர். பருந்தோடு மயிலானது பாம்பைப் பிடிக்கப் போராடுவது போலப் பார்ப்பனர்களோடு வேளாளர்கள் மதத்தைப் பரப்ப போட்டியிட்டனர். மதத்தைப் பரப்ப பார்ப்பன மடங்கள் நிறுவப்பட்டதுபோல் வேளாளர்களும் சைவ மடங்களை நிறுவினர். ஆனால் சமஸ்கிருதக் கருத்தாக்கத்தைப் பரப்பி வரும் ஒரு காஞ்சி மடத்துக்கு இணையாக இவர்களின் எந்த ஒரு சைவ மடமும் அல்லது எல்லா மடங்களும் சேர்ந்தேகூடத் தமிழ்க் கருத்தாக்கத்தைப் பரப்பிவிட முடியவில்லை என்பது இவர்களின் முதல் தோல்வி. 'செம்புலப் பெயலநீராய்'ப் பேணப்பட்ட மூலத் தமிழியலைப் புறநடைப்படுத்த வந்தவைதான் மதமும் மடமும் என்ற அடிப்படை அறிவு கலைந்து போனதோடு, மதம் பிடித்த பின்னர் எல்லாத் தமிழர்களையுமே சைவர்களாகப் பட்டை தீட்டிவிட முடியாது என்பது இதிலுள்ள அடிப்படை பின்னடைவு. ஆனால் இவர்களைப் பொறுத்தவரை இரண்டு பிரிவுகள்தாம் உண்டு. ஒன்று சைவம். அல்லலயேல் அசைவம். இந்தப் பிரிவினையே தமிழுக்குப் புறம்பான, முற்றும் பார்ப்பனப் பண்பிலான ஒற்றைத்துவம். உண்மையைச் சொல்வதானால் பார்ப்பனியம் என்ற சொல்லாக்கம் புரிதலை எளிமைப் படுத்துவதற்காக பார்ப்பனப் பெயரேற்றதே தவிர, ஆதிக்க வெள்ளாளக் கருத்தியலுக்கு ஒன்றும் அறிமுகமற்றதல்ல.

தமிழிலும் தமிழ் வாழ்விலும் பார்ப்பனியத் தாக்கத்துக்கு முன் வரை இருமைகளும் இருமை எதிர்வுகளும் சரியான அளவெல்லையில் பேணப்பட்டு, மனிதர்களிடையே உடன்வாழ்வை இயல்புப் படுத்தியது. அகம் - புறம், ஆண் – பெண் என்பன இருமைகள். அகம் ஒரு நிலை எனில், புறம் இன்னொரு நிலை. இரண்டு நிலைகளிலும் ஏற்றத் தாழ்வு நுழைவதில்லை. ஆண் ஒரு வகை எனில், பெண் இன்னொரு வகைதானே தவிர எதிர்வகையல்ல. நன்மை - தீமை, விருப்பு – வெறுப்பு ஆகியன எதிர்வுப் பண்புள்ள இருமைகள். இரண்டும் தனித்தனிப் பண்புகள். ஒன்று மற்றொன்றுக்கு எதிரான பொருள் கொள்கிறது. ஆனால் பார்ப்பனியக் கருத்தாக்கத்தில் இவ் அளவெல்லைகள் வரன்முறையின்றிக் கலைக்கப்பட்டன. பார்ப்பனத் தற்சார்புக் கேற்ப ஒவ்வொன்றிலும் முரண் தீட்டப்பட்டது. முரணோடான உடன் இருப்பைச் சாத்தியமற்றதாக்கியது. சான்றாக, நாகரிகம் என்றொரு சொல் அதன் எதிர்வு அநாகரிகம். இதில் எதை அவர்கள் நாகரிகம் என்று ஏற்றுக் கொண்டார்களோ, அதற்குப் புறம்பானதெல்லாம் அநாகரிகம் என்றாகிறது. இவர்கள் 'சுத்தம்' என்று எதைக் கொள்கி

படிப்பகம்

www.padippakam.com



றார்களோ, அதற்குப் புறம்பானதெல்லாம் 'அசுத்தம்' என்றாகிறது. இவர்கள் நிர்ணயித்துவிட்டால் அதற்கு மாற்றுக் கருத்தே கிடையாது என்பது இதன் உள்ளடக்கம். அதாவது, இவர்கள் தங்கள் கருத்தை உலகளாவிய — பிரபஞ்சக் கருத்தாக ஒற்றைப் பரிமாணப் படுத்துகின்றனர். 'முரண் சகியாமை' அதன் மூலப் பண்பு. ('ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே சட்டம், ஒரே கலாச்சாரம்' என்னும் ஒற்றைத்துவக் கோட்பாடு இப்படித்தான் பிறக்கிறது.) இவர்கள் கருத்தில் 'நல்லவன்' என்பதற்கு எதிர்வு 'தீயவன்' — அவன் அழிக்கப்பட வேண்டியவன்.

இவர்கள் வேள்வியில் நம்பிக்கை கொண்டவர்களாயிற்றே. அழித்தல், தீயிட்டுப் பொசுக்கல் இவர்களுக்குப் பிடித்த செயல். பிராணிகளைக் கொன்று புசிக்கும் மக்களை உயிர்க் கருணையில்லாதவர்கள் என எள்ளி நகைக்கும் இவர்கள்– தேவர்கள் அசுரர்களை வெட்டிச் சாய்த்த கதையைச் சொல்லிச் சொல்லி புளகாங்கிதம் அடைகிறவர்கள். தேவர்கள் முரணியவர்களை வேரோடு பொசுக்கும் கொலைகாரர்கள்தானே தவிர அசுரர்களை மனமாற்றம் செய்யும் அருளாளர்கள் அல்லர். திராவிட பாரம்பரியத்தில் வந்து, இன்று வாக்குப் பொறுக்கி அரசியலில் கொடிகட்டிப் பறக்கும் திராவிடக் கொழுந்துகள், "நாங்கள் பார்ப்பன விரோதிகள் அல்லர்; பார்ப்பனிய எதிர்ப்பாளர்கள்தாம்" என்று சொல்லி, குறைந்த பட்சம் இதிலாவது தாங்கள் இன்னும் தமிழ்க் கருத்தியலைத் தக்கவைத்துக் கொண்டிருப்பவர்கள் எனக் காட்டிக் கொள்கிறார்களே— அதனால்தான் தமிழர்கள் இன்னமும் அந்த வெற்றுத் தகரங்களை மன்னித்துக் கொண்டிருக்கிறாரகள் போலும்.

தமிழியலின் மூலச் சிந்தனையாளர்களாக முளைத்து வளர்ந்த வேளாளர்கள், பார்ப்பனர்களுடனான போராட்டத்தில் பார்ப்பனக் கருத்தாக்கத்தையே 'போலி' செய்கிறவர்களாகவும், சமஸ்கிருத சாரத்தின் மொழிமாற்றிகளாகவும் மாறிப்போனது ஒரு அருவருப்பான வீழ்ச்சிதான். இந்த வீழ்ச்சியின் வித்து வேளாளர் என்னும் தொழிற் பெயரை வெறும் குழுப்பெயராக, அதாவது சாதிப் பெயராக— பிள்ளை, முதலி, உடையார், கவுண்டர், அகமுடையார் என்று பல்கிய ஆதிக்க சாதிகளின் கூட்டுப் பெயராக வளர்சிதை மாற்றம் செய்த போதே நடப்பட்டுவிட்டது. வீழ்ச்சியின் சாரம் வாழ்வின் அடியோட்டமாக மதத்தை முதன்மைப்படுத்தியது.

'தென்னாடுடைய சிவனே போற்றி' என்பதை ஆதாரம் காட்டி, சிவன் தமிழரின் மூல நாயகன் என்று நிறுவி மகிழலாம்தான். ஆனால் சிவன் பற்றிய எல்லா புராணங்களும், சித்தாந்தங்களும், சச்சிதானந்தங்களும் சமஸ்கிருதத்திலிருந்தே தோண்டியெடுக்கப்

படிப்பகம்

படுகின்றன. ஒவ்வொரு தெய்வமும் அதன் பெண்டாட்டி பிள்ளை குட்டிகளோடு, உற்றம் சுற்றம் சூழப் பல்கிப் பெருகிய பன்றிப் பண்ணையாக, சமஸ்கிருத வேத மந்திரங்களால்தான் பராமரிக்கப் படுகிறது.

மனிதர்களில் 99.999 சதவீதம் பேர் வெறும் பேசத்தெரிந்த விலங்குகள்தாம் என்பதை வெகு துல்லியமாகத் தெரிந்து வைத்திருப்பவர்கள் பிராமணர்கள். விலங்குகளுக்குக் கனவுகள் கிடையா! (குறைந்தபட்சம் அவற்றைச் சொல்ல மொழி கிடையாது என்பதால்.) மனிதர்களுக்கு கனவும் உண்டு; மனமும் உண்டு. முடிவற்ற மனவெளி எங்கனும் சுற்றிச் சுழன்றுவரும் கனவு வடிவங்களை ஆசைத் தெய்வங்களாகப் படைத்தளித்த அற்புதமான கற்பனை வளத்தை பிராமணர்கள் எங்கு பெற்றார்கள், எப்படிக் கற்றார்கள் என்று நாம் வியந்து நின்றால், "அது எங்கள் கடவுளர்கள் தந்த வரம்" என்று நம் தலையிலேயே கைவைத்துவிடுகிற சாமர்த்தியசாலிகள். உலகத்தில் இயற்கையின் லீலா விநோதங்கள் நம்மை முடிவற்ற வியப்பில் ஆழ்த்துவது போலவே, இந்த பிராமணர்கள் பண்ணி வைத்துள்ள பிரம்மாண்டமான சமூகச் சிலந்தி வலையும் வியக்க வைக்கிறது. 'இது வியக்கக்கூடிய விஷயமா?' என்று அருவருப்பும் கொள்ள வைக்கிறது.

மதம் தெய்வம் பற்றிய கற்பிதங்களில், ஆதிக்க சக்தியாய் வளர்ந்த வேளாளன் என்னதான் குட்டிக்கரணம் போட்டாலும் பார்ப்பானைப் 'போலி' செய்கிறவனாகவும் கழுகைப் பிடிக்கப் பறக்கும் சிட்டுக் குருவியாகவுந்தான் இருக்கக் கூடும். காரணம் அவன் மூலத்தில் கட்டமைக்கப்பட்ட விதம் அப்படி.

'உன்னுடைய தாய் யாரோ. என்னுடைய தாய் யாரோ. உன் தந்தைக்கும் என் தந்தைக்கும் என்ன உறவோ. ஆயினும் நாம் இணைந்துவிட்டோம். நம் அன்புடை நெஞ்சங்கள் செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் போலக் கலந்துவிட்டன' என்று சொல்லி இயல்பாய்ப் பொருந்தியிருந்த ஒரு நாகரிக சமூகத்தின் அங்கத்தினனாய் இருந்தவனை மதம் என்ன கேவலமாய் கீழே தள்ளி மிதித்துவிட்டது! இங்கே இன்னொரு உண்மையையும் சொல்லியாக வேண்டும். மதமென்னும் மாரீச மானைத் துரத்தி சொர்க்கம் புகுவதற்கென்றே பிராமணர்களுக்கு நிகராக சமஸ்கிருதத்தைத் துறைபோகக் கற்றவர்கள் நமது பிள்ளைகளும் முதலிகளும்தான். சைவ மடங்களின் தம்பிரான்கள் அனைவரும் 'ஸ்ரீலஸ்ரீ...'க்களால் போற்றி செய்யப்படுகிறவர்கள்தாம். வேளாளப் பேச்சுமொழியும் பார்ப்பன மொழிக்கு நெருக்கமாகப் போலி செய்யப்பட்டதுதான்.

www.padippakam.com


நிறத்தாலும் இயல்பாலும் முற்றும் வேறுபட்ட இரு இனங்களின் சங்கமத்தால் விளைந்த நிறமாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது வர்ணாசிரம நெறி. தென்னகத்தில் நிலவியல் பகுப்பாக ஐவகை நிலமும் மாந்தருமாய் அறியப்பட்டவர்களை வர்ணாசிரமப் போலியாய் அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் என்று தமிழ்ப் படுத்தியவர்கள் வேளாளர்கள். இதில் உடலுழைப்புச் செய்கிறவர்கள் அனைவரையும் வேளாளர்களாகப் பகுத்துள்ள தொன்றுதான் உருப்படியான காரியம். இந்த உழைக்கும் தொழில் முறை வேளாளர்களின் நிலங்களை அடமானம் பிடித்து வளைத்துப் போட்டு ஒட்டாண்டிகளாக்கி, அந்த ஒட்டாண்டிகளை அமர்த்தியே பயிர் செய்து அறுவடை காணும் பெருநிலக் கிழார்களாகி, நகத்தில் அழுக்குப் படாமல் உட்கார்ந்து நாட்டாமை செய்கிறவர்கள்தாம் அவர்கள்.

உறவென்று சொல்லிக்கொள்ள நமக்கு ஒருத்தரும் இல்லை என்றாலும், உற்றவராய் வந்து ஒரு யோசனை சொன்னார் அந்த முதலியார். அது நடந்தது எனக்கு 15 வயது ஆனபோது.

''கொடுத்த கடனைக் கேட்க மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொண்டு கடன் கொடு'' என்றார்.

''நான் உருப்படற மாதிரி சொல்லுங்க மாமா,'' என்றேன்.

''உருப்படத்தான் தம்பி வழி சொல்றேன். ஒங்கிட்ட கடன் வாங்கினவன் கதறிக்கிட்டு ஓடிவந்து திருப்பிக் கொடுக்கணும். அப்படிக் கடன் கொடு.''

''புரியலீங்க மாமா.''

''தம்பி, கடன் கேட்டு வர்றவன் நெலத்தை ஒத்தி வைக்கச் சொல்லு. ஒன்னுக்கு ரெண்டா எழுதி வாங்கிடு. திருப்பிக் கொடுத்தா வட்டியை வரவுல வை. கொடுக்காட்டி அவன் நிலத்தையே வரவு வை. அப்புறம் கொடுத்த கடனை எதுக்கு கேட்க?''

உடைமை எப்படி சேராமல் போகும்?

வடக்கே, வர்ணாசிரமப் படிநிலையில் மிச்சமாய் ஒதுங்கியவர்களும் ஒதுக்கப்பட்டவர்களும் பஞ்சமர்கள் என்னும் ஐந்தாம் பிரிவினர் ஆயினர். அவர்களில் தொடக் கூடியவர்கள், தொடக்கூடாதவர்களென உட்பிரிவும் வைத்திருந்தனர். இந்த ஏற்பாட்டையும் கூட மொழி மாற்றியவர்கள் வேளாளர்கள். வேளாளர்களை மீறி வேதத் தமிழ் ஏது? முதலாளிகளைவிட அவர்களின் சேவகர்கள் குரூரமாய் இருப்பது போல, நிலத்தளவில் இவர்கள் முதலாளிகளாயினும் மதத்தளவில் பார்ப்பனர்களின் சேவகர்களாகவே வீரியம் பெற்றுத் தங்களின் தலைப்பிரிவினரான பறையரையே (அடுத்து

படிப்பகம்

www.padippakam.com


நிலம் பறிக்கப்பட்டவர்களாய்ப் பள்ளர்களையும்) தீண்டத்தகாதவர் களாக விலக்கி வைத்தனர். (வேற்று மொழியினர் ஆதிக்கத்தால் தீண்டத்தகாதார் பட்டியலுக்குக் கிடைத்த கூடுதல் பெயர் சக்கிலி யர்.) எவ்வளவுதான் சிறுமைப்பட்டாலும் கடைசிவரை பிராமணர் களின் பின்னொட்டாக இருப்பதையே பெருமையாகக் கருதிய வையாபுரிப்பிள்ளை தன் அகராதியில் பார்ப்பானோடு சேர்த்துப் பறையனும் தமிழன் இல்லை என்று தீண்டாமையின் கடைசி எல் லையாக இன ஒதுக்கமே செய்துவிட்டார்.

மலைகளிலும் காடுகளிலுமாக சமூகத்தின் மையக் குழுக்களிலி ருந்து அடிநாளிலேயே ஒதுங்கிப் போன மலைவாழ் மக்களும் பழங் குடிகளும் தங்கள் தனிமையாலும் தொல்பழங் கூறுகளாலும் புறக்கணிக்கப்பட்டவர்கள்தாமே தவிர தீண்டாமை ஒரு சமூக அங்கீகாரமாய் அவர்கள் மேல் கட்டமைக்கப்படவில்லை. தீண்டத் தகாதவர்களாகக் கட்டமைக்கப்பட்டவர்கள் யாவரும் மருதநில மக் களே; நிலம் சார்ந்த பணியாளர்களே. சமூக மாற்றங்களும் நாக ரிக கூறுகளும் எங்கே தடம் பதிக்கின்றனவோ அங்கேதான், 'பழையன கழிதலும் புதியன புகுதலுமான' கால மாற்றம் அவர் களைத் தொட்டுவிடாமல் வெகு எச்சரிக்கையாகப் பல நூற்றாண் டுக்காலம் ஒதுக்கி வைக்கப்பட்டுக் கண்காணிக்கப்படுகிறார்கள். இந்தச் செயற்கையான பிரிவினைக் கண்காணிப்பு ஒன்றுதான் ஆதிக்க சாதியினருக்கும் அடிநிலை சாதியினருக்குமிடையே உடல் ரீதியாகவும் மன ரீதியாகவுமான இடைவெளி.

'இவன் ஒரு தாழ்த்தப்பட்டவன்' என்று அறிவதற்கான அடை யாளமாகத்தான் அவர்களுக்கு நிறைய 'கூடாதுகள்' (புதிது உடுத்தக்கூடாது, சட்டை போடக்கூடாது, எண்ணெயிட்டுத் தலை வாரக்கூடாது, செருப்பு அணியக்கூடாது, பூ வைக்கக் கூடாது, பொட்டு வைக்கக்கூடாது...) போதிக்கப்பட்டன. ஒரு தாழ்த்தப் பட்டவர் தன் ஊரைவிட்டு, தன்னை அறியாத வேற்றிடம் சென்று, தனக்கு எச்சரிக்கப்பட்ட 'கூடாது'களைத் துடைத்தெறிந்துவிட்டு நிமிர்ந்து நடந்தால் ஒருத்தரும் அவரை சந்தேகிக்க முடியாது. காரணம் அவர் அந்நியர் இல்லை என்பதுதான். (இதன் காரண மாக அழிக்க முடியாத தடயங்களை உண்டாக்க எண்ணி தலித் துகள் பச்சை குத்திக்கொள்ள கட்டாயப் படுத்தப்பட்டதாகச் சொல்வதுண்டு.)

தாழ்த்தப்பட்டவர்கள் மீது ஆதிக்கம் சார்ந்த பாலியல் வன் முறைக் கலப்புகள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட சமூக மீறலாகவே நடந்து வருகின்றன. இந்த மீறல்கள் இலக்கிய மதிப்பும் பெற்றுள் ளன. வள்ளுவரின் பெற்றோர்கள் 'ஆதி - பகவன்' கதை அப்படிப்

படிப்பகம்

www.padippakam.com


பட்ட ஒன்றுதான். பகவன் என்ற பார்ப்பனன் ஆதி என்ற அழகுப் பறைச்சியை சேர்த்துக் கொண்டு, பிறக்கின்ற குழந்தைகளை அங்கங்கே விட்டுச் சென்றதாகக் கதை. இதே போன்றதொரு கதை வடமொழிக் கவிஞன் வரருசி பற்றியும் சொல்லப்படுகிறது. பார்ப்பனக் கருத்தியலில் ஆண் உயர்ந்தவன். பெண் தாழ்ந்தவள். மனித உடலில் இடுப்புக்கு மேல் சுத்தமானது. இடுப்புக்குக் கீழ் அசுத்தமானது. உடலின் வலது பாகம் சிறந்தது. இடது பாகம் இழிந்தது. ஆனானப்பட்ட ஆதிபராசக்தியாகிய பார்வதியே ஆனாலும் —அவள் பெண் என்ற தாழ்ச்சியால், அந்தப் பரமசிவன் என்ற பாம்பாட்டி தன் இழிந்த இடது பாகத்தில்தான் அவளை ஒட்ட வைத்துக் கொண்டான். நம் வேத வித்துகளோ "ஆண்–பெண் பேதமில்லேன்னு காட்டத்தான் அந்த சர்வேஸ்வரனே அர்த்த நாரீஸ்வரரா காட்சி தர்றார்'' என்பர். பார்ப்பன தர்மம் ஈஸ்வரனையும் விட்டு வைத்ததில்லை.

மேல் குலத்து ஆண் கீழ்க் குலத்துப் பெண்ணைச் சேரலாம். ஆனால் கீழ்க் குலத்து ஆண் மேல் குலத்துப் பெண்ணை? மூச்... மாபாவம். எழுத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட இலக்கணமும்தான் இதுவே தவிர, நாட்டார் பாடல்களும், நாடோடி கதைகளும், வழக்கு மொழிகளும் இவ்வகை நடப்புகளை அதற்கான சமூகத்தண்டனைகளோடு சேர்த்தே வழங்குகின்றன. நான் சென்னைக்கு வந்த புதிதில் சந்தித்த பால்காரர் ஒருவர் —அதிகாலை 4½ - 6க்குள் அக்ரஹாரத்தில் பால் வழங்குபவர்— "நமக்கு இங்கே ஏழெட்டுப் பசங்க உண்டு சார்'', என்று மிதப்பாகச் சொன்னார். அருகிலிருந்த என் ஓவிய நண்பர் என் காதுக்குள், "ஆனா இவரு ஊட்ல ரெண்டு ஐயராத்துப் பசங்க வளருது. எடச்சி பாப்பாத்திகணக்கா சேப்பா, அழகா, நிகுநிகுன்னு இருப்பாங்க,'' என்றார். ஆண், பெண்ணை ஏமாற்றுவது ஒரு சாகசமாகவும், பெண், ஆணை ஏமாற்றுவது ஒரு ரகசிய சந்தோஷம் தரும் பழி வாங்கலாகவும் சமூக ஒழுங்குகள் எப்போதும் கேள்விக்குள்ளாகித்தான் வருகின்றன. சொல்லப்போனால் 'ஏமாற்றுதல்' என்பதுகூட ஒழுக்கவாதத்தின் ஒரு அற்ப வெளிப்பாடுதான். வாழ்க்கைப் பாய்ச்சல் இந்தக் கரைகளையெல்லாம் கடந்து போய்க் கொண்டுதான் இருக்கும் போல.

ஆயிரமே ஒடுக்குமுறைகளையும் தள்ளிவைப்புகளையும் அரங்கேற்றினாலும், தாழ்த்தப்பட்டவர்களை வேத சம்மதத்தோடு இழிவுபடுத்தினால்தான் அது முறைப்படுத்தப்பட்ட சமூக நீதியாகும் என்பது நம் ஆதிக்க வேளாளர்களின் சித்தாந்தமாயிருக்க வேண்டும். அதற்கும் ஒரு அசலான வழி கிடைக்கவே செய்தது. அதுதான் பறையர்கள் மாட்டுக்கறி உண்ணும் வழக்கம். வட

படிப்பகம்

www.padippakam.com


மொழி வேதப்படி பசுவைக் கொல்வது தாயைக் கொல்வதைவிடவும் மாபாதகச் செயல். அந்தப் பாவத்தோடு அதை உண்ணும் இழிவையும் புரிகிறார்கள் பறையர்கள். ஆகவே, வேத சாட்சியாக அவர்களுக்கு ஏழேழு ஜென்மத்திற்கும் மீட்சியே கிடையாது என்பதோடு மீண்டும் மீண்டும் பாவிகளாகவே பிறக்கக் கடவர் என்பதைத் தமிழ் வேதங்களில் ஏற்றி நிம்மதியடைகிறார்கள். இந்தக் காலத்து கட்சிமாறி மாதிரி, அந்தக் காலத்து மதம் மாறியான அப்பர் பெருமான் தம் பாடலில, ''அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்'' என்று ரொம்ப விஸ்தாரமாகப் பறையர்களை இகழ்கிறார். 'மேல்' சாதியினரில் பீத்தின்னும் பன்றியைத் தின்கிறவர்களும் உண்டு. ('நாங்கள் முட்டைகோஸ் தின்று வளரும் வெள்ளைப் பன்றியைத்தான் தின்பது வழக்கம் என்று பெருமை பேசிக் கொள்கிறவர்களும் உண்டு. வெள்ளைப் பன்றி தின்றால் வெள்ளைக்காரனுக்குச் சமம் என்பது போல.) உயிர்க் கருணை பார்ப்பதெனில், எதைக் கொன்று தின்பதும் மீட்சியற்ற பாவம் என்றால் சரி. ஆனால் அப்படியில்லை. மாட்டைத் தின்பதுதான் மாபாதகச் செயல். பார்ப்பன வேத வாக்காயிற்றே. தப்ப வழியுண்டா, என்ன. நம் அண்மைக்கால உயிர்க்கருணை வள்ளல் ராமலிங்க அடிகளாரும், ''உயிர்க் கொலையும் புலைப் பொசிப்பும் உடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர் அவர் புறவினத்தார்,'' என்று அடித்துச் சொல்கிறார். 'புலைப் பொசிப்பு' என்பது மாடு தின்பது. அதைச் செய்கிறவர்கள் புறவினத்தார் என்று சட்டமே செய்துவிடுகிறார். 'மகாகவி பாரதி' என்கிறவன் ''ஈனப் பறையர்கள்'' என்கிறான். கோபால கிருஷ்ணபாரதி தன் நந்தன் சரித்திரத்தில் ''மாடு தின்னும் புலையா— உனக்கு மார்கழித் திருநாளோ?'' என்று ஐயன் கேட்பதாகப் பாடுகிறார். உலகத்தின் உத்தம குணங்களையெல்லாம் ஒரு சேரக் கொண்டவனாகவே இருக்கட்டுமே, அவன் மாடு தின்கிறவன் என்றால் மீட்சியற்ற தீட்டுப் பிறவியாகிவிடுகிறான். இப்படியாக பார்ப்பன வேதம் சொல்லும் தீட்டுக்கான நற்சான்றிதழைப் பறையர்களுக்குப் பெற்றுத் தந்துவிட்டார்கள்.

அண்மையில் சக்கிலியர் மாடு தின்னும் கதையை நண்பர் வேல்சாமி சொல்லக் கேட்டேன். அரச குமாரர்களில் மூத்தவன் மாட்டுக்கறியுண்ண ஆசைப்பட்டுவிட்டதால் அவன் தீண்டத்தகாதவனாக்கப்பட்டானாம். இப்போதும் படையிலிடும் காலங்களில் மூத்தவனுக்கு ஒரு படையல் இலை போட்டு மரியாதை செய்துவிட்டுத்தான் மற்ற சாங்கியங்களைச் செய்வார்களாம் சம்பந்தப்பட்ட தெலுங்கர்கள்.

படிப்பகம்

www.padippakam.com


ஆகவே, மாடு தின்கிறவர் நிரந்தரமாய்த் தீண்டப்படாதவர் என்று தீர்த்தாயிற்று. இதைப் பிரகடனப்படுத்தத்தான் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் "பசுவதைத் தடுப்புச் சட்டத்தைக்" கொண்டு வந்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்களாம் பாரதிய ஜனதா கட்சியினர். மாட்டுக்கறியை ஏற்றுமதி செய்வதையே பெருந் தொழிலாகச் செய்யும் நாடு இங்கிலாந்து. அதுதான் இந்தியாவை 200 ஆண்டுகளுக்கும் மேலாக அடிமைப்படுத்தி வைத்திருந்தது. மாடு தின்பதைப் பாவம் என்று வகுத்தவனெல்லாம் அந்த நாட்டு மக்களுக்குத்தான் தலை வணங்கி 'சலாம்' போட்டுக் கொண்டிருந் தான். அவர்கள் மொழியைத்தான் உலகப் பொது மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறான். (அந்த மொழியில் மாட்டுக்கறி வாசம் அடிக்கவில்லை என்பது விசேஷம்.) இங்கிலாந்து அரசி எலிச பெத் இந்தியாவில் பிறந்திருந்தால் அவர் ஒரு பறைச்சேரியிலோ, சக்கிலியர் குடியிருப்பிலோ சபிக்கப்பட்டுக் கிடந்திருப்பார். அவர் செய்த நல்வினைப் பயன் (மாடு தின்றுதான்) மகாராணியாகப் பிறந்துவிட்டார்.

தமிழ்நாட்டில் சாதிகள் கெட்டிப்பட்டுக் கிடந்தாலும், மூயன் றால் இன்றும் மாறும் தன்மையுடையவைதான் என்று நம்பப்படு கிறது. அதன்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு இணையாக, அல்லது கீழாகத் தாழ்ந்து கிடக்கும் நாய்க்கர்கள், சாணார்கள், மறவர் கள், குறும்பர்கள், ஒட்டர்கள் என்பாரெல்லாம் இத்தனை காலத் தில் தாழ்த்தப்பட்டவர்களாகத் தள்ளப்பட்டிருப்பார்கள். நல்ல வேளை அவர்கள் மாடு தின்பதில்லையாதலால் பிழைத்தார்கள். பொருளற்று, நிலமற்றுப் போன நாய்க்கர்கள் சிலர் இருட்டு நேரத் தில் திருட்டுத்தனமாய் தலித்துகளிடமிருந்து மாட்டுக்கறி வாங்கிச் சமைத்துண்டாலும், அது திருட்டு வேலைதான் என்பதாலும், விடிந்ததும் "ஒன் பறப்புத்தியைக் காட்டிட்டியே" என்னும் ஏச்சுப் பேச்சோடு தங்கள் சாதிப் புத்தியை மீட்டெடுத்து பாவ விமோச னம் பெற்றுக் கொள்வதாலும், அவர்களும் தலித்துகள் ஆவதிலி ருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். (இதை இரத்தின. கரிகாலன் தன் கவிதையில் பதிவு செய்திருப்பதாக நினைவு.)

தீண்டாமையைத் தக்கவைப்பதில் பார்ப்பனர்களை விடவும் ஆதிக்க வெள்ளாளர்களுக்கு அதிகமாகவே பங்குள்ளது. இதற்குத் தான் அடியாள் தர்மம் என்று பெயர். பார்ப்பான் வகுத்த வர்ணா சிரமத்தின் முற்றெல்லை பார்ப்பன மேன்மையைத் தக்கவைத்தல் என்றால், அதன் மொழி மாற்றாக வெள்ளாளன் வகுத்த சாதி தர்மத்தின் அடியெல்லை தீண்டாமையை நிலைப்படுத்துதல் என் பதாகிறது.

படிப்பகம்

www.padippakam.com


தீண்டாமைக்கு இரண்டு பரிமாணங்கள் உண்டு. ஒன்று, உடல் ரீதியான வன்கொடுமைகளை எதிர்கொள்வது. மற்றொன்று உளரீதியான இழிவைச் சுமப்பது. கொடுமைகளை எதிர்கொள்வதென்பது ஓர் உலகளாவிய வக்கிரம். அதிக பட்சமாக மரணத்தில் முடிந்துபோகிற விஷயம்.

ஆனால் இழிவைச் சுமப்பென்பது ஒரு சுரணையுள்ள மனிதனுக்கு சகிக்க முடியாத நெருப்பு. அதற்குத் தீர்வு என்பது இழிவைத் துடைத்தெறிவதுதான். ஒரு தாழ்த்தப்பட்டவனால் முடியக் கூடியது அதிலிருந்து 'தப்பித்தல்'தான். ஓடிப்போன கணவன்மார்களின் பத்தினிகள் விதவை வாழ்வின் சமூகப் புறக்கணிப்புக் கஞ்சி சுமங்கலிகளாகவே காலந்தள்ள முயல்வதுபோல, தீண்டாமை இழிவைச் சகியாத சுரணையுள்ள தலித் இளைஞர்கள் தாம் பிறந்த இடத்தையும் சொந்த பந்தங்களையும் விட்டொழித்து கண்காணாத இடம் சென்று 'பெரிய' சாதிக்காரர்களாகவே வாழ்ந்து, குடும்பம் பெருக்கியிருக்கின்றனர். இதற்கான ஆதாரங்களாகத் தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் வழங்கும் ஏராளமான வாய்மொழிக் கதைகளைத் தொகுக்க முடியும் என ஒரு நண்பர் சொன்னார். ஆதிக்க சாதியினரிடமிருந்து நாம் அறிந்த கதையொன்றில், ஒரு பறையர் இதுபோல இடம் பெயர்ந்து, 'மேல்சாதி'ப் பெண்ணை மணம் புரிந்து, நிறைய குழந்தைகளைப் பெற்று வாழ்ந்து வந்ததாகவும், அந்திமக் காலத்தில் நோய்வாய்ப்பட்டு வெகு நாட்கள் இழுத்துக் கொண்டு கிடந்ததாகவும், ஏதோ மனக்குறைதான் அவரை இப்படிப் படுத்துவதாக எண்ணிய அவர் மனைவி அவரிடம் தன் ஆசையை மனம்விட்டுச் சொல்லுமாறு கேட்க, அவரும் தன் ஆசை மனைவியின் முகம் பார்த்து 'வருவது வரட்டும்' என்று துணிந்தவராய்த் தனக்கு மாட்டுக்கறி தின்ன ஆசையாய் இருப்பதாகச் சொன்னாராம். அந்தப் பெண் பதறிப் போய்த் தன் கணவனின் புலை விருப்பை யாரும் அறிந்துவிடக் கூடாதே என்று அஞ்சி அவன் வாயை இறுக்கிப் பொத்த, அப்படியே மூச்சு அடங்கிப் போனதாம். கதை சொன்னவர் மிகவும் நீக்கு போக்கானவர். பறையரைத் தொடக்கத்தில் 'அவர்' என்று மரியாதை விளியாகச் சொல்லிக்கொண்டு வந்தவர் கடைசியில் சாதி தெரிந்ததும் 'அவன்' என்று ஒற்றை விளியில் முடித்தார் இதுதான் சாதி அரசியல். இதே கதையை ஒரு தலித் சொல்லியிருந்தால் எப்படி முடித்திருப்பார் என்பதுதான் தலித்துகளின் விடுதலைக்கான மூல விஷயமாகிறது.

தமிழையும் தமிழ்ப் போக்கையும் பார்ப்பனர்களிடமிருந்து காப்பதாகப் பேர் பண்ணிக் கொண்டு, பார்ப்பன தர்மம் பரவவே துணை செய்திருக்கின்றனர் நம் ஆத்திக – ஆதிக்க வெள்ளாளர்.

படிப்பகம்

www.padippakam.com


தமிழை முற்ற முழுக்க அதன் இயல்பிலிருந்து விலக்கி, சமஸ்கிருதத்துக்கு ஈடான சமய மொழியாக்கிவிட்டனர். நடைமுறையில் மதம் எப்போதும் ஆதிக்கவாதிகளின் உடைத்தற்கரிய கவசமாகத்தான் விளங்குகிறது. தமிழுக்கு சைவத்தின் பங்களிப்பும் அந்த அளவில்தான். மதம் பிடித்த ஆதிக்கத் தமிழ்ச் சமூகம் 'தீட்டு' என்னும் பார்ப்பனக் கருத்தாக்கத்தைக் கிடைத்தற்கரிய வரமாக ஏற்றுத் தன் சொந்த மக்களிடமே தீண்டாமையாகத் தீட்டிப்பார்த்ததோடு அதன் விஷ வட்டம் மூடிக்கொண்டுவிட்டது.

சேற்றில் இறங்கித் தொழில் செய்து சோற்றுக்கு வழி செய்கிற வேளாளனுக்குத் 'தூய்மை – தீட்டு' என்னும் எதிர்வு நிலைக் கருத்தாக்கம் ஒருபோதும் சொந்தமாயிருக்க முடியாது. அதற்காக அவனுக்குத் தூய்மையாய் இருக்கத் தெரியாது என்பது பொருளல்ல. 'புறந்தூய்மை நீரான் அமையும்' என்பதை முடிந்தால் ஒரு நாளில் மூன்று முறை மெய்பிக்கத் தெரிந்தவன் அவன். அழுக்காய் இருக்கச் சம்மதிக்கிறவனுக்குத்தான் தூய்மையின் அழகு பற்றி அதிகம் தெரியும். அல்லாதவனுக்கு தூய்மை வெறும் அலங்காரமே. அலங்காரம் எப்போதும் ஆதிக்க மனத்தின் அகங்காரமான வெளிப்பாடு.

மனு தர்மம் (அத; 10—சுலோ. 20: 84) இப்படிச் சொல்கிறது:

"சிலர் விவசாயத்தை நல்ல தொழில் என்று நினைக்கிறார்கள். அந்தப் பிழைப்பு பெரியோர்களால் நிந்திக்கப்பட்டதாகும். கலப்பையும் மண்வெட்டியும் பூமா தேவியைப் புண்படுத்தும். பூமியிலுள்ள பலப்பல ஜந்துக்களின் உயிர்களும் பறிக்கப்படுகின்றன."

இந்தப் பூசுர ஞானம் பெற்றெடுத்த குழந்தைதான் தூய்மைக்கு எதிர்வாகத் 'தீட்டு' என்னும் கருத்தாக்கம். பார்ப்பன தர்மத்தால் நிந்திக்கப்பட்ட பயிர்த் தொழிலையே உயிர்த் தொழிலாய் மதிக்கும் வேளாளன் தீட்டின் மேல் மோகங் கொண்டது தன்னை ஆதிக்க சாதியாய் அடையாளங் காட்டத்தான்.

தீண்டத்தகாதவனை ஒருவன் தொட்டுவிட்டால் அவன் தன் தீட்டை நீரால் கழுவிக்கொள்ளலாம். ஆனால் தீண்டத்தகாதவனின் தீட்டைக் கழுவ அந்த நீராலும் முடிவதில்லை. ஏனெனில் அவன் தீட்டாலேயே சமைக்கப்பட்டவன். கற்பில்லாதவளையும் தீண்டத்தகாதவனையும் தூய்மைப் படுத்த தீயினால் மாத்திரமே முடியும். அப்படித்தான் சீதையும் நந்தனும் தூய்மைப்படுத்தப் பட்டனர். தீயில் நீறாகப் பூத்துப் போனவர்களை மீண்டெழுந்து வந்தார்கள் என்று தோற்றப்படுத்துவதுதான் மதத்தின் உச்சபட்ச மோசடிக் கற்பிதம்.

படிப்பகம்

www.padippakam.com


ஒருவேளை பார்ப்பனர் வருகை நிகழாமல் இருந்திருந்தால் தமிழகம் தீட்டுப்படாமலே இருந்திருக்குமோ. யார் கண்டார்? மாறாக இரண்டு மடங்கு தீவிரத்தோடு தீட்டுப்பட்டிருக்கவும் கூடும். ஈழத்தில் பார்ப்பனரும் இல்லை; அவர் ஆதிக்கமும் இல்லை. ஆனால் அங்குள்ள வெள்ளாளர்களின் மத ஈடுபாடும், வழிபாட்டுணர்வும், மெய்யறிவுக்கொவ்வாத தீட்டுப் பிரயோசமும் ஈழப் புலிகளின் நம்பற்கரிய வைராக்கியம் போலவே திகைப்பூட்டக் கூடியவை. ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் போது, அவர்கள் கறுத்த நிறம் காரணமாக 'இவர்கள் அழுக்கான்வர்கள்' என்று முகம் சுளித்துப் பல நாடுகளில் குடியிருக்க இடம் கொடுப்பதில்லையாம். அப்போதெல்லாம், உரையாடல் மூலமும் சிறுசிறு நாடகங்கள் மூலமும் தாங்கள் தூய்மை விரும்பிகள் என்பதை விளங்க வைப்பார்களாம். சாவு வீட்டுக்குச் சென்றால் துவைத்துக் குளிக்காமல் வீடு திரும்புவதில்லை என்றும், ஒவ்வொரு நாளையும் குளித்துத் தொடங்குவதும் ஒவ்வொரு பணியையும் குளித்து முடிப்பதும் வழக்கமென்றும் சொல்லித் தங்கள் தூய்மை நிலையைப் புரிய வைப்பார்களாம். இந்தத் தூய்மை வேட்டலில், தாங்கள் தூய்மையாளர்கள் என்பதை விடவும் தூய்மை சடங்களார்கள் – அதாவது தீட்டு கழிக்கிறவர்கள் என்னும் எல்லையை அவர்கள் தொட்டு நிற்பதை உணரலாம். ஐரோப்பியர்களின் வெள்ளைக் கொழுப்பு கறுப்புரை இளப்பமாகவும் தாழ்ந்த இனமாகவும் கருதவைத்திருக்கலாமே தவிர தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைக்கவில்லை என்பது தெளிவு. காரணம், தீண்டாமை என்னும் கருத்தாக்கம் காலனியாதிக்கங்களையெல்லாம் கண்டு சுவைத்த பின்னும் அவர்களைத் தீட்டுப்படுத்தவில்லை. ஆனால் வெள்ளாளர்களின் தீட்டு மோகம் கறுப்புக்குள் வெறுப்பை வளர்க்கும் அழுக்குத் தீட்டாக வெந்து கொண்டிருக்கிறது. ஈழத்தில், இன்றைய எரிதழலில் தீண்டாமையை அனுசரிக்க அவகாசமில்லாமல் போயிருக்கலாம். ஆனால் புலம் பெயர்ந்து போய் உலகமெங்கனும் பரந்து கிடக்கும் ஈழத்துச் சராசரித் தமிழர்கள் இத்தனை நெருக்கடிகளிலும் கந்தனுக்குக் கரகம் காவடி எடுத்தல், அலகு குத்தி தேர் இழுத்தல் போன்ற அதி தீவிர கலாச்சாரப் பணிகளுக்கும் மேலாகத் தீண்டாமை அனுசரித்தலைத் தெய்வக் கடனாக நேர்ந்து கொண்டுள்ளனர். அவர்களிடையே உள்ள 0.01 % அறிவு ஜீவிகளும் புலம்பெயர்ந்த இடத்தில் தமிழின் இருத்தல் பற்றிக் கவலைப்படுகிறார்களே தவிர, தீட்டின் இழிவைப் பற்றி யோசித்ததாகத் தெரியவில்லை.

இந்தியாவில் உள்ள அரசியல் சார்பற்ற, சூடும் சுரணையும் உள்ள தமிழர்கள் அனைவரும் 'ஈழம் விடியாதா' என்று ஏங்குகிற

படிப்பகம்

www.padippakam.com


வர்கள்தாம். ஆனால், இந்தியச் சராசரித் தமிழனின் இந்த வேண்டுதல், சம்பந்தப்பட்ட ஈழ அமைப்புகளால் எப்போதாவது கவனம் கொள்ளப்பட்டிருக்கிறதா என்ற ஐயமும் இங்கே உண்டு. ஈழப்புலிகள் எப்போதும் ஆட்சியதிகாரம் உள்ளவர்களோடே தொடர்பு கொண்டிருந்தவர்கள். எம்ஜியார் ஏற்பும் கருணாநிதி நிராகரிப்புங்கூட அதன் ஓர் அம்சம்தான். இந்தியத் தமிழ் மக்களின் அன்பும் ஆதரவும் பற்றி அவர்கள் இதுவரை அக்கறை கொள்ளாதவர்கள் என்னும் உண்மை ஒரு திடீர் விழிப்பாய் இங்கே விடிந்திருக்கிறது. இந்தியத் தமிழர்கள் ஈழப் போரை இதுவரை இனப் போராகவே கருதிக் கொண்டிருக்கிறார்கள் – யாழ் நகரிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் முஸ்லீம்கள் துரத்தியடிக்கப் பட்ட போதும். ஆனால் இன்று திடீரென்று அது மதப் போராக மறு பரிசீலனை செய்யப்படுகிறதா? சிவசேனைத் தலைவர் அப்படிப் பார்க்கத் தொடங்கிவிட்டார். காஞ்சி சங்கராச்சாரி இதை பௌத்த மதத்துக்கெதிரான இந்து மதப் போராகப் பார்க்க முடிவெடுப்பார். இந்து முன்னணி, பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ். அனைத்தும் மதத்தை முன்வைத்து அணி திரளலாம். இந்தியாவில் இது தேர்தல் காலம். பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றால் ஈழப் போர் ஒரு இந்து சாம்ராஜ்ய நீட்சிக்கான போராகக் கணிக்கப்பட்டு, ஈழப்போராளிகள் மதப்போராளிகளாக மாலை சூட்டப்படுவார்களா? மதம் எப்படியெல்லாம் கனவு காண்கிறது! இது வெற்றியா, அல்லது வீழ்ச்சியா? இங்கே உள்ள அருணாசலம் என்னும் அமைச்சர், 'தென்மாவட்ட சாதிக் கலவரங்களுக்குப் புலிகள்தான் காரணம்' என்று சொன்னவர், தலித்துகளுக்காக ஒரு துரும்பையும் எடுத்துப் போடாத, தான் சார்ந்த கட்சியின் தலித் அமைச்சராக சுகம் அனுபவித்துக் கொண்டிருப்பவர்; திடீரென்று "ஈழத்தில் சாகிறவர்களுக்கு இங்கெதற்கு பந்த்?" என்று ஒரு அநாகரிகமான குண்டைத் தூக்கிப் போட்டார். இந்த அரசியல் அற்பத்தனத்தை ஈழ வரலாறு அர்த்தப்படுத்தும் எனில், மனிதனாயிருக்கிற சுகம் தமிழனாயிருக்கிறவனுக்கு மறுக்கப்பட வேண்டியதுதான். வேறென்ன? எல்லா அரசியல் நெருக்கடிகளும் தலித்துகளுக்குப் பாதகமான போர்தான் என்பதற்கு இது மேலும் ஒரு சான்று.

இந்திராகாந்தி கொலையின் போது சீக்கியர்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டனர். அந்தத் தாக்குதலிலிருந்து தப்பிக்க சீக்கியர்கள் சிலர் தங்கள் மதச் சின்னங்களை அழித்துக் கொண்டு இந்து நண்பர்கள் வீட்டில் தஞ்சம் புகுந்தனர். முஸ்லிம்கள் குறிவைத்துத் தாக்கப்பட்ட போதும் இதுபோலவே நேர்ந்துள்ளது. இவர்களெல்லாம் தங்கள் மத அடையாளத்தை விட்டொழிப்பது,

படிப்பகம்

www.padippakam.com

கொலைகாரர்களிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளவும் உயிரோடிருந்து தங்கள் மதநெறிகளை மீண்டும் உறுதியாய் பின்பற்றவும்தான். ஆனால், தாழ்த்தப்பட்டவன் தன்மேல் சுமத்தப்பட்ட இழிவிலிருந்து தப்பித்தல் என்பது மீண்டும் அதை அடைவதற்காக அல்ல; நிரந்தரமாக விடுவதற்காகத்தான். தலித்துகள் ஒன்று திரள வாய்ப்பில்லாதபோது, தனி நபர்கள் மேற்கொண்ட 'தப்பித்தல்' அது.

இன்று தலித்துகள் ஒன்று திரள்கிறார்கள். இழிவிலிருந்து தப்பித்தலை விடுதலைப் போராக முன் வைக்கிறார்கள். அவர்களுக்கான சமூக அங்கீகாரத்தை வென்றெடுக்கும் போராட்டத்தில் வரலாறு அவர்களுக்குத் துணை நிற்கும் காலம் இது. மற்றவர்கள் உதவியில்லாமல் அவர்களால் வெல்ல முடியாது என்பதெல்லாம் அவர்களைப் பின்னுக்குத் தள்ளுகிற முயற்சிதான். மற்றவர்கள் தங்களை மனிதர்களாக நிரூபித்துக் கொள்ள காலம் முன்னிறுத்தியுள்ள உரைகல் அவர்கள்.

குறிப்பு:

25 – 1 – 1998ஆம் நாள் சென்னையில் சாதி மோதல்கள் பற்றிய ஒரு கூட்டு விவாதத்தை 'நிறப்பிரிகை' ஏற்பாடு செய்திருந்தது. நூற்றுக்கும் அதிகமான மாற்றுச் சிந்தனையுள்ளவர்கள் கலந்து கொண்டார்கள். விவாதத்தின் போக்கை ஒட்டி, நண்பர் புதுவை சுப்பையா இரண்டு சந்தர்ப்பங்களில் தன் உணர்வைப் பதிவு செய்தார். முதலில், "தலித்துகள் எங்கும் அடிபடுகிறார்கள் என்று அனுதாபப்பட்டார்கள். இப்போது நாங்களும் திருப்பியடிக்கிறோம். இனியும் அடிபட்டுக் கொண்டிருக்க மாட்டோம் என்பதையும் பதிவு செய்ய வேண்டும்," என்றார். பின்னர் பிற்பகலில் "தலித் போராளிகளை கேடிகள், ரௌடிகள் என்று அழைக்கிற வேலை வேண்டாம்... தலித் ஆதரவாளர்கள் செய்யக் கூடிய முதல் வேலை, தங்களைச் சேர்ந்த மக்களிடம் தலித் ஆதரவை உருவாக்குவதுதான்," என்றார். (இரண்டிலும் சொற்கள் நம்முடையவை.) சரியாக வெளிப்பட்ட இந்தக் கறாரான மதிப்பீடு கூட்டு விவாதத்தின் அடிநாதமாக என்ன இழையோடியது என்பதை விளங்கிக் கொள்ள உதவும். கருத்தறிவித்தவர்களில் சிலர் தாங்கள் தலித் அல்லர் என்று சொல்லிக்கொள்வதை ஒரு கவனத்துக்குரிய அம்சமாய்க் கையாண்டதாகத் தெரிந்தது. இதற்கு முன்னர் சில கட்டுரைகளிலும் இதே அம்சம் ஒரு அடையாளச் சிக்கலின் மெல்லிய வெளிப்பாடாக நம் கவனத்தில் உறுத்தியதுண்டு. தலித் மக்களின் இருத்தலையே வரலாறு முழுதும் இழிவு செய்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும் தீண்டாமை என்னும் வன்கொடுமைச்

படிப்பகம்

www.padippakam.com


சிக்கலை மேலைக் கோட்பாட்டுப் போக்கிலானதொரு இனப் பிரச்சினையாகப் பார்க்கும் அறிவுயிரித்தனமும் விவாதத்தில் தொனித்தது. படித்த கூட்டங்களில் இதுபோன்ற மேதா விலாசங்கள் வெளிப்படுவது இயல்புதான் என்றாலும், பிரச்சினைகளை முற்படுத்தும் 'நிறப்பிரிகை'யின் கரிசனமும் இது போன்ற ஒருவழிப் பட்ட மேட்டிமையாக அடையாளப்படுவதாகிறது.

பிற்பகலில் என்னுடைய கருத்தாகச் சொன்னது இது:

"இங்கு நடந்த சொல்லாடல்களிலிருந்து எனக்கொரு சந்தேகம் எழுகிறது. தலித் மக்கள் ஆதிக்கச் சாதியினரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்க்ள் என்று தலித்தியம் பேசுகிறவர்களால் நம்பப்படுகிறதோ என்றொரு சந்தேகம் எழுகிறது. உண்மையில் அவர்கள் இருவரும் இனத்தால் நிறத்தால் மொழியால் வடிவால் ஒரு தாய் மக்கள்தாம் என்னும் உண்மை எத்தனை பேரால் உணரப் படுகிறது என்று தெரியவில்லை. இங்கே சிலர் தங்கள் சாதியைச் சொல்லிக் கொண்டார்கள். 'தலித்தியம் பேசுவதால் எங்கே நம்மை தலித் என்று கருதிவிடுவார்களோ என்னும் முன்னெச்சரிக்கை உணர்வு காரணமாக இருக்கலாம். தலித்தியம், பெண்ணியம், பெரியாரியம் போன்றவற்றை முன்னெடுக்கிறவர்கள் அடிப்படையில் சாதி மறந்தவர்களாக இருக்கவேண்டும். அது இந்த சமூகத்தில் சாத்தியமில்லை என்னும் போது குறைந்த பட்சம் சாதி மறுத்தவர்களாகவாவது இருக்க வேண்டும்."

நாலு திசைகளிலிருந்தும் என் கருத்துக்கு மறுப்புகள் எழுந்தன. எனக்கது ஆச்சரியம்தான். நான் சொன்னதை உள்வாங்கிக் கொள்ளவோ, அதன் தர்க்கவியல் நீட்சியை அனுமானிக்கவோ அவர்கள் அவகாசம் எடுத்துக் கொள்ளத் தயாராயில்லை. கவிதாசரண் பற்றி, அவர் கருதுகோள் பற்றி அவர்களுக்குத் திட்டவட்டமான முன்முடிவுகள் உண்டு. ஆகவே கவிதாசரண் மறுக்கப்பட வேண்டியவர் என்பதாக இருந்தது அவர்கள் வேகம். இரண்டொருவர் கவிதாசரணைப் புரிந்து கொண்டதாகவோ, புரிந்து கொள்வதற்காகவோ சார்புநிலை எடுத்து முயன்று பார்த்தார்கள். ஊகூம். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. அந்த மூடிய வளயத்துக்குள் கவிதாசரண் என்ன முயன்றாலும் நுழைந்துவிட முடியாது என்றே தோன்றியது.

ஒருவர், "என்ன சார், நாங்கள் காலையிலிருந்து பேசிக் கொண்டிருப்பதை ஒரு Sweeping Statement-ல ஒன்னுமில்லன்னு மறுக்குறிங்க," என்று கோபப்பட்டார். என்ன அந்த Sweeping Statement? 'சொன்ன' எனக்கு விளங்கவில்லை. நான் நினைக்கிறேன் ஒரு யூகம்தான்—'ஆதிக்க சாதியினரும் தலித் மக்களும்

படிப்பகம்

www.padippakam.com

ஒருதாய் பிள்ளைகள்' என்று சொன்னதாக இருக்கும். 'ஆகவே அவர்களுக்கிடையே உள்ள பிரச்சினை வெறும் உப்புப் பெறாத விஷயம்' என்று நான் சொல்ல வந்ததாக அதை நீட்டிப் பார்த்திருக்கலாம்.

இன்னொரு நண்பர், நான் என்னவோ பரந்த மனிதாபிமானப் பார்வையில் மனித நேயம் பேசுவதாக அர்த்தப்படுத்திக்கொண்டு என்னை ஓரளவு சகித்துக்கொள்ள முயன்றார். மற்றொருவர் "பிறந்ததிலிருந்து கூடவரும் சாதியை அவ்வளவு சுலபமா விட்டுட சொல்லிட்டீங்களே," என்றார். "அப்போ, நீங்க சாதியை விட மாட்டீங்க. ஆனா தலித்தியம் பேசுவிங்க. 'நான் வெள்ளாளன்; ஆனா நான் தலித்தியவாதின்னு சொன்னா அது யோக்கியமான பேச்சா?" என்று நான் பதிலுக்கு (அந்தக் குழுவைப் பொறுத்த வரை) உளறியதாக நினைவு. இதிலும்கூட எனது பதில் மேலதிகப் புரிதலுக்கான வேண்டுகையில் தொக்கிக் கொண்டது தெரிந்தது. ஒரு நண்பர் நான் சொன்ன 'சாதி மறந்தவர்களாய்' என்பதை 'சாதி மறைத்தவர்களாய்' எனத் திருத்திக்கொண்டு பேசினார். வேறொரு நண்பர், சாதி சொல்வது தலித்துகளிடம் நம்பிக்கையைப் பெறத்தான் என்று விளக்கினார். 'அது களப்பணிக்குச் சரியாயிருக்கலாம்; கருத்தரங்கிலுமா' என்னும் கேள்வி எழத்தான் செய்தது. இவர்கள் போக, இரண்டொரு நண்பர்கள் தமிழ்த் தேசியம் பற்றிக் கவிதாசரணோடு சம்பந்தப்படுத்திச் சொல்ல முற்பட்டனர். சொல்லப்போனால் இதுதான் கவிதாசரண் பற்றிய முன்முடிவுகளுக்கெல்லாம் மூலமாக இருக்கலாம். சங்கராச்சாரியார் சொல்லவில்லையா, "சாதிகள் இருக்கட்டும். நாம் இந்துக்கள். ஆகவே நாம் ஒன்று" என்று. அது மாதிரி கவிதாசரணின் தமிழ்த் தேசியமும், "நாம் எல்லாம் தமிழர்கள்; ஆகவே ஒன்று," என்பதாக இவர்கள் கற்பித்துக் கொண்டிருக்கலாம். "சமஸ்கிருதத்துக்கு ஈடாகத் தமிழை சமயமொழியாக மாற்றி விட்டார்கள் வேளாளர்கள். இந்நிலையில் தமிழை அதன் வேர்த்தன்மையோடு மண்சார்ந்த மொழியாகப் பேணி வருபவர்கள் தலித் மக்கள்தான். ஆகவே தமிழைப்பற்றிப் பேசினால், அது தலித்தைப் பற்றிப் பேசுவதாகும்" என ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் நான் எழுதியும் பேசியும் வருவது மட்டும் இவர்கள் பார்வையில் படாது. படாததற்கும் காரணம் உண்டு. அது என் 'சைவ' உணவுப் பழக்கம் பற்றிய நெட்டையான அவர்களின் கற்பிதம்.

ஒரு சமயம் நிறப்பிரிகை வேல்சாமியிடம் இரண்டொரு பெயர்களைக் குறிப்பிட்டு, "இவர்கள் என்ன சிறப்பு கருதி முதன்மைப் படுத்தப்படுகிறார்கள்" என்று கேட்டேன். "அவங்க நிறைய படிக்கிறாங்க. தண்ணி அடிப்பாங்க. மருந்து சாப்பிடுவாங்க. ஃப்

படிப்பகம்

www.padippakam.com



ரீயா வாழ்வாங்க. ஆனா ஒரு தலைப்பைக் கொடுத்துக் கட்டுரை தயார் பண்ணச் சொன்னா, ரொம்ப அக்கறையா படிச்சு, குறிப் பெடுத்து சிறப்பா பண்ணுவாங்க,'' என்றார். ஒரு விதத்தில் நியாயந்தான். இப்பொழுதெல்லாம் யார் அக்கறையோடு கட்டுரை எழுதுகிறார்கள், அதுவும் ஏகப்பட்ட மேற்கோள்களுடன்— சுய மதிப்பீடுகள் அப்படியொன்றும் மரியாதைக்குரிய விஷயமாயில்லாத போது.

கூட்டத்தில் என் கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இடைமறித்து, ''கவிதாசரண் சொல்வது ஒரே சொதப்ப லாயிருக்கு,'' என்று சொல்லி மறுப்பைத் தொடங்கி வைத்தவர் பா. வளர்மதி என்னும் நண்பர். இளைஞர். ரொம்பப் படிப்பாளி போல் தெரிகிறது. எதைப் பற்றியும் அவருக்கு கருத்து இருக்கிறது.

வளர்மதி தன் கருத்தைப் பதிவு செய்தபோது, அவர் ஒரு முதலியார், அதுவும் ஆற்காடு முதலியார் என்று சொல்லிக் கொண் டார். கேட்க ரொம்ப சந்தோஷமாயிருந்தது. முதலியார்தான் சமூகத்தில் உயர்ந்த ஜாதி. சென்னை போன்ற பெரு நகரங்க ளில் வந்தேறிப் பறையர்கள் அனைவரும் பெரும்பாலும் முதலி யார்கள்தாம். இது எப்படி சாத்தியமாகிறது எனில் அவர்கள் ஒருதாய் மக்களாக இருந்து தொலைப்பதால்தான். முதலிற்றர்கள் வெள்ளையாயிருந்து, பறையர்கள் கறுப்பாயிருந்திருந்தால் இந்த அக்குறும்பு நடக்குமா என்ன. ஆனால் நடக்கிறது. பறையர்கள் ஒன்றும் அற்பசொற்ப சாதிகளைப் போலி செய்கிறவர்களல்லர். ஏனெனில் அவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கரு துவார்கள் போலும். முதலியாரைவிட ஒரு ஒசந்த ஜாதி இருந் தால் அது அவர்களுக்கு உகந்ததாயிருந்திருக்கும். இல்லை என் பதால்தான் இப்படி. இந்த வகையில் பிராமணர்கள்தாம் இன்னும் போலி செய்யப்படவில்லை. ரிஷிமூல, மொழிமூலச் சிக்கல்களால் போலி செய்ய உகந்ததாயில்லை என்பதால் விரும்புவதும் இல்லை. காரணம் அவர்கள் உஞ்சவிருத்தி சாதி. மற்றவர்கள் உழைத்துத் தின்னும் சாதி.

எருதின் மேல் உட்கார்ந்திருக்கும் ஈ தான்தான் அதை ஓட் டிக் கொண்டு போவதாக நினைத்துக் கொள்ளுமாம். ஜெயந்தன் இதை எனக்கு நினைவு கூர்ந்தார். அந்த ஈயின் நிலையில் இன் றைக்கு நிறைய தலித்தியம் பேசும் அறிவாதிக்கதாதிகள் முளைத் திருக்கிறார்கள். செலாவணியாகிற விஷயத்தைக் கைப்பற்றிக் கொள்கிற ஆர்வம்தான்.

தலித் விடுதலையைக் காலம் முன்னெடுத்துள்ளது. அந்தக் காலச் சக்கரத்தின் ஆரக்கால்களாய் வடக்கே பூலே, அம்பேத்கர்,

படிப்பகம்

www.padippakam.com


காந்தியிலிருந்து, தெற்கே அயோத்திதாசர், ரெட்டைமலை, பெரியார் முதல் இன்றைய டாக்டர் கே. கிருஷ்ணசாமி, திருமாவளவன், ஏன் குணாவையும் உள்ளடக்கிப் பட்டியல் நீள்கிறது. ஆரக்காளாய் மாறுவதற்குரிய அர்ப்பணிப்புணர்வு அவ்வளவு எளிதாக வருவதில்லை.

தலித்துகளுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்களே நிர்ணயிக்கட்டும்; அவர்கள் வழியை அவர்களே தேர்ந்தெடுக்கட்டும். அவர்களுக்கான நடத்தை விதிகளையும் வழிகாட்டு நெறிகளையும் வகுக்கும் அறிவாதிக்க வேலையை அடுத்தவர்கள் தவிர்க்கட்டும். அவர்களை முட்டாள்களாக்குவதல்ல அடுத்தவர்கள் வேலை. முடிந்தால்— குதிரைவண்டிக்காரர் தன் சாட்டைக்குச்சியை சக்கரத்தின் ஆரக்கால்களில் ஓடவிட்டு 'கடகடகட...' ஒலியெழுப்புவாரே, 'வண்டி வருகிறது. வழிவிட்டு நகருங்கள்' என்னும் எச்சரிக்கை ஒலியாக —அதைச் செய்துதவலாம். தலித் விடுதலை தாமதமாவதற்குரிய ஒரே காரணம், இன்னமும் சிற்றூர்களில் வாழும் தலித்துகளில் பெரும்பாலோர் 'நாம் அடங்கியிருக்கப் பிறந்தவர்கள். ஆண்டவன் நம் தலையில் எழுதிய விதி' என்று மௌடிகம் காப்பதுதான்.

முடிந்தால் அந்த மௌடிகத்தைத் தகர்க்க நம்மால் ஆனதைச் செய்யலாம். இருந்தால் முற்றுப்பெறுவதில்லை.

★

## 2

கோவை மாநகரம் முகம் சிதைந்து கிடக்கிறது.

செயல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு மூலம் இருக்கும். ஆனால் பல சமயங்களில் மூலம் முக்கியமற்றுப் போகும்படித் திசையற்றுப் போகின்றன செயல்கள். கோவையும் அவ்வாறே குண்டுகளால் குதறப்பட்டுள்ளது.

ஒரு போலீஸ்காரரைச் சிலபேர் கொன்றுவிட்டார்கள். கொன்றவர்கள் முஸ்லீம்கள். முஸ்லீம்களில் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், பொறுக்கிகள், மூடர்கள், திருடர்கள், கயவர்கள், கழிசடைகள் எவரும் இருக்கக்கூடாது என்று போலீஸ்காரர்களும் ஆர். எஸ். எஸ். காரர்களும் உறுதி செய்துவிட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் அனைவரும் இந்துக்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவர்கள் நம்பிக்கை போலும். அதை மெய்ப்பித்துக் காட்டிவிட்டார்கள். முஸ்லீம்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். அவர்களின் வணிக வளாகங்கள் அடித்து நொறுக்கப்பட்டு,

படிப்பகம்

 www.padippakam.com 

சூறையாடப்பட்டு இடித்துத் தீக்கிரையாக்கப்பட்டன. இரத்த காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டவர்கள் தீயிட்டுக் கொளுத்தப் பட்டார்கள். பொருள்களைக் கொள்ளை கொண்டு போக அருந்ததியர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். கோவையின் 'இந்து ஆன்மா', முஸ்லீம்களாய் பிறந்துவிட்ட நாலு கொலைகாரப் பொறுக்கிகள் செய்த குற்றத்துக்காக ஒட்டுமொத்த முஸ்லீம் சமுதாயத்தையே சிதைத்துச் சின்னாபின்னமாக்குவதா என பதைக்கவில்லை. மாறாக, 'வேண்டும் இவர்களுக்கு' என்று வன்மம் கொண்டு திருப்தியுறக் கட்டமைக்கப்பட்டது மதத்தின் பெயரால்.

மதம் எப்போதும் மனிதர்களைத் தொலைத்துவிட்டு எதிரிகளைத்தான் கண்டெடுக்கிறது. இந்த நாசத்துக்காக 'இந்தியன்' யாரும் பெரிதாக வெட்கப்படவில்லை. சாரசரி முஸ்லீம் மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைகளை விழுங்கிக் கொண்டார்கள். 'விழுங்கிக் கொள்ளமாட்டோம்' என்று விடைத்தெழுந்தவர்கள் வேற்று மூளைக்கு விலைபோய்விட்ட கொடுமையாகத்தான் இந்தப் படுபாதகமான குண்டுவெடிப்புகள் கணிக்கப்படுகின்றன. மழைத்தூறல் சிதறினாற்போல் நூற்றுக்கணக்கான இடங்களில் பல்லாயிரக் கணக்கான வெடிகுண்டுகளைத் திட்டமிட்டுத் தெளித்த போதே, தன்னெழுச்சியான முஸ்லீம்களின் கோபம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, வெறும் கூலிக்குக் கொலை செய்கிற தொழில்முறைக் கொலைஞர்களாய், துடைத்தெறியப்பட வேண்டிய நச்சுயிரிகளாய்ச சிறுத்துப் போய்விட்டார்கள். நியாயம் கேட்கிற உரிமையை மனிதன் நோய்க்கிருமிகளுக்கு வழங்குவதில்லை.

கோவை நகரம் ஆர்.எஸ்.எஸ். கோட்டையாக அனுமதித்து விட்டதை, இரண்டு மாதங்களுக்கு முன், மறுபதிப்பு கண்ட பெரியார் நூல்களின் விற்பனைக் குழுவை நாக்கூசும் சாக்கடை சொற்களால் புரட்டியெடுத்து விரட்டியடித்த போதே உறுதிப்பட்டது.

சரி, அரசு என்ன செய்கிறது? ராஜீவ் கொலை வழக்கில் 26 பேருக்கு வழங்கிய தூக்குத்தண்டனையில் உலகம் உறைந்திருக்க, அது ஜெயலலிதா பெறப்போகும் தண்டனைக்கு முன்னுரை என்று மகிழ்ந்திருக்கும் புதிய கலைஞரால் ஆளப்படுகிறது. 'உதய சூரியனுக்கு ஓட்டுப் போடுங்கள்' என்று இந்தி மொழியில் தட்டி எழுதி வைத்து வாக்கு பொறுக்கும் 'புதிய இந்தியர்'களால் புனிதம் பெறுகிறது. 'ஆகஸ்டு 15 துக்க நாள்' என்றார் பெரியார். அல்ல என்று எழுதினார் அண்ணா. அந்த 'திராவிடநாடு' இதழ்களைக் கொளுத்தினார் கலைஞர். 50 ஆண்டுகள்! வரலாறு அழித்தெழுதப் படுகிறது. ●

● இவ்விதழில் வெளிவர வேண்டிய இரு கட்டுரைகள் அடுத்ததில்...

படிப்பகம்

www.padippakam.com



# வார்த்தை பூதம்

ஜீவராம் சுந்தர்

(மூன்றாவது விலா எலும்பும் விழுதுகளற்ற ஆலமரமும்: தேவிபாரதி காலம் பதிப்பகம், 29, ஜீவா தெரு, சிவகிரி-638 109 முதற்பதிப்பு: ஆகஸ்டு 1996, 124 பக்கங்கள், விலை ரூ. 25/-)

தேவிபாரதியின் இத்தொகுப்பு ஒரு கட்டுரையையும், ஒரு நாடகத்தையும், இரண்டு சிறுகதைகளையும் கொண்டது. பின் அட்டை பறை சாற்றுவது போல, தீர்ப்பு முக்கிய சிறுகதை.

சமீப காலத்தில் ஃபேண்டஸி தளத்தில் கதை எழுதுபவர்களில் முக்கியமானவர்கள் என கோணங்கி, ஜெயமோகன், கௌதம சித்தார்த்தன் போன்றவர்களைச் சொல்லலாம். எதார்த்தத்தை முற்றாகத் தவிர்த்த உள் - மனமொழி கோணங்கியினுடையது. வாசிக்கவும் சுவாரஸ்யமானவர்கள் ஜெயமோகனும் கௌதம சித்தார்த்தனும். இவர்களுடன் இப்போது தேவிபாரதியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வெளிப்பாட்டின் தீவிரத் தன்மையால் 'தீர்ப்பு' முக்கியமாகிறது. மொக்கையான யதார்த்தத்தை இரு கதைகளும் புறக்கணிக்கின்றன. முதலில் 'தீர்ப்பு'.

இறுக்கமான மொழியாலும் நெகிழ்ச்சியான உணர்ச்சிகளின் ஊடாகவும் கட்டப்பட்டிருக்கிறது தீர்ப்பு. பலவிதங்களில் காஃப்காவின் தீர்ப்பை நினைவுபடுத்துவதைத் தவிர்க்க இயலவில்லை. மிக லாவகமான மொழி நடையும் ஃபேண்டஸி தன்மையுமான கதைப் போக்கும் நல்ல வாசிப்பனுபவத்தைத் தருகின்றன. மிஸ்டிக்-புதிர்த்தன்மை கதையின் கனத்தைக் கூட்டுகிறது.

"நாங்கள் சல்லாபித்திருந்த ரகசியமான இரவு நேரம் அது. அலறி கூச்சலிட்டான் சேது. பதறி எழுந்து அம்மணமாக ஓடி விளக்கைப் போட்டேன் நான். கடவுளே... என்ன கொடுமை! சேதுவின் கழுத்தைப் பின்னி இறுக்கி உஷ்ஷென வன்மத்துடன் சீறிக் கொத்தத் தயாரானது பாம்பு...... என் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்தது போல பிடியைத் தளர்த்தித் துவண்டது நாகம். சுதாகரித்துத் துள்ளி உதறினான் சேது. சொத்தென என் காலடியில் விழுந்தது மதுவினுடைய ரப்பர் பாம்பு."

புனைவு தருக்கத்தை மீறி வார்த்தைகள் சீறிப் பாய்கின்றன. தனியறையில் அமர்ந்து இக்கதையை வாசிப்பவனை நாலாபுறத்திருந்தும் அவை சுற்றி வளைத்துத் தாக்குகின்றன. வார்த்தைக

படிப்பகம்

www.padippakam.com


ளின் தீவிரம் – சற்றே நீள் வாக்கில் எழுதப்பட்டிருக்கும் இக்கதை முடிந்தவுடன்– வாசகனையும் தொற்றிக் கொள்கிறது.

இந்தக் கதையைக் கட்டுடைத்து, தாக்கலாம். சார்ந்தோ எதிர்த்தோ எல்லாக் கதைகளையும் விமர்சிக்கலாம்தானே. ஆயின், அது விமர்சனமல்ல. கழைக் கூத்தாட்டம்.

சிறுகதையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல இந்த / இது போன்ற எழுத்துக்கள் உதவும் எனச் சொல்கின்ற நேரத்தில், 'தாஸ் என்பவனும், தாஸ் என்பவனும்' சிறுகதை 'போலச்' செய்ய முயன்ற தோல்விக் கதை என்றே தோன்றுகிறது புதிர்த் தன்மையும் தேவதைக் கதைப் பாணியும் கைகூடாத கதை. (அப்படிச் சரியாகக் கைகூடாத கதையைக்கூடத் தன் கவித்துவ நடையால் ஈடு செய்துவிடுவார் கோணங்கி.) வெற்று வார்த்தைக் கூட்டங்கள் தரும் ஆயாசத்தையே இந்தக் கதை ஏற்படுத்துகிறது. சொல்லப்படும் விஷயத்தின் கனம், வியாபாரக் கதைகளையே தூக்கி நிறுத்தக்கூடும்.

சடார் சடாரென்று மாறும் காட்சிப் பிம்பங்கள், நடனம், திரும்பத் திரும்ப உபயோகிக்கப்படும் ஒலிகள், வார்த்தைகள் என இருக்கிறது 'மூன்றாவது விலா எலும்பும், விழுதுகளற்ற ஆலமரமும்' நாடகம். இது பிரதானமாய் நடனத்தையும், உடல் அசைவு மற்றும் ஒலிகளை முதன்மைப் படுத்தும் காட்சி ரூப நாடகம். அதனாலேயே எழுத்துப் பிரதி திருப்தி தராத தோற்றம் ஏற்படுகிறது. நிகழ்த்துதலில் நிச்சயம் பார்வையாளர்களைக் கவரும் என நம்புகிறேன்.

இத்தொகுப்பில் முற்றிலும் தவிர்த்திருக்க வேண்டியது 'வாழ்வு சார்ந்த கலையும், கலை சார்ந்த வாழ்வும்' கட்டுரை. இது சேர்க்கப்பட்டதற்கான காரணம் விளங்கவேயில்லை. மிகக் குறைந்தபட்சம், இது கட்டுரையாகக்கூட இல்லை. இரண்டு மூன்று இடங்களில் முன் தயாரிப்பின்றி பேசப்பட்ட பேச்சுக்களும், அதற்கான எதிர்வினைகளும், எதிர்வினைகளுக்கான பதில்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரையைத் தாண்டி, ஒரு வாசகன், திறந்த மனத்துடன் மற்ற படைப்புகளை அணுகுவதை சாத்தியமற்றதாக்குகிறது, இது ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் விதம்.

இப்புத்தகம் முக்கியமானது. 'பலி' சிறுகதைத் தொகுதியின் மூலம் அறிமுகமான தேவிபாரதி தற்கால எழுத்தாள இளைஞர்களில் வலிமையுள்ள ஒருவராக வெளிவருகிறார். பலவித சலனங்களையும், சர்ச்சைகளையும், பாதிப்புகளையும் ஏற்படுத்த வல்லது இவரது எழுத்து. இதை அவர் தன் வரையில் நேர்மையாக வெளிப்படுத்துகிறார். இதுவே பெரிய விஷயந்தானே ●

படிப்பகம்

www.padippakam.com

அவனது பிரதியாக
நீ இல்லையானால்
உனக்காக ஏங்குவதற்கு காத்திரு

ஆனால் நான்,
எல்லாவற்றிற்கும்
அப்பாற்பட்டுப் போகாமல்
இடைவெளிக்கு காத்திராமல்
இந்தப் பிரபஞ்சத்தை
சீரழிக்கப் போகின்றேன்

**2**

என் நெஞ்சம்
சுருங்கி விரிய
இந்த வெளிக்கும்
எனக்குமேன்
விரக்தி வருகிறது?

எனக்கொரு வேதனை வரட்டும்
என் மனம் கிடந்து
'ஓ' வென அழட்டும்
என்னை மிதிப்பதால்
மகிழ்ச்சிக்குயிர் வரட்டும்

துளிகூட எனக்குத்
துன்பமில்லை
அதற்காகப் பிறந்த
அற்பப் பிறவிநான்
எனக்குள் துடிக்கும்
நாடிதான்
தொல்லையாய் இருக்கிறது

ஆங்காங்கே வெடிக்கும்
குண்டுவொன்றை
வைத்துவிடுங்கள்
அதுவும் அமைதிப்படட்டும்

படிப்பகம்

CREATIVE LITERARY MONTHLY IN TAMIL.    R. Dis. 5479/90
www.padippakam.com

வருகிறது மற்றொரு சிற்றேடு
தமிழ்ப் புத்தாண்டு முதல்

**ஜெயந்தன்**
ஆசிரியர் பொறுப்பேற்கும்

(இரு திங்களிதழ்)

கட்டுரைகள், சிறுகதைகள், விமரிசனங்கள், கவிதைகள், சிறுநாடகங்கள் விரும்பும் வாசகர் முகவரிகள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புக்கு:

ஜெயந்தன்
6, தண்டீஸ்வரம் தலைமைச் சாலை,
வேளச்சேரி, சென்னை-600 042
**தொலைபேசி: 245 28 93**

Printed by Mrs. Kavithasaran at Allwell Press, 31, T.K.S. Nagar, Chennai-600019. Published at 580, T.H. Road, Chennai-600021 & Edited by: Kavithaasaran.

படிப்பகம்